பக்கங்கள்: 16+சூரியகாந்தி-VI=22
Registered as a Newspaper
உதயன்
விலை ரூபா 8.00
www.uthayan.com
சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2035 வைகாசி 10 ஞாயிற்றுக்கிழமை (23-05-2004) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:180

# இந்தியாவில் புலிகள் மீதான தடை மேலும் இரண்டு ஆண்டுகள் நீடிப்பு!

## மத்தியில் புதிய அரசு பதவியேற்கையில் தமிழகத்திலிருந்து நேற்று அறிவிப்பு

சென்னை,மே23

**தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் மீதான தடையை இந்திய அரசு மேலும் இரண்டு ஆண்டுகளுக்கு நீடித்திருக்கிறது.**

**மத்திய அரசின் இந்தத் தீர்மானத்தை தமிழக அரசு நேற்று வெளியிட்டிருக்கின்றது.**

**இந்தியாவில் புதிதாகப் பதவியேற்றுள்ள காங்கிரஸ் அரசு ஈழத் தமிழர்கள் விடயத்தில் எத்தகைய போக்கைக் கடைப்பிடிக்கப் போகிறது என்று எதிர்பார்க்கப்படும் ஒரு சமயத்தில் புலிகள் மீதான தடை அறிவிப்பு வெளியாகி இருக்கின்றது.**

விடுதலைப் புலிகள் இயக்கம் இந்தியாவில் பயங்கரவாத அமைப்பு என்று பிரகடனப்படுத்தப்பட்டு அதன் மீது கடந்த பன்னிரெண்டு ஆண்டுகளாகத் தடை விதிக்கப்பட்டிருக்கிறது.

இந்தத் தடை உத்தரவினை மத்திய அரசு இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு தடவை புதுப்பித்து வருகின்றது. அந்த வகையிலேயே தற்போதும் தடை நீடிப்புப் பற்றிய அறிவிப்பு வெளிவந்திருக்கின்றது.

சமீப காலமாக விடுதலைப் புலிகள் தமிழகத்தினுள் ஊடுருவி உள்ளனர். அவர்கள் சட்டத்துக்குப் புறம்

(16ஆம் பக்கம் பார்க்க)

## நோர்வே வேண்டாம்; இந்தியா வரட்டும்!

### பிரதமரிடம் ஜே.வி.பி. கோரிக்கை

கொழும்பு,மே23

இலங்கை விவகாரத்தில் நோர்வேயின் அனுசரணைப் பணி தொடாவதை ஜே.வி.பி. விரும்பவில்லை. இந்தப் பிராந்திய நாடான இந்தியாதான் அனுசரணைப் பணியை வகிக்கவேண்டும்.

- இவ்வாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிடம் ஜே.வி.பியின் உயர் மட்டத் தலைமை தெரிவித்துள்ளது.


பிரதமரை அவரது வாசஸ்தலமான அலரிமாளிகையில் கடந்த வியாழக்கிழமை சந்தித்த சமயமே ஜே.வி.பி. தலைவர்கள் இந்தக் கோரிக்கையை விடுத்தனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இச்சந்திப்பில் ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ஸ அமரசிங்க, பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ஸ, பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா ஆகியோர் கலந்துகொண்டனர்.

எமது அமைப்பின் தனிப்பட்ட கருத்துப்படி, நோர்வேயின் அனுசரணையை நாம் ஏற்கமுடியாது. இந்தியாதான் அனுசரணைப்பணியில் இருக்க வேண்டும்.

நோர்வேயின் அனுசரணைதான்

(16ஆம் பக்கம் பார்க்க)



குடியரசுத் தலைவர் அப்துல் கலாம் மன்மோகன் சிங்குக்கு பதவிப்பிரமாணம் செய்துவைக்கிறார்.

## பிரதமராக மன்மோகன் சிங் நேற்றுப் பதவிப் பிரமாணம்

### 67 பேர் அடங்கிய அமைச்சரவையும் பதவியேற்றது

புதுடில்லி,மே23

இந்தியாவின் 13ஆவது பிரதமராக மன்மோகன் சிங் நேற்று மாலை பதவியேற்றார். குடியரசுத் தலைவர் அப்துல் கலாம் அவருக்குப் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.

மத்தியில் காங்கிரஸ் கட்சி கூட்டணி அரசு அமைத்தது இதுவே முதல் முறை.

பிரணாப் முகர்ஜி, அர்ஜுன் சிங், குலாம் நபி ஆசாத், சரத்பவார், ப.சிதம்பரம், மணிசங்கர் அய்யர், தயாநிதி மாறன், ஏ.ராஜா, டி.ஆர்.பாலு, டாக்டர் அன்புமணி, லாலு பிரசாத் யாதவ், ராம்விலாஸ் பாஸ்வான் உட்பட 67 பேர் கொண்ட அமைச்சரவை அவருடன் பதவியேற்றது.

தேர்தலில் தோல்வியடைந்த சிவராஜ் பாட்டீஸ், பி.எம்.சயீத் ஆகியோருக்கும் கபினெட் அமைச்சர் பதவி வழங்கப்பட்டுள்ளது,

பிரதமர் தவிர, கபினெட் அமைச்சர்கள் 28 பேர் தனிப்பொறுப்புடன் இணை அமைச்சர்கள் 10 பேர், ஈ.வி.கே.எஸ் இளங்கோவன் உட்பட இணை அமைச்சர்கள் 29 பேர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

குடியரசுத் தலைவர் மாளிகையில் நடந்த இந்த விழாவில், குடியரசுத் துணைத் தலைவர் பைரோன் சிங் ஹெகாவத், முன்னாள் பிரதமர்கள் வாஜ்பாய், தேவகௌடா, ஐ.கே.குஜ்ரால், சந்திரசேகர், நரசிம்மராவ், காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி, தி.மு.க. தலைவர் கருணாநிதி, துணைப் பொதுச்செயலர் மு.க. ஸ்டாலின், பா.ம.க. தலைவர் டாக்டர் ராமதாஸ், ம.தி.மு.க. பொதுச் செயலர் வைகோ ஆகியோர் கலந்துகொண்டனர்.

தென்னகத்தைப் பொறுத்தவரை, தமிழகத்திலிருந்து 12 பேருக்கும், ஆந்திரத்தில் 6 பேருக்கும், கர்நாடகத்தில் 4 பேருக்கும், கேரளத்தில் ஒருவருக்கும் அமைச்சரவையில் இடம் அளிக்கப்பட்டுள்ளது. தமிழகம், புதுவையில் தி.மு.க. காங்கிரஸ் கூட்டணி 40 இடங்களிலும் வென்றது. ஆந்திரத்தில் காங்கிரஸ் கூட்டணி 37 இடங்களிலும், கர்நாடகத்தில் காங்கிரஸ் 8 இடங்களிலும் வென்றன. கேரளத்தில் காங்கிரஸ் ஓர் இடத்தில் கூட வெற்றிபெறாவிட்டாலும் அக்கூட்டணி வேட்பாளர் ஈ.அகமது மட்டும் வெற்றி பெற்றார். அவருக்கு அமைச்சரவையில் வாய்ப்புக் கிடைத்துள்ளது.

காங்கிரஸ் கட்சியின் அனுபவம் வாய்ந்த முன்னாள் அமைச்சர்கள், மூத்த தலைவர்கள் பலருக்கு மீண்டும் வாய்ப்புக் கொடுக்கப்பட்டுள்ளது. அதேபோல், கட்சித் தலைமைக்கு விசுவாசமாக இருந்தவர்களுக்கும் வாய்ப்புத் தரப்பட்டுள்ளது. பெண்களில் 6 பேருக்கு வாய்ப்புத் தரப்பட்டுள்ளது. இதில் மறைந்த ஜெகஜீவன்ராமின் மகள் மீராகுமார் கபினெட் அமைச்சர் ஆகிறார்.

(ஐ-6)

### மன்மோகன் சிங் சென்னைக்கு வருவார்

சென்னை,மே23

புதிய பிரதமர் மன்மோகன் சிங் எதிர்வரும் ஜுன் 3ஆம் திகதி சென்னைக்கு வரவிருக்கின்றார்.

தி.மு.க. தலைவர் கருணாநிதியின் பிறந்த நாள் கொண்டாட்டங்களில் கலந்துகொள்வதற்காகவே அவர் சென்னை வருகிறார் என்று தி.மு.க. வட்டாரங்கள் தெரிவித்தன.

தி.மு.க. தலைவர் கருணாநிதியின் பிறந்த நாள் விழா அடுத்த மாதம் 3ஆம் திகதி கொண்டாடப்படுகிறது.

கருணாநிதி கடந்த 3 ஆண்டுகளாக பிறந்தநாள் கொண்டாடவில்லை.

(16ஆம் பக்கம் பார்க்க)

## ஆலங்குளம் தாக்குதல் சம்பவம் அப்பட்டமான போர்நிறுத்த மீறல்!

### கண்காணிப்புக் குழுவிடம் தமிழ்ச்செல்வன் முறைப்பாடு

மட்டக்களப்பு,மே23

மட்டக்களப்பு ஆலங்குளம் பகுதியில் கடந்த வியாழனன்று தமது போராளி ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவத்துடன் இராணுவத்தினர் அல்லது அவர்களுடன் உடந்தையானவர்கள் நேரடியாகச் சம்பந்தப்பட்டிருக்கின்றனர் என்று விடுதலைப் புலிகள் குற்றஞ்சாட்டியிருக்கின்றனர்.

இதுதொடர்பாக விடுதலைப் புலிகள் யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடமும் முறையிட்டிருக்கின்றனர்.

விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் இதுவிடயமாக கண்காணிப்புக் குழுவுக்கு முறையிட்டுள்ளார் என்று மட்டு. - அம்பாறை அரசியல்துறையினர் தெரிவித்தனர்.

சம்பவம் நடைபெற்ற இடம் படையினரின் காவலரண் அமைந்த பகுதிக்

(16ஆம் பக்கம் பார்க்க)

### ஹக்கீம் விவகாரத்தில்

## ஜனாதிபதியை தொடர்புபடுத்தி அவதூறுப் பிரசாரமாம்!

கொழும்பு,மே23

முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் முன்னாள் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தொடர்பாக வெளியாகியுள்ள செய்திகளில் ஜனாதிபதிக்கு அபகீர்த்தி ஏற்படுத்தக்கூடிய தகவல்களும் இடம் பெற்றுள்ளன. இதுதொடர்பாக முழு அளவிலான - நீதியின் அடிப்படையிலான விசாரணைகளைப் பொலீஸார் மேற்கொள்ளவேண்டும்.

- இப்படி ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார் என்று அவரது செயலகம் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஹக்கீம் தொடர்பாக வெளிவரும் செய்திகளில் குறிப்பிடுவது போன்று குமாரி குரே என்ற பெண்ணுடன் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் தாம் சந்திப்புக்களை ஏற்படுத்தவில்லை என்றும்-

பேச்சுக்கள் நடத்தவில்லையென்றும் - ஜனாதிபதி தெரிவித்துள்ளார்


(16ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# வலி.மேற்கில் 7 ஆயிரம் குடும்பங்கள் உலர் உணவு நிவாரணத்தை இழக்கும்

வலிகாமம் மேற்குப் பிரதேசத்திலுள்ள சுமார் 7 ஆயிரம் குடும்பங்களுக்கு பெப்ரவரி மாதம் தொடக்கம் இலவச உலர் உணவு நிவாரணம் நிறுத்தப்படவுள்ளது எனத் தெரிகின்றது.

வலிகாமம் மேற்குப் பிரதேச செயலர் பிரிவில் உள்ள 25 கிராம அலுவலர் பிரிவுகளிலும் இருந்து சுமார் 10 ஆயிரத்து 800 குடும்பங்கள் இலவச உலர் உணவு நிவாரணத்தை பெற்றுவந்தன. இவர்களுள் ரூபா ஆயிரத்து 500இற்கு உட்பட்ட மாத வருமானம் உள்ள இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கும், ஏ-9 தரை வழிப்பாதை திறக்கப்பட்ட பின்னர் மீளக்குடியமர்ந்த குடும்பங்களுக்குமே பெப்ரவரி மாதம் தொடக்கம் இலவச உலர் உணவு நிவாரணம் வழங்கப்படவுள்ளது. இதன்படி சுமார் 3 ஆயிரத்து 500 குடும்பங்களுக்கு மட்டுமே இலவச உலர் உணவு நிவாரணம் கிடைக்கும். (ஐ-175)




ஐக்கியநாடுகள் சபையின் உலக உணவுத் திட்டத்தின் கீழ் யாழ். மாவட்டத்தில் மேற்கொள்ளப்படும் செயற்றிட்டங்கள் தொடர்பான கலந்துரையாடல் யாழ். செயலக கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்றது. இக்கலந்துரையாடலில் கலந்துகொண்ட உலக உணவுத் திட்ட வவுனியா உப அலுவலக அதிகாரி மஃபுப் - உல் - அலாம், உலக உணவுத் திட்ட கொழும்பு அலுவலர் அஸ்மி மற்றும் அதிகாரிகளையும் நிகழ்வில் கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

## தீக்காயங்களால் வயோதிபர் மரணம்!

யாழ்ப்பாணம்,மே23

படுத்திருந்த சமயம் எரிந்துகொண்டிருந்த விளக்குத் தட்டுப்பட்டு உடலில் தீ பரவியதால் வயோதிபர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்றுமுன்தினம் நள்ளிரவு 12.30 மணியளவில் உடுவில் மதவடிப் பகுதியில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் குலசேகரம் தேவராசா (வயது75) என்ற வயோதிபரே பலியானார்.

இறந்தவர் நீண்டநாள்களாக நோய்வாய்ப்பட்டு படுக்கையில் இருந்துள்ளார். சம்பவம் நடந்த அன்று நள்ளிரவு இவர் படுத்திருந்த சமயம் அருகில் எரிந்துகொண்டிருந்த விளக்குத் தட்டுப்பட்டதில் தீ பரவி உடலில் தீக்காயங்களுக்கு உள்ளாகி இறந்துள்ளார் என்றும் கூறப்படுகிறது.-

சம்பவ இடத்திற்குச் சென்று மரண விசாரணை நடத்திய மல்லாகம் நீதிவான் சடலத்தை பிரேத பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்திய சாலையில் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார். (ஐ-ரி-15)

## ஈச்சமோட்டையில் நிவாரண அட்டை மீளாய்வு

அரியாலை,மே23

ஈச்சமோட்டை கிராம சேவையாளர் பிரிவில் (ஜே-66) வசிக்கும் குடும்பங்களின் உலர் உணவு அட்டைகள் நாளை திங்கட்கிழமையும் மறுநாள் செவ்வாய்க்கிழமையும் மீளாய்வு செய்யப்படும் என்று கிராம உத்தியோகத்தர் ம.சுந்தரலிங்கம் தெரிவித்தார்.

இந்த மீளாய்வுப் பணிகள் காலை 9 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை ஈச்சமோட்டை சனசமூக நிலைய மண்டபத்தில் இடம்பெறும்.

நிவாரணம் பெறுவோர் மற்றும் நிவாரணம் பெறாத அனைத்துக் குடும்பங்களும் தமது உலர் உணவு அட்டைகளுடன் சமுகந்தருமாறு கேட்கப்பட்டுள்ளனர். (ஐ-17)

# திருட்டுச் சம்பவங்கள் காரைநகரில் அதிகரிப்பு!

காரைநகர் பகுதியில் அண்மைக் காலமாக திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன என்று கூறப்படுகின்றது.

திருடர்கள், வழிபாட்டுத் தலங்கள், வீடுகள் மீது தமது கைவரிசையைக் காட்டி வருகின்றனர்.

காரைநகரில் இரண்டு ஆலயங்களில் உண்டியல்கள் உடைக்கப்பட்டு அவற்றில் இருந்து பெரும் தொகையான பணம் அபகரிக்கப்பட்டுள்ளது. இங்குள்ள தென் இந்தியத் திருச்சபை ஆதினத்தில் இருந்து அண்மையில் பல ஆயிரம் ரூபா பெறுமதியான ஆறு அடி உயரக் குத்துவிளக்கும் திருடர்களால் களவாடப்பட்டுள்ளது.

இதேவேளை, ஆள்கள், இல்லாத வடுகளில் வீட்டுப் பாவனைப் பொருள்கள் மற்றும் வீட்டின் மரங்கள், ஜன்னல், கதவுகள் போன்றனவும் திருடப்படுகின்றன என்று கூறப்படுகின்றது. (ஒ-73)

## வலி. மேற்குப் பிரதேசத்தில்

# சட்டவிரோத மின் பாவனையை தடுக்கக் கோரித் தீர்மானம்

வலி.மேற்கு,மே23

வட்டுக்கோட்டை தொல்புரம், சுழிபுரம், அராலி ஆகிய இடங்களில் அதிகரித்துவரும் சட்ட விரோத மின் பாவனையைக் கட்டுப்படுத்த இலங்கை மின்சார சபையினர் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று வலி.மேற்குப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் அண்மையில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலர் சீ.ஏ.மோகன்றாஸ் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட பிற தீர்மானங்கள் வருமாறு:-

அராலி வடக்கு மயிலியற்புலம், அராலி கிழக்கு ஐயனார் கோயிலடி, அராலி மத்தி ஊரத்தி ஆகிய கிராமங்களுக்கு மின்சார விநியோகம் விஸ்தரிக்கப்படவேண்டும் -

வலி.மேற்குப் பிரதேசத்துக்கென 5 ஏக்கர் பரப்பளவில் விளையாட்டு மைதானம் ஒன்று அமைக்கப்படவேண்டும். இதற்கு வட்டு. மத்திய கல்லூரிக்கு முன்பாகவுள்ள மைதானத்தை பிரதேச மட்டத்தில் ஒரு மைதானமாக மாற்றுவதற்குத் தொடர் நடவடிக்கையில் விளையாட்டு அலுவலரும பிரதேச சபையினரும் ஈடுபடவேண்டும் -

பிரதான வீதிகளுக்கு அண்மையிலுள்ள பாடசாலைகளுக்கு முன்பாக வீதியில் பாதசாரிகள் கடவை அமைக்கப்படவேண்டும்.

வலி.மேற்குப் பிரதேசத்திலுள்ள வியாபார நிலையங்களுக்கு முன்பாகப் பாதையோரங்களில் வைக்கப்படும் பொருள்களை அகற்றுவதற்கும், செட்டியாமடத்தில் பிரதான வீதியில் அமைக்கப்பட்ட வியாபார நிலையத்தை அகற்றுவதற்கும் பிரதேச சபையினர் தொடர் நடவடிக்கையினை மேற்கொள்ளவேண்டும்.

வலி.மேற்குப் பிரதேச மக்கள் அதிகமாகச் சென்று பலதரப்பட்ட சிகிச்சைகளையும் மேற்கொள்கின்ற சங்கானை அரசினர் வைத்தியசாலையை தரமுயர்த்துவதற்குத் தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும்.

ஆகிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

சட்டவிரோத மின் பாவனையைக் கட்டுப்படுத்துவதற்கு இலங்கை மின்சாரசபையினருக்கு அந்தப் பகுதி கிராம அலுவலர்களினால் முழுமையான ஒத்துழைப்பு வழங்கப்படும் எனக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

திணைக்களத் தலைவர்கள், கிராம அலுவலர்கள், சமூக மட்ட பிரதிநிதிகள் உட்படப் பலர் இக்கூட்டத்தில் கலந்துகொண்டனர்.(ஒ-175)

# இளம் பெண்களின் வீடுகள் மீது காரைநகரில் கல்வீச்சு!

காரைநகர்,மே23

காரைநகர் பகுதியில் இரவு வேளைகளில் இளம் பெண்கள் உள்ள வீடுகள் மீது இளைஞர் குழு ஒன்று கற்களை வீசிச் சேஷ்டை புரிவதாகக் கூறப்படுகின்றது.

காரைநகர் வலந்தலை, பழைய கண்டி ஆகிய பகுதிகளில் கடந்த சில நாள்களாக இத்தகைய கல் வச்சுச் சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றன என்றும் -

இதனைத் தட்டிக்கேட்க முயன்ற அயலவர் வீடுகள் மீதும் அக்கும்பல் கறகளை வீசுவதாகவும் -தெரிவிக்கப்பட்டது.

இதனால் இப்பகுதி மக்கள் இரவு வேளைகளை அச்சத்துடனேயே கழிக்கவேண்டி உள்ளனர். இவ்வாறான செயற்பாடுகளைத் தடுப்பதற்கு உரியவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஒ-73)

## வானொலியில் நற்சிந்தனை நிகழ்ச்சி

யாழ்ப்பாணம்,மே23

இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபன தேசிய சேவையில் இன்று ஞாயிற்றுக்கிழமை முதல் பிரதி ஞாயிற்றுக் கிழமைகளில் மாலை 5.40 மணிக்கு நற்சிந்தனை நிகழ்ச்சி ஒலிபரப்பப்படவிருக்கிறது.

சமய அறிஞரான வைத்திய கலாநிதி திருமதி உ.வாணிப்பிள்ளை 'பகவத்கீதையும் வாழ்க்கையும்' என்னும் தலைப்பில் இந்த நிகழ்ச்சியை நடத்துவார். (ஐ-3)

## விளையாட்டுப் போட்டி

யாழ்ப்பாணம்,மே23

நாவற்குழி கிழக்கு காந்தி பாலர் பாடசாலை வருடாந்த விளையாட்டுப் போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு காந்தி சன சமூக நிலையத்துக்கு அருகில் நடைபெறவுள்ளது.

எம்.சந்திரசேகரம் தமைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி, முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் க.பாக்கியராஜா கலந்துகொள்கிறார். (ஐ-9)

# மன்னார் உப்பளத்தை மீண்டும் மீனவர் சமாசத்திடம் ஒப்படைக்குக!

## ஜனாதிபதிக்கு அடைக்கலநாதன் எம்.பி. கடிதம்

வவுனியா,மே.23

மன்னார் உப்பளத்தை மீண்டும் மன்னார் மீனவர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் பொறுப்பில் ஒப்படைக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

- இவ்வாறு ஜனாதிபதிக்குத் தான் அனுப்பிய கடிதத்தில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

மன்னார் உப்பளம், இலங்கை உப்புக் கூட்டுத்தாபனத்தால் நடத்தப்பட்டு வந்தது. முற்றாக இயங்காமலிருந்த இந்த உப்பளத்தை 1997இல் மன்னார் கச்சேரி கையேற்று இதை இயங்கும் நிலைக்குக் கொண்டுவந்து, அரச அதிபர், மேலதிக அரச அதிபர், கச்சேரிக் கணக்காளர் ஆகியோர் அடங்கிய நிர்வாகக் குழுவினால் பராமரிக்கப்பட்ட வேளையில் இந்நிர்வாகம இதன் புனரமைப்பு, புனர்நிர்மாண வேலைகளைச் செய்து, இந்த உப்பளத்தின் உப்பு உற்பத்தியை சீர்செய்தது. அதன் பிறகு மன்னார் மீனவக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்திற்கு இது பாரப்படுத்தப்பட்டது. இந்நிறுவனத்தை முறையாக நடத்தி ஒரு வருட கால எல்லைக்குள் வருமானத்தை கூட்டும் பட்சத்தில் இது முற்றுமுழுதாக அவர்களுக்குப் பாரப்படுத்தப்படும் என்ற உத்தரவாதத்துடன் இவர்களது பராமரிப்பில் இது விடப்பட்டது. இவர்களது நிர்வாகத்தில் இந்த நிறுவனம் நேரிய முறையில் இயங்கி உற்பத்தியும் பெருகிய நிலையில் இந்நிறுவனம் இச்சமாசத்திற்கு முற்று முழுதாகக் கையளிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டவேளையில் அப்போதைய வடக்குப் புனர்வாழ்வு அமைச்சினால் இது பொறுப்பேற்கப்பட்டது.

வடக்குப் புனர்வாழ்வு அமைச்சு பொறுப்பேற்றதும் புதிய நிர்வாகக் குழு அமைக்கப்பட்டது மாத்திரமல்லாமல் நஷ்டத்தில் இயங்கிவந்த யாழ்ப்பாணம் செம்மணி உப்பளமும் இத்துடன் இணைக்கப்பட்டு கொழும்பிலே இதற்கென ஒரு தலைமைக் காரியாலயமும் அமைக்கப்பட்டது. அத்துடன் பிராந்திய இணைப்பாளர் எனும் புதிய ஒரு நியமனம் உருவாக்கப்பட்டது.

மன்னார் உப்பள ஊழியர்களுக்கு முன்னைய நிர்வாகத்தினால் அவர்களை உற்சாகப்படுத்தும் வகையில் வழங்கப்பட்ட சுழற்சிமுறையில் மேலதிக வேலைக்கான படி, இரவு வேலைக்கான படி, தேநீர்ச் செலவு, சரான வரவிற்கு ஊக்குவிப்புப் பணம், வைத்தியச் செலவு, வைத்திய விடுமுறை எடுக்காதவர்களுக்கு ஊக்குவிப்புப் பணம் ஆகியன வழங்கப்பட்ட காரணத்தினால் அவர்களும் உற்சாகத்துடன் இரவு பகல் பாராது உப்பு உற்பத்தியைப் பெருக்கப்பாடுபட்டனர். இவ்வளவு செலவினங்களின் மத்தியிலும் வருமானத்தை காட்டிய இந்த உப்பளம், தற்போதைய நிர்வாகத்தின் கீழ் நஷ்டத்தில் இயங்கவேண்டிய நிலை உருவாகியுள்ளது கவலைக்குரிய விடயமாகும்.

நஷ்டத்தில் இந்நிறுவனம் இயங்கவேண்டிவந்ததன் காரணம், அனைத்து நிர்வாக உறுப்பினர்களும் கொழும்பில் இருந்துகொண்டு தலைமைச் செயலகம் ஒன்றை கொழும்பில் உருவாக்கியுள்ளமையும், தேவைக்கு மேற்பட்ட ஊழியர்களுடன் நஷ்டத்தில் இயங்கிவந்த செம்மணி உப்பளம் தற்போது இதனுடன் இணைக்கப்பட்டதும், பிராந்திய இணைப்பாளர் என்ற புதிய பதவி உருவாக்கப்பட்டுள்ளதும் இவற்றிற்கான செலவினங்களை மன்னார் உப்பளமே சுமக்கவேண்டிய நிலை உருவாக்கப்பட்டதுமே, ஆதாயத்துடன் இயங்கிவந்த மன்னார் உப்பளம் நஷ்டத்தில் இயங்கவேண்டிவரக் காரணமென மன்னார் மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். இதுமாத்திரமல்லாது இங்கு பணியாற்றிவரும் ஊழியர்கள் அனுபவித்து வந்த சலுகைகள் அனைத்தும் நிறுவனத்தின் நஷ்டத்தைச் சுட்டிக்காட்டி அவர்களிடமிருந்து பறிக்கப்பட்டதனால், அவர்கள் உற்சாகமிழந்துவிட்டதும் இந் நஷ்டத்திற்கு ஒரு காரணியாய் அமைகிறது.

மன்னார் மாவட்டத்தில் மீன்பிடிக் கூட்டுத்தாபனத்தினால் பல வருடங்களின் முன் நிறுவப்பட்டிருந்த மீன் அடைக்கும் தொழிற்சாலை, கோழித்தீன் தொழிற்சாலை ஆகியன தற்போது செயலிழந்து காணப்படுகின்றன.

மன்னாரில் புனரமைக்கப்பட்டு ஆதாயத்துடன் இயங்கிவந்த மன்னார் உப்பளம் அக்கறையற்றவர்களின் கைகளில் தற்போது இருப்பதனால் இந்தத் தொழிற்சாலைக்கும் மற்றைய தொழிற்சாலைகள் போன்று சாவு மணி அடிக்கப்பட்டு மன்னாரில் எவ்வித தொழிற்சாலைகளும் இல்லாமல் ஒழிக்கப்பட்டு விடுமென இம்மக்கள் அச்சம் தெரிவிக்கின்றனர்.

மேற்படி விடயங்களைக் கவனத்திலெடுத்து மன்னார் உப்பளத்தை மன்னார் மீனவ கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்திடம் ஒப்படைத்து, மன்னார் மீனவர்கள் இதை உரிய முறையில் பராமரித்துப் பயன்பெற வழிசெய்ய வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

- என்றுள்ளது.

## முன்பள்ளி ஆசிரியர்களை வருகைதரும்படி அறிவிப்பு

யாழ்ப்பாணம்,மே23

'யுனிசெவ்' நிறுவனத்தின் அனுசரணையுடன் நடைபெற்ற 45 நாள் வதிவிடப் பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்த முன்பள்ளி ஆசிரியர்கள் அனைவரையும் நாளை திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ்.பிராந்திய உள்ளூராட்சித் திணைக்களத்திற்கு வருகை தருமாறு சனசமூக நிலைய அபிவிருத்தி உத்தியோகத்தர் ம.ஞானவேல்ராசா அறிவித்துள்ளார். (10)

## மாவின் விலை அதிகரிக்கலாம்

கோதுமை மாவின் விலையை அதிகரிப்பது தொடர்பாக 'பிறிமா' நிறுவனம், திறைசேரியோடு பேச்சு நடத்தியுள்ளது.

உலக வர்த்தகச் சந்தையில் கோதுமை மாவின் விலை அதிகரித்துள்ளதே இந்த விலை அதிகரிப்பை மேற்கொள்ள வேண்டியுள்ளதற்கான காரணம் என்று மேற்படி பேச்சின் போது சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. மாவின் விலை அதிகரிக்கப்படுமாயின் பாண் மற்றும் பெரும்பாலான வெவ்வேறு உணவுப் பொருள்களின் விலைகளும் அதிகரிக்கப்படக்கூடும். (ஒ)

# ஈராக்கிற்கு படை அனுப்புவதை ஒத்திப்போட்டுள்ளது பிரிட்டன்

லண்டன்,மே23

தெற்கு ஈராக் பகுதிக்கு மேலும் 3 ஆயிரம் இராணுவ வீரர்களை அனுபத் திட்டமிட்டிருந்தது பிரிட்டன் ஆனால், அரசியல் ரீதியிலும் பொதுமக்கள் தரப்பிலும் இதற்கு எதிர்ப்பு எழுந்துள்ளதால் இத்திட்டத்தை ஒத்திப்போட்டுள்ளார் பிரதமர் ரொனி பிளேயர்.



புனித நகரான நஜாப்பில், அமெரிக்கக் கூட்டணிப் படைகளின் எதிர்ப்பையும் மீறி, தனது ஆதரவாளர்களுடன் மதத் தலைவர் முக்ததா சதர் பதுங்கி வருகிறார்.

அவர்களை ஒடுக்க நஜாப் உட்பட இப்பிராந்தியத்தின் பல்வேறு பகுதிகளுக்குக் கூடுதல் படைகளை அனுப்பப் பிளேயர் திட்டமிட்டுள்ளதாக டைம்ஸ் பத்திரிகை செயதி வெளியிட்டிருந்தது.

இந்தப் பகுதியில் ஸ்பெயின் படைகள் முன்பு இருந்தன. ஸ்பெயினில் அரசு மாறியதை அடுத்து அதன் படைகள் ஈராக்கிலிருந்து வெளியேறின. எனவே, அங்கு தமது படைகளை அனுப்பப் பிளேயர் திட்டமிட்டிருந்தார்.

இந்நிலையில், தமது திட்டத்துக்கு ஆதரவு இருக்காது என்று கருதிய பிளெயர் அதை இப்போதைக்கு கைவிட்டுள்ளார்.

நஜாப் நகருக்கு வீரர்களை அனுப்பினால் அவர்கள் உயிருக்கு ஆபத்து ஏற்படக் கூடும் என்று மூத்த இராணுவ அதிகாரிகளும் எச்சரித்துள்ளனர். கூடுதல் வீரர்களை அனுப்ப ஆளும் லேபர் கட்சி எம்.பிக்களும் எதிர்ப்புத் தெரிவிக்கக் கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தற்போதைய நிலையில் தெற்கு ஈராக்கில் 7 ஆயிரத்து 900 பிரிட்டிஷ் வீரர்கள் உள்ளனர். தலைமையகம் பஸ்ரா நகரில் செயற்படுகிறது.

# ஈராக்கில் கைதிகள் சித்திரவதை; இராணுவ ஜெனரல்கள் பொறுப்பேற்பு

வாஷிங்ரன்,மே.23

ஈராக்கில் சிறைக்கைதிகள் சித்திரவதை செய்யப்பட்டதற்கு பொறுப்பேற்கிறோம். இதில் மேலும் பலர் மீது ராணுவ நீதிமன்ற விசாரணைக்கு உத்தரவிடப்படும் என அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர் குழுவிடம் இரு ராணுவ ஜெனரல்கள் உறுதியளித்தனர்.

ஈராக் தலைநகர் பக்தாத் அருகேயுள்ள அபுகிராய்ப் சிறையில் கைதிகளை அமெரிக்க கூட்டுப் படையினர் நிர்வாணமாக்கி கடுமையாக சித்திரவதை செய்தனர். உலகையே உலுககிய இந்தச் சம்பவம் குறித்து விசாரணை நடத்த உத்தரவிடப்பட்டு உள்ளது. ஏற்கனவே பக்தாத்தில் ராஸவ நீதிமன்றம் நடத்திய விசாரணையில் ஜெரிமி சிவைட்ஸ் என்பவருக்கு ஓராண்டு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. மேலும் 7 பேர் மீது ராஸவ கோர்ட்டில் விசாரணை உள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக அமெரிக்க நாடாளுமன்றக் குழுவும் விசாரணை நடத்தி வருகிறது. அவர்களிடம் ஈராக்கில் உள்ள அமெரிக்க இராணுவத்திற்கு பொறுப்பு வகிக்கும் ஜெனரல் ஜான் அபிஜைத் கூறுகையில்:-

'அபுகிராய்ப் சிறையில் நடந்த கொடுமைகளுக்கு பொறுப்பேற்கிறேன். ஒரே அறையில் அதிக கைதிகளை அடைத்ததால் நிர்வாகக் கோளாறு காரணமாக இக் கொடுமைகள் நிகழ்ந்திருக்கலாம்' என்றார்.

அமெரிக்கக் கூட்டுப்படைத் தளபதி ஜெனரல் ரிக்கார்டோ சான்செஸ் கூறுகையில், 'மூத்ததளபதி என்ற வகையில் இக்கொடுமைகளுக்கு பொறுப்பேற்கிறேன். இனி அவ்வாறு நடக்காது என உறுதியளிக்கிறேன். ஏற்கனவே இது குறித்து விசாரணையை நாங்கள் ஆரம்பித்து விட்டோம். அதில் கிடைக்கும் ஆவணங்களின் அடிப்படையில் மேலும் பலர் மீது வழக்குத் தொடரப்படும்' - என்றார். (8)

# பக்தாத்தில் குண்டுத் தாக்குதல்; 5 சிவிலியன்கள் கொல்லப்பட்டனர்!


## உள்துறை அமைச்சர் காயம்

பக்தாத், மே23

ஈராக்கின் பக்தாத்தில் இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதல் ஒன்றில் குறைந்தது ஐந்து பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

மூன்று ஈராக்கிய பிரதி உள்துறை அமைச்சர்களில் ஒருவரது வீட்டின் முன்னால் இந்தக் குண்டு வெடிப்பு இடம்பெற்றது. காயமடைந்தவர்களில் பிரதி உள்துறை அமைச்சர் அப்துல் ஜப்பார் யூசுப அல் ஷெய்க்லி என்பவரும் ஒருவர். அவருக்குத் தலையிலும் நெஞ்சிலும் காயமேற்பட்டாலும் நிலைமை ஸ்திரமாக இருப்பதாகக் கூறப்பட்டது.

கடந்த வாரம் அமெரிக்க அதிகாரிகளால் நியமிக்கப்பட்டிருந்த ஈராக்கிய ஆட்சி சபையின் தலைவர் கார் குண்டு வெடிப்பில் கொல்லப்பட்டார். (ப-8)



குண்டு வெடித்த இடத்தில் தேடுதல் நடத்தும் அமெரிக்கப் படையினர்.



ஈராக்கிய கைதிகளை அமெரிக்கப் படையினர் மோசமாக நடத்தியமை தொடர்பான புகைப்படங்கள் வெளிவந்தவண்ணமே உள்ளன. இறுதியாக வெளியாகியிருக்கும் இந்தப்படத்தில் அமெரிக்க வீரர் ஒருவர் கைதியின் மீது நாயை ஏவிவிடுகிறார்.

# ரூ.80 கோடிக்கு விலை போன ஓவியம்

நியூயோர்க்,மே23

ஸ்கொட்லாந்து எழுத்தாளர் ரொபர்ட் லூயிஸ் ஸ்டீவன்சனின் ஓவியம் இலங்கைப் பணத்தில் சுமார் என்பது கோடி ரூபாவுக்கு ஏலம் போனது.

1885 ஆம் ஆண்டு அமெரிக்க ஓவியர் ஜான் சிங்கர் சார் ஜெண்ட் இந்த ஓவியத்தைத் தீட்டியிருந்தார். இது நியூயோர்க் நகரில் ஏலம் விடப்பட்டது.

சூதாட்ட விடுதி நடத்தும் ஸ்டீவன்சன் என்பவர் இந்த விலை கொடுத்து அதை ஏலத்தில் வாங்கினார். (8)

உலக அரங்கில்

# முஷாரப்பைக் கொலைசெய்ய சதிபுரிந்த இளைஞன் கைது!

கராச்சி,மே23

கராச்சியில் கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு அதிபர் பர்வேஸ் முஷாரப்பைக் கொல்லச் சதிசெய்தார் எனக் கருதப்படும் இளைஞர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பாகிஸ்தான் அதிபர் பர்வேஸ் முஷாரப் கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு கராச்சி விமான நிலையத்திலிருந்து வீதியில் வந்துகொண்டிருந்தார். அப்போது கார் வெடிகுண்டை வெடிகச் செய்து இவரைக் கொல்ல சதி செய்யப்பட்டது. அதிர்ஷ்டவசமாக டெட்னேட்டர் வேலை செய்யாததால் முஷாரப் உயிர் தப்பினார்.

இந்தச் சதியில் ஈடுபட்ட நான்கு தீவிரவாதிகள் ஏற்கனவே கைதுசெயயப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். இந்நிலையில், நேற்றுமுன்தினம் மத்திய கராச்சியில் ஒரு வீட்டில் மறைந்திருந்த மேலும் ஒரு முககிய தீவிரவாதியான காம்ரன் அடிப் (வயது 28) கைது செய்யப்பட்டார்.

இவர் இங்குள்ள ஒரு வீட்டில் தங்கிருப்பது பற்றி குற்றவியல் பொலீஸாருக்குத் தெரியவந்தது. இதையடுத்து அப்பகுதிக்குச் சென்ற பொலீஸாருக்கும் தீவிரவாதி காம்ரனுக்கும் இடையே துப்பாக்கிச் சண்டை நடந்தது. இதில் காம்ரன் கைதுசெய்யப்பட்டார். துப்பாக்கிச் சண்டையின் போது குண்டடிபட்டு வழியில் சென்று கொண்டிருந்த ஒரு பெண்மணி பலியானார்; இச்சண்டையில் காம்ரனும் காயடைந்தார். மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட காம்ரன் உரத்த குரலில் "ஜம்மு, காஷ்மீர் மாநிலத்தில் தான் தோல்வி, முஸ்லிம்கள் இறுதியில் வெல்வார்கள்" என்று கத்தினார்.

ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில் செயறபடும் ஹர்கத் உல் முஜாகிதீன் அல் அலாமி என்ற தீவிரவாத இயக்கத்தைச் சேர்ந்தவர் காம்ரன் என்பது தெரியவந்துள்ளது. மற்ற நான்கு தீவிரவாதிகளும் இந்தத் தீவிரவாத அமைப்பைச் சேர்ந்தவர்கள்.

# ஈராக் அருங்காட்சியகச் சூறைச் சம்பவத்தில் காணாமற்போனவற்றில் பெரும்பகுதி மீட்கப்படவில்லை!

பேர்லிங்,மே23

ஈராக் தலைநகர் பக்தாத்தின் அருங்காட்சியகத்திலிருந்து களவு போனவற்றில் இன்னும் 10 ஆயிரம் புராதன கைவினைக் கலைப் பொருள்கள் மீடகப்படவில்லை. அவை எங்குள்ளன என்பது இதுவரை தெரியவில்லை. இத்தகவலை ஈராக் இடைக்கால கலாசார அமைச்சர் முபித் ஜானஜரி தெரிவித்தார்.

ஜேர்மனி கோத் நிறுவனம் பேர்சினுக்கு அவரை அழைத்திருந்தது. அதற்காக பேர்லின் வந்த அவர், ஜேர்மன் செய்தி அமைப்பான டி.பி.ஐக்கு வியாழக்கிழமை அளித்த பேட்டியில் தெரிவித்ததாவது:-

ஓர் ஆண்டுக்கு முன்பு இந்த அருங்காட்சியகத்திலிருந்து பல்வேறு தொல்லியல் முக்கியத்துவம் வாய்ந்த பொருள்கள் களவாடப்பட்டன.

அமெரிக்கக் கூட்டணிப் படைகள் ஈராக்கை ஆக்கிரமித்ததுடன் கொள்ளையர்களுக்கு நல்ல வேட்டையாகி விட்டது. அவர்கள் அருங்காட்சியகத்துக்குள் புகுந்து அரிய கைவினைப் படைப்புகளைத் திருடிச் சென்றனர். அவற்றில் வெகுசில மட்டுமே மீட்கப்பட்டுள்ளன.

இது தொடர்பாக சில திருடர்கள் சிக்கியுள்ளனர். அவர்களிடம் விசாரணை நடத்தப்பட்டு வருகிறது.

அருங்காட்சியகத்தில் திருடப்பட்ட புராதனப் படைப்புகள் ஐரோப்பா, மத்திய கிழக்கு நாடுகளில் தற்போது இருப்பது தெரியவந்துள்ளது. எனினும், பெரும்பான்மையானவை ஈராக்கில் தான் பதுக்கிவைக்கப்பட்டுள்ளன.

நாட்டின் பாதுகாப்பு நிலைமை மேம்பட்டதும் அவை சிக்கும் என நம்புகிறோம். நாட்டின் தொல்லியல் முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளில் பல அரிய பொருள்கள் சூறையாடப்படுவது தொடர்கிறது.

இத்தகைய பகுதிகளில் அதிகாரிகளை அமர்த்திப் பாதுகாக்க அவர்களுக்குப் பயிற்சி தரப்படுகிறது. இந்த நடவடிக்கை சில மாதங்களில் நிறைவேறும். இதற்கான ஏற்பாடுகளை இடைக்கால கலாசார அமைச்சகம் மேற்கொண்டு வருகிறது.

ஜூன் 30ஆம் திகதி ஈராக்குக்கு இறையாண்மை அளித்துவிட்டாலும் அங்கு அமெரிக்கா தலைமையிலான கூட்டணிப் படைகள் தங்கி இருக்க வேண்டும் என விரும்புகிறேன் - என்றார் ஜானஜரி. (8)

# பலஸ்தீனர் மீதான தாக்குதல்: இந்தியா கடுமையாகக் கண்டிக்கிறது

புதுடில்லி,மே23

பலஸ்தீன ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்தியதற்கு இந்தியா கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

இந்த வன்முறைச் சம்பவங்கள் உடனடியாக நிறுத்தப்பட்டு பேச்சுக்களைத் தொடங்க அர்த்தமுள்ள, தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என வெளியுறவு செய்தித்தொடர்பாளர் கூறியுள்ளார்.

காஸாவில் வீடுகளை இடித்துத் தள்ளியதையும் குழந்தைகள், பெண்கள் உள்ளிட்ட அப்பாவி மக்கள் மீது கூட நடத்தப்பட்ட தாக்குதலையும் கண்டிக்கிறோம். இம்மாதிரியான ஒரு தரப்புத் தாக்குதல்கள் நிறுத்தப்பட வேண்டும் எனவும் அவர் கூறினார். (8)

# பொடா வாபஸ் ஆகும்

புதுடில்லி,மே23

இந்தியாவில் கடந்த 2 ஆண்டுகளாகப் பரபரப்பாகப் பேசப்பட்டு வந்த பொடா சட்டத்தை வாபஸ் பெற மன்மோகன் சிங் தலைமையில் அமையவுள்ள ஐக்கிய முற்போக்குக கூட்டணி அரசு திட்டமிட்டுள்ளது.

அதேநேரத்தில் தற்போதுள்ள சட்டத்தின் கீழே பயங்கரவாதத்தைத் தடுக்கும் நடவடிக்கைகளை புதிய அரசு எடுக்கும்.

டில்லியில் வெள்ளிக்கிழமை இரவு வெளியிடப்பட்ட ஐக்கிய முற்போக்குக் கூட்டணியின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

பாதுகாப்புத்துறை நவீனமயமாக்குதலில் ஏற்பட்டுள்ள தாமதத்தைத் தவிர்க்க நடவடிக்கை எடுக்கப்படும். பாதுகாப்புத் துறைக்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதி விரைவில் முழுமையாகப் பயன்படுத்தப்படுவதை உறுதி செய்வோம்.

பாதுகாப்பு அமைச்சகத்தில் முன்னாள் படைவீரர்கள் நலனுக்கென தனித்துறை ஏற்படுத்தப்படும்.

தொழில் நுணுக்கத்தில் சிறந்த மற்றும் கூடுதல் அதிகாரத்துடன் கூடிய தேசியப் பாதுகாப்புக் கவுன்சில் உருவாக்கப்படும். முழுநேர தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் நியமிக்கப்படுவார்.

# சட்டர்ஜீ சபாநாயகர்!

புதுடில்லி,மே23

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் சோம்நாத் சட்டர்ஜிக்கு சபாநாயகர் பதவிவழங்க காங்கிரஸ் முடிவு செய்துள்ளது.

நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில், காங்கிரஸ் கூட்டணியில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி இடம் பெற்றது. தேர்தல் முடிவுப்படி காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற போக்கு கூட்டணி அமைச்சரவை அமைகின்றது.

ஆனால், அமைச்சரவையில் சேருவது இல்லை; ஆட்சிக்கு ஆதரவு அளிக்கிறோம் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சி அறிவித்துவிட்டது. 43 எம்.பிக்கள் கம்யூனிஸ்ட் கட்சியில் உள்ளனர்.

இந்தநிலையில், இந்திய கம்யூனிஸ்ட் தலைவர் சோம்நாத் சட்டர்ஜிக்கு சபாநாகர் பதவி அளிக்க காங்கிரஸ் முன்வந்துள்ளது. இந்தத் தகவலை, கம்யூனிஸ்ட் கட்சிக்கு காங்கிரஸ் தெரிவித்து உள்ளது. சட்டர்ஜி, தற்போது நாடாளுமன்ற இந்திய கட்சித தலைவராக இருக்கிறார்.

உ

## அல்வாய் வேவிலந்தை ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம்
## வருடாந்த மகாசபைக் கூட்டம்

மேற்படி கூட்டம் 30.05.2004 ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியளவில் ஆலய மண்டபத்தில் திரு. ச. பரமேஸ்வரன் தலைமையில் ஆரம்பமாகும். புதிய நிர்வாக சபைத் தெரிவு இடம்பெறும். மகாசபை உறுப்பினர் தவறாது சமுக மளிக்குமாறு வேண்டப்படுகின்றனர்.

- செயலாளர்.

(சி35137)(37-21-17-19)

## விற்பனைக்கு

நாவற்குழியில் ஏ-9 வீதி அருகில் அரச களஞ்சியத்திற்கு எதிராக நன்னீர் வசதியுடன் கூடிய 60 பரப்புக்காணி விற்பனைக்குண்டு. தொழிற்சாலை, விடுதி,- வீடு அமைப்பதற்கு ஏற்ற இடமாகும். விரும்புபவர்கள் கீழ்க்காணும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

**"The PENINSULA GROUP"**
127/10, TEMPLE ROAD,
JAFFNA.
T.P:NO. 021.222.3720

(42-21-19-17) (32245)

## மாவை கொல்லங்கலட்டிப் பிள்ளையார் கோயில்
## வருடாந்த மஹோற்சவம்

| | | |
|---|---|---|
| கொடியேற்றம் | - 25.05.2004 | செவ்வாய்க்கிழமை |
| சப்பறம் | - 01.06.2004 | செவ்வாய்க்கிழமை |
| தேர்த்திருவிழா | - 02.06.2004 | புதன்கிழமை |
| தீர்த்தோற்சவம் | - 03.06.2004 | வியாழக்கிழமை |

☞ காலை 8.00 மணிக்கு பகல் திருவிழாவுக்கும், பிற்பகல் 2.00 மணிக்கு மாலைத் திருவிழாவுக்கும் அடியார்கள் சென்று வர பஸ் பயண ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

தினமும் அன்னதானமும் நடைபெறும்.
அடியார்கள் வருக! திருவருள் பெறுக!!

- அறங்காவலர்.

(சி-35136)(34-21-19-17)

## காணவில்லை



பெண்கள் அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனத்தின் கீழ் இயங்கும் வெற்றிமனை இல்லத்தில் பயனாளியாக இருந்து வந்தவரான

**பரமேஸ்வரன் ஜெகதாம்பிகை**
**(ஜெகதா அல்லது தங்கா)**

என்பவரைக் கடந்த 17.05.2004 திங்கட்கிழமையிலிருந்து காணவில்லை. இவரைக் கண்டவர்கள் கீழ்க்காணும் முகவரிக்கு அறியத்தரவும். அல்லது பொலீஸ் நிலையத்துக்கு அறிவிக்கவும்.

பெண்கள் அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனம்,
பாரதி வீதி, கச்சேரியடி,
யாழ்ப்பாணம்.

(32523)(42-21-19-17)

## கண்ணீர் அஞ்சலிகள்



*ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியின் ஓய்வுபெற்ற அதிபரும், ஊர்காவற்றுறை கல்விக்கோட்ட பாடசாலைகளின் கொத்தணி அதிபராகவும் விளங்கிய*

**S.A.E. இரத்தினராஜா S.L.E.S - I**

அவர்கள் 20.05.2004 அன்று இறைபதமெய்திய செய்தியை அறிந்து அதிர்ச்சியும், வேதனையும் அடைவதோடு, அன்னாரின் மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தினைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

- பழைய மாணவர் சங்கம்
ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி.

(32516)(34)

## அந்தியேஷ்டி அழைப்பு



24.04.2004 சனிக்கிழமை அன்று சிவபதமடைந்த
எங்கள் குடும்ப ஒளிவிளக்கு

**அமரர் மார்க்கண்டு இராசா**

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (24.05.2004) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். அத்துடன் இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து அன்னாரின் ஆத்மா சாந்திபெறப் பிரார்த்திக்குமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

குடும்பத்தினர்.

*அத்தாய்.*
*அல்வாய் கிழக்கு,*

(C/351380(42-21-19-17)

## பிரபல இசைக் கலைஞர் குலசீலநாதன் காலமானார்

பிரபல கர்நாடக இசைக்கலைஞர் எஸ்.குலசீலநாதன் பிரான்ஸில் காலமானார். அராலி வடக்கு, வட்டுக்கோடடையைச் சேர்ந்த இவர் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் நீண்ட காலமாக கர்நாடக இசைக்குப் பொறுப்பாளராகப் பணியாற்றியவர். மெல்லிசைப்பாடல்களையும் பாடி இசைப் பிரியர்களின் பாராட்டைப் பெற்றவர்.

இலங்கையில் இடம்பெற்ற வன்செயல்கள் காரணமாகப் புலம்பெயர்ந்து பிரான்ஸ் . நாட்டுக்குச் சென்றவர். பிரான்ஸ் நாட்டில் ஆங்கிலமொழியிலும் பிரெஞ்சு மொழியிலும் பாடல்களைப்பாடி பாராட்டைப் பெற்றவர். லண்டன், பிரான்ஸ் ஆகிய நாடுகளில பல இசைக்கச்சேரிகளை நடத்தி புலம்பெயர்ந்து வாழ்கின்ற தமிழ் மக்கள் மத்தியில் பாராட்டுக்களைப் பெற்றவர். சில வருடங்களாக நோய் வாய்ப்பட்டிருந்த இவர் இம்மாதம் 21ஆம் திகதியன்று வெள்ளிக்கிழமை பிரான்ஸில் காலமானார். இறுதிச் சடங்குகள் பிரான்ஸில் நடைபெறும்.(ஐ-175)

## சேக்கிழார் குரு பூசைத்தின நிகழ்வு

யாழ். சைவபரிபாலன சபையின் ஏற்பாட்டில் நாளைமறுதினம் திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு நீராவியடியில் உள்ள நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் சேக்கிழார் குருபூசைத்தின நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.(எ)

## கணனிக்கல்வி

கொழும்பிலிருந்து வருகை தந்திருக்கும் அனுபவம் வாய்ந்த பிரபல கணனி விரிவுரையாளரினால் கணனிக்கற்கைநெறிகள் (Diploma) அடிப்படையிலிருந்து இருந்து வீடுகளுக்கு வந்து கற்பிக்கப்படுகின்றன.

தொடர்பு:
**பாலா மாஸ்ரர்**
T.P: 0777-241823

(32520)(37)

## தயாளன் கொமினிக்கேஷன்

- உள்வரும் அழைப்பு -2ரூபா
- ஞாயிற்றுக்கிழமைகளிலும் மற்றும் தினசரி மாலை 6 மணிக்குப் பின்பும் - 6 ரூபா
- உள்வரும் அழைப்பு - 50 நிமிடத்திற்கு மேல் இலவசம்.

தொ.பே.இல 021-222-3476
021-222-3429
021-222-2061

யாழ்வீதி, மானிப்பாய்.
(மகளிர் கல்லூரி முன்பாக)

(32236)

## வீடு வளவு விற்பனைக்கு

கோப்பாய் பிரதேச செயலர் பகுதியில், கோண்டாவில் கிராமத்தில் இராச பாதையில் 18 பரப்புக் காணியும் ஒரு வீடும் விற்பனைக்குண்டு. காணி உப உணவுப் பயிர்ச்செய்கைக்கு உகந்தது. நேரில் தொடர்பு கொள்ளவும்

இராமநாதன்.
*80,செட்டித்தெரு,*
*நல்லூர்.*

(32195)(37-21-19-17)



☆ புதிய வடிவமைப்பில் நவீன கண்ணாடிகளைப் பெற்றிட....
☆ முக அமைப்பிற்கேற்ப சங்குப் பற்களைப் பொருத்திட.....
☆ மிதப்புப் பற்களுக்குக் கிளிப் பொருத்திக்கொண்டிட கைதேர்ந்த

ஒரே ஸ்தாபனம்

## எரிக் கணேஷ்

பல் கட்டுமிடமும் மூக்குக் கண்ணாடி அகமும்

(சி-35131) (26-19-21-17)

இல.564. 566 ஆஸ்பத்திரி வீதி. யாழ்ப்பாணம் ☎ 2486
கிளைகள்: சுன்னாகம், கொக்குவில் சந்தி.

காரைநகர் களபூமி, பாலாவோடை குறிஞ்சாக்குளி

## ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோவில் தாரண வருஷ
## பிரம்மோற்சவ விஞ்ஞாபனம்

மேற்படி தேவஸ்தான பிரம்மோற்சவம் 24.05.2004 திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 03.06.2004 வியாழக்கிழமை பூங்காவனத் திருவிழாவுடன் பூர்த்தியாகும்.

| | | |
|---|---|---|
| கொடியேற்றம் | - 24.05.2004 | திங்கள் மு.ப. 10.00 |
| வேட்டைத் திருவிழா | - 30.05.2004 | ஞாயிறு பி.ப. 5.00 |
| சப்பறத் திருவிழா | - 31.05.2004 | திங்கள் இரவு 10.00 |
| தேர்த் திருவிழா | - 01.06.2004 | செவ்வாய் காலை 9.30 |
| தீர்த்தத் திருவிழா | - 02.06.2004 | புதன் மு.ப. 10.00 |

மஹோற்சவ குருவும்
தேவஸ்தான குருவும்
பிரம்மஸ்ரீ கு.சண்முகராஜக் குருக்கள
(ஆலய பிரதம குரு)

பாலாவோடை,
களபூமி, காரைநகர்.(32513)
(34-19-17-21)

- அறங்காவலர் சபையினர்.

## சண் மல்ரி ட்றேட் சென்ரர்
## Shan Multy Trade Centre

ஐந்து ஆண்டு நிறைவையொட்டி

**மாபெரும் மலிவு விற்பனை**

22.05.2004 → 29.05.2004 வரை
**10%** கழிவு வழங்கப்படும்.

**Sony, National TV** வகைகள் (19", 20", 21", 25", 29", 34") Deck, Setup Radio, Amplifier [(Pioneer, Marantz, Kenwood) 200w-700w] Sony FH Radio என்பன விற்பனைக்கு உண்டு.

உத்தரவாதத்துடன் வழங்கப்படும்.
வாடிக்கையாளர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்.
நீங்கள் நாடவேண்டிய இடம்:

**சண் மல்ரி ட்றேட் சென்ரர்**
T.P.NO: 2227442.
150, K.K.S. Road, Jaffna.
(New No.232)

(32210)(34-21-17-19)

## முதலாம் ஆண்டு நினைவலைகள்

திருமதி
**புவனேஸ்வரி கணபதிப்பிள்ளை**



அன்னை மடியில் 03-04-1935
ஆண்டவன் அடியில் 04-06-2003

திதி: 23-05-2004

ஆண்டு ஒன்று ஆனதம்மா!
ஆறவில்லை எம் துயரம்
நீண்ட தூரம் செல்வீர் என்று
நினைத்திருக்கவில்லை அம்மா!
பெற்ற தாய் நினைந்து நினைந்து
பெரும் துயரப்படுவது தெரியவில்லையா - அம்மா?
கைபிடித்த கணவர் கதி ஏதுமின்றி
கண்கலங்கி நிற்பதைக் காணவில்லையா - அம்மா?
உங்கள் அன்புச் செல்வங்கள் அனைவரும்
உங்கள் அரவணைப்பு இன்றி. ஆதரவு இழந்து
அழுது புலம்புவது கேட்கவில்லையா - அம்மா?

இன்று (23-05-2004) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறுகின்ற எங்கள் அன்புத் தெய்வத்தின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினரை அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

'புவனவாசா' மட்டுவில் தெற்கு. சாவகச்சேரி.
T.P.No. 0602 213365

- குடும்பத்தினர்.

(32510) (21-17-19)

உதயன்

# திருந்துமா இந்தியா?

இலங்கையில் புதிய அரசு பதவியேற்று ஒன்றரை மாதம் கூட ஆகவில்லை. அதற்குள் இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் தமது 'குசும்பு' வேலைகளைத் தொடர்வதற்காக இரண்டாவது தடவையாகப் புதுடில்லிக்குக் 'காவடி' எடுக்கப்போகின்றார்.

ஈழத்தமிழர்களின் நலன்களுக்கு எதிராகவும், இலங்கைப் பேரினவாத அரசுகளுக்குச் சாதகமாகவும் இந்திய வல்லாதிக்க சக்தியைப் பேணும் முயற்சிகளில் முழுமூச்சுடன் செயற்பட்டு வருபவர் கதிர்காமர் என்பது ஊரறிந்த இரகசியம். இந்திய அதிகார வர்க்கம் இத்தகைய தவறான வலைக்குள் சிக்கிக் கிடப்பது தெரிந்த விடயம். அந்நாட்டில் புதிதாக ஆட்சிப்பீடம் ஏறும் அரசியல் தலைமைத்துவமும் அந்த வலையிலிருந்து மீளாமல் இருப்பதை உறுதிப்படுத்தவே துடியாய்த் துடித்து புதுடில்லி பறக்க முனைகிறார் கதிர்காமர்.

ஆனால், கதிர்காமரும் அவரைக் கோடரிக்காம்பாய்ப் பயன்படுத்தும் சிங்களப் பேரினவாதிகளும் இம்முயற்சியில் இம்முறை குறிப்பிடத்தக்களவு திருப்தியடையும் நிலைக்காவது முன்னேறுவார்களா என்பது கேள்விக்குறியே.

இலங்கையைப் போலவே இந்தியாவிலும் தனித்து ஆட்சியமைக்கப் பலம் பெறாத கட்சியே ஆட்சிக்கட்டில் ஏறுகின்றது. தேர்தல் காலத்திலிருந்த கூட்டணி, வெளியில் இருந்தும் வேறு கட்சிகளைச் சேர்த்து, அதன் மூலம் அறுதிப் பெரும்பான்மையை ஒருவாறு திரட்டிக் கொண்டு ஆட்சி அமைக்கின்றது.

இத்தகைய ஆட்சியில் கூட்டணிக் கட்சிகளின் பலமும், வலுவும் அரசின் ஆட்சியில் அதிக ஆதிக்கம் செலுத்தும் விடயங்களாக இருக்கும் என்பது சொல்லித்தான் தெரியவேண்டும் என்பதல்ல.

அந்தவகையில், ஈழத் தமிழர்களுக்கும் அவர்களது விடுதலை வேட்கைக்கும் தீவிர ஆதரவைச் சளையாது வெளிப்படுத்தி வரும் ம.தி.மு.கவுக்கும், பாட்டாளி மக்கள் கட்சிக்கும் புதிய இந்திய அரசில் முக்கிய இடம் உள்ளது. இது விடயத்தில் தி.மு.கவும் சளைத்தது என்று கூறிவிட முடியாது.

எனவே, முன்னைய இந்திய அரசுகளுக்கு கதிர்காமர் போன்ற இலங்கை அரசுத் தரப்பினர் விட்ட கயிறோ -

அல்லது இந்திய அதிகார வர்க்கத்தினர் தமது செல்வாக்கு மூலம் பழைய ஆளும் அரசியல் தலைமைக்கு விட்ட கயிறோ -

இந்தப் புதிய அரசிடமோ அல்லது புதிய ஆளும் தரப்பிடமோ சுலபமாகச் செல்லுபடியாகும் என்று எதிர்பார்க்க முடியாது.

அரசில் முக்கிய 'செல்வாக்கு' செலுத்தப் போகின்றவர்களுள் ஒருவரான வைகோ, புதிய அரசு ஆட்சிபீடத்தைக் கைப்பற்றிய கையோடு தெரிவித்த கருத்துக்கள் இங்கு நோக்கற்பாலது.

யாழ்.மாவட்ட எம்.பியான சிவாஜிலிங்கத்தை சென்னையில் உள்ள ம.தி.மு.க. தலைமையகமான 'தாயகத்தில்' ஒரு வாரத்துக்கு முன்னர் சந்தித்த வைகோ, "இந்தியாவில் அமையவுள்ள புதிய அரசு ஈழத் தமிழர்களுக்கு எதிராகச் செயற்பட முடியாதவாறு தடுக்கும் வேலையை எங்களால் செய்யமுடியும்" - என்று உறுதியளித்திருந்தார். இத்தகவலை சிவாஜிலிங்கமே வெளியிட்டிருக்கிறார்.

இதேபோன்ற கருத்தை நாகரிகமான வசனங்களில் பி.பி.ஸிக்கு அளித்த பேட்டியில் வைகோ வெளியிட்டிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

"ஈழத் தமிழர்களின் ஏகப்பிரதிநிதிகளாகப் புலிகள் தான் இருக்கின்றார்கள் என்பதை சர்வதேச சமூகமே ஒப்புக்கொண்டிருக்கின்றது. இந்தச் சூழ்நிலையில், ஈழத் தமிழரின் தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் விடயத்தில் இந்திய அரசின் அணுகுமுறையில் மாற்றம் வேண்டும். இந்தியா ஆக்கபூர்வமாகப் பங்களிக்க முன்வர வேண்டும். நோர்வே அனுசரணையில் நடக்கும் அமைதிப் பேச்சுக்களுக்கு இந்தியா உதவவேண்டும்"- என்று வைகோ வலியுறுத்தியிருக்கின்றார்.

'வேண்டாப்பெண்டாட்டி கைபட்டால் குற்றம்; கால் பட்டால் குற்றம்' என்ற கணக்கில் ஈழத்தமிழர்களின் ஏகப்பிரதிநிதிகளான விடுதலைப் புலிகளை ஒதுக்கி வைத்துவிட்டு இலங்கை விவகாரத்தில் ஓடிப்பிடித்து விளையாடி வருகின்றது இந்தியா.

அந்தப்போக்கும் அணுகுமுறையும் தவறானது என்பதை வைகோ சுட்டிக்காட்டித் தெளிவுபடுத்துகின்றார்.

புதிய அரசிடம் இந்தத் தவறுகளைத் திருத்திக் கொண்டு செயற்படுத்த வலியுறுத்துவோம் என்றும் அவர் கூறியிருக்கின்றார்.


அது மட்டுமல்ல, இந்தியாவுடன் இராணுவ ஒப்பந்தம் ஒன்றைச் செய்துகொள்ளும் இலங்கையின் முயற்சியையும் அவர் ஆட்சேபித்திருக்கின்றார்.

வஞ்சமாக இலங்கை அரசு மேற்கொள்ளும் மோசடி வலைக்குள் இந்தியா சிக்கக்கூடாது என்றும் வைகோ வற்புறுத்திக் கூறியிருக்கின்றார்.

புதிய அரசுக்குள் செல்வாக்குச் செலுத்தக் கூடிய வைகோ போன்றவர்கள் முக்கிய இடத்தைப் பிடித்திருப்பதால் கதிர்காமர் போன்றோரின் 'பாச்சா' புதிய இந்திய அரசிடம் எடுபடுவது என்பது துர்லபமே.

இனிமேலாவது இந்திய அதிகார வர்க்கமும் ஆளும் தரப்பும் தங்களைத் திருத்திக்கொண்டு ஈழத் தமிழர்களுக்கு உரியதை - நல்லதை - செய்ய முன்வரும் என நம்புவோமாக! எதிர்பார்ப்போமாக!

## காலத்தின் பதிவு



வடக்கிலிருந்து போவதும் தெற்கிலிருந்து வருவதும். படம்: தீபன்.

# நவாலி அட்டகிரிப் பாடசாலையில் இன்று இலவசச் சட்ட உதவிச் சேவை

யாழ்ப்பாணம்,மே23

அகதிகளுக்கான ஐ.நா.தூதரகத்தின் அனுசரணையுடன் இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கத்தின் சட்ட உதவி மன்றம் நடத்தும் இலவச சட்ட உதவிச் சேவை இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு நவாலி அட்டகிரி பாடசாலை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இது தொடர்பாகச் சட்ட உதவி மன்றத்தின் யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்பாளர் செல்வி சாந்தா அபிமன்னசிங்கம் தெரிவித்துள்ளதாவது:

இந்தச்சேவையில் சிறுவர்களின் உரிமை, மனித உரிமை, பெண்கள் உரிமை, இடம்பெயர்ந்தோர்கள் உரிமை, முதியோர் உரிமை என்பன பற்றிய விளக்கங்கள் சட்டத்தரணிகளால் வழங்கப்படும்.

அத்துடன், இடம்பெயர்ந்தோர்கள், மீளக்குடியமர்ந்தோர்கள், குற்றச் செயல்களால் பாதிக்கப்பட்டோர்கள், மனித உரிமை மீறல்களால் பாதிக்கப்பட்டோர்கள், முதியோர்கள், வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ளோர்கள், வெளிநாடுகளில் பணிபுரிந்து பாதிக்கப்பட்ட பெண்கள் ஆகியோருக்கு சட்ட ஆலோசனைகளைச் சட்டத்தரணிகள் இலவசமாக வழங்கவுள்ளனர். தேவைப்படுமிடத்து சட்ட உதவி மன்றத்தினால் வழக்குகள் இலவசமாக நடத்தப்படும்.

மேலும், உள்ளூரில் இடம்பெயர்ந்தோர்களினதும், இலங்கையின் பிற மாவட்டங்களிலிருந்தும், இந்தியாவின் முகாம்களிலிருந்தும் மீளக் குடியமர்ந்தவர்களினதும் வறுமைக்கோட்டிற்குக் கீழ் உள்ளோர்களினதும் தேசிய அடையாள அட்டை, பிறப்பு இறப்பு, திருமணச் சான்றிதழ்கள், அவர்களின் காணாமறபோன உறுதிகள் என்பனவும் இலவசமாகப் பெற்றுக் கொடுக்கப்படும்.

சட்ட உதவி மன்றத்தினால் நடத்தப்படும் இச்சேவையில் மேறகுறிப்பிட்ட விடயங்கள் தொடர்பாக நீதியைப் பெற்றுக் கொள்வது தொடர்பான அறிவுறுத்தல்களும் வழங்கப்படவுள்ளதால், இதில் பங்குகொண்டு, சேவையைப் பெற்றுப் பயனடைய அனைவரையும் அழைக்கின்றோம் - என்றார் அவர்.

# கட்டைப்பிராய்ப் பகுதியில் திருட்டை ஒழிக்க விழிப்புக் குழு

யாழ்ப்பாணம்,மே23

இருபாலை, கட்டைப்பிராய்ப் பகுதியில் திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்துள்ளதையடுத்து அப்பகுதியில் விழிப்புக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

அவ்வூரில் அமைந்துள்ள 'கலைமணி' சனசமூகநிலைய நிர்வாகத்தின் ஏற்பாட்டில் கோப்பாய்ப் பொலீஸாரின் அனுமதியுடன் இந்த விழிப்புக்குழு அமைக்கப்பட்டுள்ளது.

சுமார் 50இற்கும் மேற்பட்ட அங்கத்தவர்களைக்கொண்ட இக்குழுவின் தலைவராக அவ்வூர்வாசியான கிராமசேவையாளர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

கோப்பாய்ப் பொலீஸ் பொறுப்பதிகாரியின் தலைமையின் கீழ் இக்குழுவின் தெரிவுக்காக நேற்று முன்தினம் இடம்பெற்ற கூட்டத்தில் தெரிவான விழிப்புக்குழு நேற்று முன்தினம் இரவுமுதல் பணியினை ஆரம்பித்துள்ளது.

இக்குழுவில் உள்ள அங்கத்தவர்கள் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு தலா ஒரு நாளைக்கு ஒரு பிரிவினர் என்ற வகையில் சுழற்சி முறையில் தொடர்ந்து பணியாற்றவுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-15)

# சங்கானை தபால்நிலையத்துக்கு தொலைபேசி இணைப்பு இல்லை

வலி.மேற்கு,மே23

சங்கானைத் தபால் நிலையத்துக்குப் பணம் செலுத்தியும் தொலைபேசி இணைப்பு வழங்கப்படவில்லை என்று கூறப்படுகிறது.

சங்கானைத் தபால் நிலையத்துக்குத் தொலைபேசி இணைப்பு வழங்குமாறு இப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்தனர். இதனைத் தொடர்ந்து கடந்த ஐந்து மாதங்களுக்கு முன்னர் தபால் திணைக்களத்தினர் ரெலிக்கொம் நிறுவனத்துக்கு பணத்தைச் செலுத்தியுள்ளனர். ஆனால், இன்றுவரை தொலைபேசி இணைப்பு வழங்கப்படவில்லை. (ஒ-175)

# விதிகளுக்கு முரணான இடமாற்றங்கள்; எழுதுவினைஞர்கள் விசனம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,மே23

மாகாண அமைச்சினால் எழுதுவினைஞர்களுக்கு வழங்கப்பட்டுள்ள இடமாற்றமானது நியமனத் தாபனக்கோவைச் சட்டங்களுக்கு முரணானதெனச் சம்பந்தப்பட்ட எழுதுவினைஞர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

எழுதுவினைஞர் தாபனக் கோவையின் பிரகாரம் எழுது வினைஞர்கள் அவர்களின் வதிவிடப் பிரதேசங்களை அண்மித்த திணைகளங்களிலேயே சேவைக்கு அமர்த்தப்பட வேண்டும் என்றும்-

50 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு இடமாற்றம் வழங்கப்படக்கூடாது என்றும் - விதிமுறைகள் உள்ளன.

ஆனால், இவற்றுக்கு முரணாக இந்த இடமாற்றங்கள் இடம்பெற்றுள்ளன எனச் சம்பந்தப்பட்ட எழுதுவினைஞர்கள் தெரிவித்துள்ளனர். சம்பந்தப்பட்ட அமைச்சருக்கு இது தொடர்பாகத் தமது ஆட்சேபனையை அவர்கள் அனுப்பிவைத்துள்ளனர்.

கடந்த வருடங்களைப் போல் அன்றி இந்த வருடத்தில் அதிக எண்ணிக்கையானவர்களுக்கு இடமாற்றங்கள் வழங்கப்பட்டுள்ளன. (ஒ-10)

## நாளை

வைகாசி 11
திங்கட்கிழமை
(24.05.2004)
திதி : பஞ்சமி
இரவு 7.32 வரை.
நட்சத்திரம்: புனர்பூசம்
காலை: 6.58 வரை.
சுபநேரம்: 11.52 - 01.22
ராகுகாலம்: 7.22 - 8.52
(பழைய நேரப்படி)

## உதயவாக்கு

நல்ல மனசாட்சி தான் கடவுளின் குரல்.

# வடமராட்சி கிழக்குப் பகுதியில் 25 வீடுகள் அமைக்கத் திட்டம்

செம்பியன்பற்று,மே2.

வடமராட்சி கிழக்கு உதவி அரச அதிபர் பிரிவிற்கு பரீட்சார்த்தமாக 25 வீடுகள் கட்டிக்கொடுப்பதற்கு உலக வங்கி முன்வந்துள்ளது.

அண்மையில் உலக வங்கி அபிவிருத்தித் திட்ட அதிகாரி வடமராட்சி கிழக்கிற்கு விஜயம் செய்து இராணுவ நடவடிக்கையால் சேதமடைந்த வீடுகளைப் பார்வையிட்டுச் சென்றுள்ளார்.

இந்த அடிப்படையில் வடமராட்சி கிழக்கிற்கு பரீட்சார்த்தமாக 25 வீடுகள் கட்டிக் கொடுக்கப்படவுள்ளன என வடமராட்சி கிழக்கு உதவி அரச அதிபர் வி.ப வேலாயுதபிள்ளை தெரிவித்தார். (ஒ-36)

# ஒட்டுசுட்டான் - புதுக்குடியிருப்பு வீதியில் 6 பாலங்கள் சேதம்

முல்லைத்தீவு,மே23

முல்லைத்தீவு - ஒட்டுசுட்டான் - புதுக்குடியிருப்பு வீதியில் உள்ள ஆறு பாலங்கள் மிக மோசமான நிலையில் பழுதடைந்துள்ளன. இதனால், இவ்வீதி வழியே பயணஞ்செய்யும் மக்கள் பெரும் இடர்களை எதிர்நோக்க நேரிட்டுள்ளது.

பாலங்கள் உடைந்த நிலையில் இருப்பதால் மழைக் காலங்களில் மழைநீர் வீதியில் தேங்கி நிற்கின்றது.

இதன் காரணமாக பாடசாலை மாணவர்கள், வர்த்தகர்கள், விவசாயிகள் போன்றோர் தமது செயற்பாடுகளை மேற்கொள்வதில் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர். தற்போதைய வெயில் காலத்திலாவது இந்தப் பாலங்களைப் புனரமைக்கும்படி பொதுமக்கள் கோரி வருகின்றனர். (ஒ-12)

## சந்நிதியான் ஆச்சிரமத்தின்

# வைகாசிப் பெருவிழாவில் வேலும்மயிலும் விருது பெறுவார்

வடமராட்சி,மே23

தொண்டைமனாறு சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவை நடத்தும் வைகாசிப் பெருவிழாவில் வழங்கப்படும் விருதும் பட்டமும் இம்முறை திருகோணமலை பட்டணமும், சூழலும் பகுதிக்கான முன்னாள் பிரதேச செயலர் வி.வேலும்மயிலுவுக்கு வழங்கப்படவுள்ளது.

பல்வேறு துறைகளில் சிறப்பான, சேவைகளைப் புரிந்த யாழ்.குடாநாட்டு வாசி ஒருவருக்கு சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப்பேரவை வருடந்தோறும் விருதும் பட்டமும் வழங்கிப் பொன்னாடை போர்த்திக் கௌரவிப்பது வழக்கம்.

அவ்வரிசையில் வல்வெட்டித்துறையைச் சேர்ந்த வி.வேலும்மயிலுவுக்கு இவ்வருடம் அந்தக் கௌரவம் கிடைக்கவுள்ளது. இவர் பல்வேறு திணைக்களங்களில் சிரேஷ்ட எழுதுவினைஞராகக் கடமையாற்றி உதவி அரச அதிபராகப் பதவி உயர்வு பெற்றவர். பருத்தித்துறை உதவி அரச அதிபராக நீண்ட காலம் பணியாற்றி பின்னர் நெருக்கடி மிகுந்த யுத்தச் சூழ்நிலையில் திருகோணமலைப் பட்டணமும் சூழலும் பிரதேச செயலராகக் கடமையாற்றினார்.

யாழ்ப்பாண மாவட்ட மக்கள் கொழும்பு செல்வதற்கு திருகோணமலைக்குக் கப்பல் மூலம் பயணம் செய்ய வேண்டிய காலத்தில், கப்பல் பயணங்களை செவ்வனே வழிநடத்தி மக்களுக்குப் பெரிதும் சேவை செய்தார்.

எதிர்வரும் 30ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் வைகாசிப்பெருவிழாவில் வி.வேலும்மயிலும் விருதும் பட்டமும் வழங்கிப் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்படவுள்ளார். (அ-173)

# தேசியத் தலைவரின் தூரநோக்கினால் அரசின் எண்ணம் பகற்கனவாகியது!

## அரசறிவியல் பள்ளிப் பொறுப்பாளர் உரை

வடமராட்சிகிழக்கு,மே23

"யாழ்.போதனா வைத்தியசாலையை தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருவதன் மூலம் தமிழீழ விடுதலைப் புலிகளின் போராட்டத்தை நசுக்கி விடலாம் என அரசு எண்ணியது. ஆனால, தேசியத் தலைவர் வே.பிரபாகரனின் தூரநோக்குடன் விடுதலைப் புலிகள் தனியான மருத்துவ சேவை பிரிவினை ஏற்கனவே ஆரம்பித்திருந்தமையால் சிங்கள அரசின் எண்ணம பகற்கனவாகியது"

தூயவன் அரசறிவியல் பள்ளியின் பொறுப்பாளர் அரசண்ணா அண்மையில் வடமராட்சி கிழக்கு ஆழியவளையில் தியாக தீபம் திலீபனின் மருத்துவ சேவையின் இரண்டாவது ஆண்டு நிறைவு விழாவில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றும் போது இவ்வாறு குறிப்பிட்டார்.

இந்த நிகழ்வு வடமராட்சி கிழக்கு புனர்வாழ்வு, புனரமைப்புக்குழுத் தலைவா சி.பொன்னம்பலம் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் அரசண்ணா தொடர்ந்து உரையாற்றும்போது கூறியதாவது:-

ஸ்ரீலங்காப்படையினரால் 1996ஆம் ஆண்டு யாழ். நகரை நோக்கி மேற்கொள்ளப்பட்ட படை நடவடிக்கையினால் எமது மக்கள் பாரிய இடப்பெயர்வு ஒன்றினைச் சந்திக்க வேண்டி ஏற்பட்டது. யாழ்.நகரில் அமைந்திருந்த போதனா வைத்தியசாலையினை தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருவதன் மூலம், போரின் போது காயமடைகின்ற போராளிகளுக்கு சிகிச்சை அளிப்பதைத் தடைசெய்து, புலிகளின் போராட்ட சக்தியை நசுக்கி விடலாம் என அரசு எண்ணியது. ஆனால், போரில் காயமடைகின்ற போராளிகளுக்கு சிகிச்சை அளிப்பதற்கும், பராமரிப்பதற்கும் எமது தேசியத தலைவர் வே.பிரபாகரன் மிகத்தூர சிந்தனையுடன் ஏற்கனவே எமது இயக்கத்திற்கென்றொரு மருத்துவ சேவை பிரிவொன்றினை ஆரம்பித்திருந்தமையினால் அரசின் எண்ணம் பகற்கனவாகவே போனது.

போராளிகளுக்கு சிகிச்சை அளிப்பதற்காக ஆரம்பிக்கப்பட்ட மருத்துவ சேவைப்பிரிவு, அரசின் அடக்கு முறையினால் அல்லற்படுகின்ற மக்களுக்கு தியாக தீபம் திலீபன் மருத்துவ சேவை என்ற பெயரில் தனது மருத்துவப்பணியினை இன்று செய்கின்றது.

தியாக தீபம் திலீபன் இந்திய ஒடுக்கு முறைக்கு எதிராக 5 அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து உண்ணாநோன்பிருந்து வீரச்சாவைத் தழுவிக் கொண்டார். திலீபன் "மக்கள் புரட்சி வெடிக்கட்டும் சுதந்திரத் தமிழீழம் மலரட்டும்" எனக்கூறிச் சென்றார். அவரது சிந்தனை செயல்வடிவம் பெற்று வருவதினை இன்று காணக்கூடியதாகவுள்ளது.

துன்பப்படுகின்ற மக்களுக்குச் சேவைசெய்வது தான் அரசியல் என எமது தேசியத் தலைவர் கூறுவார். தியாக தீபம் திலீபன் மருத்துவ சேவை வடமராட்சி கிழக்கில் கடந்த இரண்டு வருடங்களாக மீளக்குடியமர்ந்த மக்களுக்கு அளப்பரிய சேவையினை ஆற்றி வந்துள்ளது. இப்பணியில் ஈடுபட்டுவருகின்ற மருத்துவர் செல்வி ஈழவாணியும் அவரோடு இணைந்த கடமையாற்றுகின்றவர்களும் பாராட்டப்பட வேண்டியவர்கள்" என்றார். (ஒ-182)

# சிறுவர் துஷ்பிரயோகத்தில் இலங்கைக்கு மூன்றாமிடம்

வலிகாமம் தெற்கு,மே23

சிறுவர்கள் மீதான துஷ்பிரயோகத்தில் உலகிலே மூன்றாம் இடத்தை இலங்கை வகிக்கிறது என்ற மிகக் கசப்பான தகவலை ஐ.நா.சிறுவர் பாதுகாப்பு நிதியம் (யுனிசெவ்) தெரிவித்துள்ளது.

இலங்கையில் சிறுவர் பாலியல் துஷ்பிரயோகம் மிக மோசமான நிலையில் இடம்பெற்று வருகின்றது. 20 சதவீதமான சிறுவர்கள் இவ்வாறான துஷ்பிரயோகத்தில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றனர். சிறுவர் பாதுகாப்பு நிதியத்தால் வெளியிடப்பட்ட இதனைத் கூறுகின்றன.

உலகம் முழுவதும் பத்து லட்சத்துக்கும் மேற்பட்ட சிறுவர்கள் பாலியல் தொழிலில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றனர். சிறுவர்களை இத்தொழிலில் ஈடுபடுத்துவதில் தாய்லாந்து முதலாம் இடம்வகிக்கின்றது. பிலிப் பைன்ஸ இரண்டாம் இடத்திலும் இலங்கை மூன்றாம் இடத்திலும் உள்ளன.

இலங்கையில் 30 ஆயிரம் முதல 40 ஆயிரம் வரையான சிறுவர்கள் இவ்வாறு பாலியல் ரீதியான துஷ்பிரயோகங்களில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றனர் என்ற கசப்பான தகவலையும் சிறுவர் பாதுகாப்பு நிதியம் வெளியிட்டிருக்கிறது.

இந்த நிலை தொடர்பான விழிப்புணர்வு இலங்கையில் ஏற்படுத்தப்பட வேண்டும் என்றும் அரசும், அரசசார்பற்ற நிறுவனங்களும் விரைவாக இது தொடர்பான புதிய செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டும் என்றும் ஐ.நா.சிறுவர் பாதுகாப்பு நிதியம் கேட்டுள்ளது. (ஒ-152)




### தென்மட்டுவில் - வேரற்கேணி
### தருவருள்மிகு ஸ்ரீ கந்தசுவாமி திருக்கோயல
### திவ்விய மஹோற்சவ விஞ்ஞாபனம் - 2004

கொடியேற்றம் : தாரண வருஷம் வைகாசி 11ஆம் நாள் (24.05.2004) திங்கள் பகல் 12.00 மணி.
வேட்டைத்திருவிழா: தாரண வருஷம் வைகாசி 18ஆம் நாள் (31.05.2004) திங்கள் மாலை 5.00 மணி
சப்பரத்திருவிழா: தாரண வருஷம் வைகாசி 18ஆம் நாள் (31.05.2004) திங்கள் இரவு 8.00 மணி
தேர்த்திருவிழா : தாரண வருஷம் வைகாசி 19ஆம் நாள் (01.06.2004) செவ்வாய் பகல் 11.00 மணி
தீர்த்தத்திருவிழா: தாரண வருஷம் வைகாசி 20ஆம் நாள் (02.06.2004) புதன் பகல் 12.00 மணி
பூங்காவனத் திருவிழா தாரண வருஷம் வைகாசி 21ஆம் நாள் (03.06.2004) வியாழன் மாலை 5.00 மணிக்கு அபிஷேகமும் திருக்கல்யாண உற்சவமும் நிகழும்.
பிராயச்சித்தம், வைரவர் மடை வைகாசி 22 ஆம் நாள் 04.06.2004 வெள்ளி மாலை 4.00 மணி.
தேவஸ்தான உற்சவ பிரதம குரு சிவாச்சாரிய திலகம் குகஸ்ரீ க.ச.சோமாஸ்கந்தக் குருக்கள்
தினசரி மாலை 6.30 மணிக்கு சைவப்புலவர் - திருவருள் வாசகர் திரு. சி.கா.கமலநாதன் (ஆசிரியர், சாவகச்சேரி இந்துக்கல்லூரி) அவர்களின் தெய்வீகச் சொற்பொழிவு இடம்பெறும்.
★ தினமும் திருவிழா காலை 9.00 மணிக்கும் மாலை 5.00 மணிக்கும் ஆரம்பமாகும்.

அடியார்கள் வருக! அருள் பெறுக!!

தென்மட்டுவில்,
வேரற்கேணி. (32230)(36) - ஆலய பரிபாலன சபையினர்.



### CEYLON MEDICAL COLLEGE COUNCIL
### PHARMACIST'S EXTERNAL EXAMINATION COURSE
புதிய வகுப்புக்கள் ஆரம்பமாக உள்ளன.

கல்வித்தகைமை:- G.C.E O/L விஞ்ஞானம் விசேட சித்தி கணிதம், ஆங்கிலம் சாதாரண சித்தி
வயது: எல்லை இல்லை
G.C.E A/L விஞ்ஞானத்துறை மாணவர்களுக்கு உகந்தது.
மேலதிக விவரங்களுக்கு: 27-05-2004 வியாழக்கிழமை காலை 9மணிக்கு நேரில் வாருங்கள்.

இடம்: சாயிராம் பார்மசி கல்வி, பட்டப்படிப்புக்கள் கல்லூரி
57/13, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (32200)



### CATWAS. COM
Computer Academy

உலக நாடுகளில் பிரபல்யம்பெற்று முன்னிலையில் இருக்கும் UK Microsoft நிறுவனத்தின் ஆதரவைப் பெற்றதும் அமலமரித் தியாகிகள் அருட் தந்தையர்களின் நெறிப்படுத்தலில் யாழ். மாவட்டத்தில் கணனிப் பயிற்சிகளை பிரபல்யமாக நடத்திவருகின்ற CATWAS.Com. A/L பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கான புதிய பிரிவுகளை ஆரம்பிக்கவுள்ளது.

DIPLOMA COURSE
1. Ms Office
2. Desktop Publishing
3. Hardware
4. Web page
5. Video Mixing

விண்ணப்பங்கள் யாவும் 10.05.2004 இற்கு முன்னர் நேரடியாகவோ அல்லது தபால்மூலமோ ஏற்றுக்கொள்ளப்படும்.
கணனியில் ஏற்படும் சகலவிதமான திருத்த வேலைகளும் செய்துகொடுக்கப்படும்.

CERTIFICATE COURSE
Word XP, Excel XP, Access XP, Power point XP, Pagemaker 7, Corel Draw II, Photo shop 7, Cool 3D, Visual Basic, Studies 8, Premier.

26, Somasundram Avenu,
(சி-35109)(34) Chundikuli, Jaffna. T.P.:021-222 3805.



### முதலாவது பிறந்தநாள் வாழ்த்து



கொழும்புத்துறை
கிருஷ்ணபாலன் - அன்பரசி
தம்பதிகளின் அன்பு மகள்

**கஜனி** (கனி)

இன்று (23.05.2004) ஞாயிறு தனது முதலாவது பிறந்த நாளை இல.73, இலந்தைக்குளம் வீதி, அரியாலையில் உள்ள தனது இல்லத்தில் குதூகலமாகக் கொண்டாடுகின்றார்.

இவரை அப்பா, அம்மா, அம்மப்பா, அம்மம்மா, அப்பம்மா, பெரிய மாமா, பெரிய அத்தை, சின்னமாமா, சின்ன அத்தை, சித்தப்பா, சித்தி, அண்ணன் பானுஷன் மற்றும் உற்றார், உறவினர் அனைவரும் நாச்சியம்மன் அருள் பெற்று சகல சௌபாக்கியங்களுடன் பல்லாண்டு வாழ வாழ்த்துகிறார்கள்.

வேலணைகிழக்கு.
வேலணை (4).
(C/35102)(40)

தகவல்:
Dr. ஐ.பாலசுப்பிரமணியம் - நாகரத்தினம்
(அம்மப்பா - அம்மம்மா).



### ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
**செல்வன் தூ.போல்கஜேந்திரன்**
(ஆண்டு 07 சென்.ஜோன்ஸ் கல்லூரி மாணவன்)
பிறப்பு: 12.10.1986 இறப்பு: 23.05.1998



ஆறு ஆண்டுகள் சென்றாலும்; ஆறாத நம் துயரம்
ஆண்டவர் பாதம் தஞ்சமென, ஆவலுடன் நீ சென்றாயோ!

தகவல்:
வே.தூயகுமாரன் (அப்பா)
இல.28/3. திருமகள் வீதி. அரியாலை. (32222)

என்றும் உன் பிரிவால் வாடும்:
அப்பா, அம்மா,
தங்கை, தம்பிமார்.
(21-12-24)



### யாழ்ப்பாணத்தில் விசேட பயிற்சி
### ஸ்கிரீன் பிரிண்டிங்



Gutenberge Father of Printing



புதிய தொழில் நுட்ப வரவுகளை
இந்தியாவிலிருந்து
வருகை தந்திருக்கும்
அச்சுக்கலை நிபுணர்

R.பரதன் யாழ்ப்பாணத்தில் இம்மாதம் 26, 27ஆம் திகதிகளில் ஒரு பிரிவும் 29, 30 ஆம் திகதிகளில் இரண்டாம் பிரிவுமாக இரண்டு நாள்கள் பயிற்சிகள் நடத்தவுள்ளார். பயிற்சிபெற விரும்புவோர் உடன் தொடர்புகொள்ளவும்.


பயிற்சியில் பொலிமர், ஸ்டாம்ப் தயாரித்தல், பித்தளை செம்பு, பெயர்ப் பலகை, ஷீல்டு அவார்கேள் செய்தல், கீ செயின், பேப்பர் எம்போஸ் மற்றும் புளோக் செய்தல் (Block Making), விசேட திருமண அழைப்பிதழ் செய்தல், ஸ்டிக்கர் நீங்களே தயார் செய்தலும், பிரிண்டிங் செய்தலும், டோமிங் என்னும் புதிய பிரிண்டிங் முறை, கிலிட்டர் பிரிண்டிங் பொலித்தீன்களில் 4 கலர் பிரிண்டிங் செய்தல் முதலியன செய்முறையில் விளக்கம் அளிக்கப்படும்.

தொடர்பு முகவரியும் வகுப்பு நடைபெறும் இடமும்
**London Language School**
இல. 774, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 0777 706334, 0777108423
(32212) (24)



### 31ஆம் நாள் நினைவஞ்சலியும்
### வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம் 20 - 02 - 1947



மறைவு 23 - 04 - 2004

அமரர் **குமாரசுவாமி தேவராசா**

23.04.2004 அன்று காலமான எமது அன்புத் தெய்வத்தின் நினைவாக இன்று (23.05.2004) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தல் நடைபெறும் வீட்டுக்கிருத்திய ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மற்றும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

வீரபத்திரர் கோவில் வீதி,
கல்வியங்காடு. (32218)(24)
- குடும்பத்தினர்.

நான் ஆயுள் காப்புறுதி ஒன்றைக் கேட்டேன்.



அதனுடன் அவர்கள் எனது பிள்ளைக்கு புலமைப்பரிசில் ஒன்றையும் கொடுத்தார்கள்.

செலிங்கோ லைஃப் எனக்கு வழங்கும் கவனிப்பு ஆயுள் காப்புறுதியை விட அதிகமாகவுள்ளது. நான் எனக்கு ஆயுள்காப்புறுதியை எடுத்தபோது, எனது பிள்ளைக்கு தானாகவே செலிங்கோ பிரணாம புலமைப்பரிசிலுக்கு தகுதி கிடைத்தது. எனது வாழ்க்கையில் செலிங்கோ லைஃப் இன்சூரன்ஸ் பங்குதாரராக இணைந்தமை குறித்து நான் மகிழ்ச்சியடைகிறேன்.

செலிங்கோ லைஃப். எதிர்பார்ப்புகளுக்கு அப்பாற்பட்டது.



செலிங்கோ லைஃப்

இல. 134, காலி வீதி, கொழும்பு 03.
தொ.பே: 2461461 ஃபெக்ஸ்: 2437613
வெப்தளம்: www.ceylincolife.com
ஈ-மெயில்: service@ceylife.lk
பதிவுசெய்த காப்புறுதியாளர்


PHOENIX O&M 6844

# COMPUTER COURSES

New Batches Start on
Batch 1 : 05.06.2004
Batch 2 : 07.06.2004
Batch 3 : 19.06.2004
at 10.00 a.m



உங்கள் முயற்சிக்கு...



இலங்கையிலும், சர்வதேச ரீதியிலும் அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்



Diploma in Computer Programming

Diploma in Java Programming

Diploma in Visual C Programming

Diploma in Visual Basic Programming

Diploma in Information Technology

Edexcel International
BTEC HND
World Class Qualifications
Delivered Locally
Recognized Globally

AN INTERNATIONALLY RECOGNIZED CERTIFICATE COURSE IN COMPUTERIZED ACCOUNTING

NEXT EX GENERATION

Diploma in MS Office

Diploma in Internet Technology

Diploma in Hardware Technology

Diploma in Eng. Drawing & AutoCAD

Diploma in Desk Top Publishing

Adobe PageMaker, Adobe Photoshop 07, Adobe Premiere, Macromedia Flash, Corel DRAW, MS Word, MS Excel, MS Access, ORACLE 9i, Pascal

கணனிக் கல்விக்குத் தனித்துவம் மிக்க IIS நிறுவனத்தில் இணைவதனூடாகக் கணனி உலகில் நீங்கள் அங்கீகரிக்கப்படுகின்றீர்கள்.

INSTITUTE OF INFORMATICS STUDIES ( IIS )
An *Edexcel* Approved Training Centre
Head Office: IIS, 100, Clock Tower Road, Jaffna
T.P No: 021-222 2831 Email: iis@sltnet.lk
Branch: IIS, Nelliyady, Karaveddy
T.P No: 021-226 3335


## மாவீரர் படிப்பகம் பொதுமக்கள் பாவனைக்கு

செம்பியன்பற்று,மே23

மருதங்கேணி இ.த.பாடசாலையில் மாவீரர் லெப்.கேணல் கலாத்தன் நினைவாக அமைக்கப்பட்ட படிப்பகத்தினை பொதுமக்கள் பாவனைக்குப் பாடசாலை நிர்வாகம் திறந்து விட்டுள்ளது.

இதன்படி காலை 8.30 மணி தொடக்கம் மாலை 2.30 மணிவரை பாடசாலை மாணவர்களுக்கும் மாலை 3 மணி தொடக்கம் 6 மணி வரை பொது மக்கள் பாவனைக்கும் படிப்பகம் திறந்து விடப்படும். (ஒ-36)

## கூட்டுறவுச் சபைக்கு புதிய செயலாளர்

அரியாலை,மே23

யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபையின் செயலாளராக பொ.சண்முகசுந்தரம் நியமிக்கப்பட்டுள்ளார்.

சபையின் செயலாளராக முன்னர் கடமையாற்றிய சு.சிவசுப்பிரமணியம் பதவியில் இருந்து ஓய்வு பெற்றுச் சென்றுள்ளார்.

புதிய செயலாளர் மாவட்டக் கூட்டுறவுக் கல்லூரியின் அதிபராக முன்னர் கடமையாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

(ஒ-17)


**SALES REP.**

A.C.L. CAVLE LTD. ஸ்தாபனத்துக்கு விற்பனைப் பிரதிநிதி தேவை.
ஆங்கிலம் பேச, எழுத வாசிக்கத் தெரிந்திருக்கவேண்டும்.
26.05.2004 புதன் காலை 9.00 மணிக்கு முழு விவரங்களுடன் நேரில் சமுகமளிக்கவும்.
**NEWTONE ELECTRICAL**
442, 440, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(32209)

**காணி விற்பனைக்கு**

ஊரெழு பொத்து வீதி, சுன்னாகத்தில் அமைந்துள்ள 'மயிலன்கல்லடி' எனப்படும் காணி (60 Laarchems) விற்பனைக்குண்டு. (சுன்னாகம் வீதியையும் பலாலி வீதியையும் இணைப்பது Mascons காணிக்கு முன்னால்).
தொடர்புகளுக்கு:
Fax: 0112598934
T.P.: 0112587332
Colombo
(31770)



பெயாரோஸ் சுபமாங்கல்யம்

## விரைவில் நீங்கள் திருமணம் செய்து கொள்வதாயின் திருமணத்திற்கான செலவுகளை நாம் ஏற்போம்

2005ம் ஆண்டு மார்ச் மாதத்திற்கு முன்பு திருமணம் செய்து கொள்ளவிருக்கும் ஒரு இளம் பெண் தனக்குப் பிடித்த இடத்தில் திருமணத்தைச் செய்து கொள்ள நாம் உதவி செய்வோம். இதற்கான பெயாரோஸ் சுபமாங்கல்யம் 2004ம் ஆண்டு ஆரம்பித்துவிட்டது.

மணப்பெண்ணின் புடவை, தங்கச் சங்கிலி, பாதணிகள், தோழியர் இருவரின் புடவைகள், ஆபரணங்கள், பாதணிகள், முக அலங்காரம், தலையலங்கார ஆலோசனைகள், மலர் அலங்காரம், மணமேடை அலங்காரம், மேசை அலங்காரம், திருமண கேக், திருமண ஸ்ரக்சர் கேக், திருமண அழைப்பிதழ்/கேக் பெட்டிகள், DJ இசை, புகைப்படங்கள்/வீடியோ படங்கள், 150 பேருக்கான விருந்துபசாரத்துடனான மண்டபச் செலவுகள் இவை அனைத்தையும் வழங்க நாம் தயாராக உள்ளோம்.

ஆறுதல் பரிசாக 10 தங்க நாணயங்கள்.

நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம்
உங்கள் வருங்கால துணைவருக்கும் உங்களுக்கும் இடையில் நடந்த மறக்க முடியாத சம்பவத்தை சுவைபட எழுதி, இருவரும் சேர்ந்து அண்மையில் எடுத்த புகைப்படத்துடன் உங்கள் பெயர், முகவரி, அடையாள அட்டையின் இலக்கத்தையும் குறிப்பிட்டு 25கி அல்லது 50கி பெயாரோஸ் வெற்று உறை அல்லது சஷே உறையை இணைத்து இன்றே எமக்கு அனுப்பி வையுங்கள்.

முடிவுத் திகதி 2004 ஜூலை 31.

பெயாரோஸ் சுபமாங்கல்யம்,
ஹேமாஸ் மார்க்கட்டிங் (பிரைவட்) லிமிட்டட்,
36, பிரிஸ்டல் வீதி, கொழும்பு 01.



நிலங்கா, துஷார்
(2003/2004 பெயாரோஸ் சுபமாங்கல்யம் வெற்றியாளர்)

Fair Rose
Fairness Cream
With Rosewater & Sandalwood Paste



மென்மையான சருமத்திற்கு வெண்மையான முகத்திற்கு

மலர் அலங்கார அனுசரணையாளர் Sterling Flowers (Pvt) Ltd.,
சிகை அலங்கார அனுசரணையாளர் Salon Nayana
தங்க நகைகளுக்கான அனுசரணை
புடவைக்கான அனுசரணை SAREE MANDIR

# சைவ உலகிற்கு மகிழ்ச்சிதரும் கேதீஸ்வரர் ஆலய மகோற்சவம்

சரித்திரப் பிரசித்திபெற்றதும் சம்பந்தர், சுந்தரர் முதலிய நாயன்மார்களால் பாடல்பெற்ற தலமுமான மன்னார் திருக்கேதீஸ்வரம் ஆலயத்தில் 13 வருட இடைவெளியின் பின்னர் வருடாந்த மஹோற்சவம் இன்று ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது. இந்தத் தருணத்தில் திருக்கேதீஸ்வரத்தின் கடந்த கால வருடாந்தத் திருவிழா நிகழ்வுகள் பற்றி மீள்பார்வை செய்கின்றது இந்தக் கட்டுரை.

பதின்மூன்று ஆண்டுகளுக்குப் பின்னர் பாலாவித் தீர்த்தக்கரையில் கௌரியம்பாள் சமேத கேதாரநாதர் திருவீதி வலம் வருகின்ற செய்தி சைவ உலகிற்கு மகிழ்ச்சியைத் தருகின்றது. பஞ்ச ஈஸ்வர தலங்களில்


உமாமகேசுவர சுகாசன மூர்த்தம்

ஒன்றாகிய திருக்கேதீஸ்வரம் கடந்த பத்து ஆண்டுகளுக்கு மேலாகப் பூசை, விழா இன்றிப் பொலிவிழந்து இருந்த செய்தி ஈழத் தமிழர்களின் இதயத்தை வேதனையில் ஆழ்த்தியிருந்தது.

இருபது ஆண்டுகளுக்கு முன்னர் அதிகாலை 5 மணிக்கு ஆலய முன்றிலில் இருக்கும் கண்டாமணி ஓங்கி ஒலிக்கும். அழகுத் தோகை மயில்


ஆலயத்திலுள்ள மகாலிங்கம்

கள் பறந்தோடி வந்து இராஜகோபுர உச்சியில் ஆடிமகிழும். அழகான புள்ளி மான்கள் அணியணியாய் வீதியில் ஓடி விளையாடும். வேத பாராயணம், பூசை தேவகானமாகக் கேட்கும். இவற்றின் மத்தியில் கோமாதா பூசையோடு கோயில் கதவு அகலத் திறக்கப்படும். இக்காட்சியை அனுபவித்த பக்தர்கள் கடந்த பல வருடங்களாக அகத்தில் அழுது, "ஆ, எப்படி இருந்த கேதீஸ்வரம் எல்லாமே ஓய்ந்துவிட்டதே!" என நொந்து துடித்தனர்.

### பக்திப் பரவசம் நிறைந்த பூமி

திருக்கேதீஸ்வர மஹோற்சவத்தின் பெரும்பாலான உபயகாரர்கள் வடபுலத்து இந்து உயர் கல்லூரிகள், அறுபதுகள் முதல் பகல் - இரவு திருவிழாவின் உபயகாரர்களாகிய யாழ்ப்பாணப் பாடசாலை மாணவர்கள் அணியணியாகப் பஸ்களில் வந்து பாடிப் பரவிய காட்சி இன்றும் பசுமையாய் நினைவில் உள்ளது. வைத்தீஸ்வராக் கல்லூரி அதிபர் ஸ்ரீமான் அம்பிகைபாகன் முதல் பரமேஸ்வராக் கல்லூரி முதல்வர் ஸ்ரீமான ஞானப்பிரகாசர் வரை கழுத்தில் உருத்திராட்ச மாலையுடன் தத்தம் மாணவர் குழாத்துடன் வீதிசுற்றி கூட்டமாகப் பாடிவரும் காட்சி கனவாகப் போய்விட்டது.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மாணவர்களாகச் சென்று ஒவ்வொரு ஆண்டும் மஹோற்சவ அழகை இரசித்த நாளை இன்றும் நீள நினைத்துப் பார்க்கின்றேன். பாலாவித் தீர்த்தக் கரையில் ஆசிரியர் சிவராமலிங்கம் ஐயா கண்காணிப்பில் குதித்து விளையாடிக் குதூகலித்துக் கொண்டிருக்கின்றபோது அன்றைய இராமநாதன் கல்லூரி அதிபர் செல்வி கனகசபை கம்பீரநடையில் வந்து 'இனிப் பெண்கள் குளிக்கப்போகிறார்கள். இவர்களை அப்புறப்படுத்துங்கள்' என்றதும் மறுவார்த்தை இன்றி இந்துக் கல்லூரி மாணவர்கள் எழுந்து செல்ல இராமநாதன் கல்லூரி மாணவிகள் நீராடி பாலாவிக் கரையிலிருந்தே திருமுறை பாராயணத்தோடு குடங்களில் நீர் சுமந்து அணியணியாக வந்த காட்சியெல்லாம் இன்றைய மாணவருக்குத் தெரியாது.

### கல்லூரிகளே உபயகாரர்கள்

மஹோற்சவ காலங்களில் குறிப்பாக அன்று உபயகாரர்களாக விளங்கிய யாழ். இந்துக் கல்லூரி, கொக்குவில் இந்துக் கல்லூரி, மானிப்பாய் இந்துக் கல்லூரி, சாவகச்சேரி இந்துக் கல்லூரி, ஸ்கந்தவரோதயக் கல்லூரி, மகாஜனாக் கல்லூரி, இராமநாதன் கல்லூரி, ஹாட்லிக் கல்லூரி, யாழ். மத்திய கல்லூரி, வட்டு. இந்துக் கல்லூரி, பரமேஸ்வராக் கல்லூரி, நடேஸ்வராக் கல்லூரி, உரும்பிராய் இந்துக் கல்லூரி, வேலணை மகாவித்தியாலயம் போன்ற கல்லூரிகள் இன்றும் ஞாபகத்தில் உள்ளவை. மீண்டும் இவ்வாண்டு வரலாற்றுச் சிறப்புமிக்க திருக்கேதீஸ்வரத் திருக்கோயிலில் புகழ்பூத்த யாழ்ப்பாணப் பாடசாலைகள் ஒன்றுகூடி மஹோற்சவத்தை நடத்த இருப்பது மகிழ்ச்சியைத் தருகிறது.

நல்லைநகர் நாவலர் பெருமான் அந்நியராட்சியில் அழிந்துபோன இக்கோவிலை மீண்டும் கட்டியெழுப்புங்கள் எனப் பின்வருமாறு அறைகூவல் விடுத்தார். '(1872 இல்) 'ஞானசம்பந்தராலும் சுந்தரராலும் பாடல்பெற்ற திருக்கேதீஸ்வரம் இவ்வடமாகாணத்தின் கண்ணுள்ள மன்னாருக்கு அதிசமீபத்திலிருக்கின்ற மாதோட்டத்தில் உள்ளது. இத்திருக்கேதீச்சரம் அழிந்து கடலாகக் கிடக்கின்றதே! புதிது புதிதாக இவ்விலங்கையில் எத்தனையோ கோயில்கள் கட்டப்படுகின்றனவே! நீங்கள் இந்த மகா ஸ்தலத்தைச் சிறிதும் நினையா தென்னவோ! இவ்விலங்கையில் உள்ள விபூதிதாரிகள் எல்லாரும் சிறிதுசிறிது உபகரிக்கினும் எத்துணைப் பெருந்தொகைப்



பொருள் சேர்ந்துவிடும். இதை நீங்கள் எல்லோரும் சிந்தித்து இத்திருப்பணியை நிறைவேற்றுவீர்களாயின் அருட்கடலாகிய சிவபெருமான் உங்களுக்கு அனுக்கிரகஞ் செய்வார்".

### நாவலரின் முயற்சியினால் புத்துயிர் பெற்ற சிவாலயம்

நாவலர் பெருமானின் வேண்டுகோளை ஏற்ற சைவ அபிமானிகள் காடாய்க் கிடந்த மாதோட்டத்தைத் தெய்வச்சோலையாக மாற்றினார். பசுபதிச் செட்டியார், பழனியப்பச் செட்டியார், சேர்.கந்தையா வைத்தியநா

**செஞ்சொற் செல்வர் ஆறு.திருமுருகன்**

தன் போன்ற பெரியோர்கள் செய்த அரும்பணியின் காரணமாகப் பெருங்கோயிலாகத் திருக்கேதீஸ்வரம் வளர்ச்சி பெற்றது. ஐந்து திருத்தேரில் இறைவன் வீற்றிருந்துவந்த காட்சி கோயிலின் மெச்சத்தக்க எழுச்சியை வெளிக்காட்டியது. நாட்டில் ஏற்பட்ட யுத்த அனர்த்தம் திருக்கேதீஸ்வரத் திருநகரை மீண்டும் காடாக்கியது. மடங்கள் யாவும் இடித்து அழிக்கப்பட்டன. பக்தர்கள் கூடும் பாலாவித் தீர்த்தக்கரை படையினர் கூடும் பாசறைக் களமாக மாறியது. என்ன கொடூரம்! புனித ஸ்தலம் படாதபாடு பட்டது.

இன்று நாட்டில் ஏற்பட்டு வருகின்ற சமாதானத்தின் சாயலில் மாதோட்ட நன்னகர் மலர்ச்சி பெறுகின்றது. ஆலயச்சூழல் மீண்டும் அழகுபெறத் தொடங்குகிறது.

*'பண்டு நால்வருக் கறமுரைத் தருளிப்பல் உலகினில்*
*உயிர் வாழ்க்கை*
*கண்டநாதனார் கடலிடங்*
*கைதொழக்காதலித் துறைகோயில்*
*வண்டு பண்செய்யும் மாமலர்ப்*
*பொழின் மஞ்ஞை நடமிடு*
*மாதோட்டம்*
*தொண்டர் நாள் தொறும் துதி செய*
*அருள்செய் கேதீச்சர மதுதானே*

- சம்பந்தர்-

என்ற ஞானசம்பந்தரின் பாடல் அடிகளுக்கு அமைய தொண்டர் நாள் தொறும் துதிசெய்ய அருள்செய்யும் காட்சி சிறக்க அனைவரும் பிரார்த்திக்கவேண்டும். தட்ஷிணகைலாச மான்மியத்தில் குறிப்பிட்டதுபோல ஜீவபூமியான மாதோட்ட நன்னகர்ப் பரம்பொருளை அனைவரும் மன்றாடிப் பணிவோம்.

*'பாவம் வினையறுப்பார் பயில்*
*பாலாவியின் கரைமேல்*
*தேவன் எனையாள்வான்*
*திருக்கேதீச்சரத்தானே'*

- சுந்தரர்-

என்று அனைவரும் அவன்தாள் பணிவோமாக.

## சங்கக் கிளைகள் சனிக்கிழமைகளிலும் இனிஇயங்கும்

அரியாலை,மே23

யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் சகல கிளைகளையும் சனிக்கிழமைகளில முழு நாளும் திறந்து வியாபார நடவடிக்கையை மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்தப் புதிய நடைமுறை நேற்று முன்தினம் முதல் அமுலுக்குக் கொண்டு வரப்போவதாகச் சங்கத் தலைவர் சூ.சிறில் தெரிவித்தார்.

மக்களின் வசதி கருதியும் சங்கத்தின் எதிர்கால வசதி கருதியும் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாகச் சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

அத்துடன், சங்க நிர்வாகப் பகுதியும் சனிக்கிழமை நாள்களில் முழு நாளும் செயற்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-17)

## மதகுகள் புனரமைப்பு

செம்பியன்பற்று,மே23

வடமராட்சி கிழக்கிலுள்ள வீதிகளின் புனரமைப்புப் பணிகளில் முதற்கட்டமாகச் செம்பியன்பற்று தொடக்கம் வெற்றிலைக்கேணி வரையிலான கடற்கரை வீதியிலுள்ள மதகுகள் நீர் வழிந்து ஓடும் வகையில் திருத்தவேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கடந்த 20 வருடங்களாக இப்பாலங்கள் திருத்தப்படாமல் இருந்தன என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-36)

## சாவகச்சேரியில் பிரசவ விடுதி வியாழனன்று திறப்பு

தென்மராட்சி,மே23

சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் 'நிக்கொட்' நிறுவனத்தினரால் 55 லட்சம் ரூபா செலவில் நிர்மணிக்கப்பட்ட பிரசவ விடுதி எதிர்வரும் 27ஆம் திகதி வியாழனன்று காலை 11.00 மணிக்குத திறந்துவைக்கப்படவுள்ளது.

இந்நிகழ்வில் உலக வங்கி உப தலைவர், 'நிக்கொட்' நிறுவனப் பிரதிநிதிகள், சுகாதார சேவைகள் திணைக்கள உயர் அதிகாரிகள் உட்படப் பலர் கலந்துகொள்ளவுள்ளனர் என்று ஆஸ்பத்திரிப் பொறுப்பதிகாரி டாக்டர் ச.அம்பிகைபாகன் தெரிவித்தார். (ஒ-117)

## பருத்தித்துறை அபிவிருத்தி குறித்துக் கலந்துரையாடல்

வடமராட்சி,மே23

பருத்தித்துறை நகரத்தில் நவீன சந்தை அமைப்பது உட்பட நகர அபிவிருத்தி சம்பந்தமான கலந்துரையாடல் பருத்தித்துறை நகரசபை அலுவலகத்தில் நகரசபைச் செயலாளர் திருமதி கே.திருச்செல்வநாயகம் தலைமையில் எதிர்வரும் 26ஆம் திகதி புதன்கிழமை நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.கே.சிவாஜிலிங்கம், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், எஸ்.கஜேந்திரன், எஸ்.சிவநேசன் ஆகியோர் கலந்துகொள்வார்கள்.

அத்துடன், பருத்தித்துறையில் உள்ள திணைக்களத் தலைவர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அபிவிருத்தியில் ஆர்வமுள்ள பொதுமக்கள் ஆகியோர் இக்கலந்துரையாடலுக்கு அழைக்கப்பட்டுள்ளனர். (ஒ-173)

# இப்படியும் ஒரு மோசடி!

கொழும்பு,மே23

பகல்நேரத்தில் வாகனத்தில் வந்த இளைஞர்கள் நகைக் கடையொன்றிலிருந்த ஊழியர்களை வினோதமான முறையில் ஏமாற்றி ஒன்றரை இலட்சம் ரூபா பெறுமதியான தங்க நகைகளைக் கொள்ளையிட்டுச் சென்ற சம்பவம் சமீபத்தில் தம்புள்ள பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

சம்பவ தினத்தன்று பிற்பகல் 2 மணியளவில் வானில்வந்த இளைஞர்கள் சிலர் நகைக் கடையொன்றினுள் நுழைந்தனர். அங்கு அவர்கள் சுமார் ஒன்றரை லட்சம் ரூபா பெறுமதியான நகைகளைத் தெரிவு செய்தனர்.

பின்னர் அந்தநகைகளின் தரத்தை வங்கித் தர மதிப்பீட்டாளரைக் கொண்டு மதிப்பிட்டு விட்டு அதற்குரிய பணத்தைத் தருவதாகக் கூறினர்.

இதனையடுத்து நகைகளை அந்த இளைஞர்கள் எடுத்துக்கொள்ள, நகைக்கடை ஊழியர் ஒருவரும் அவர்களுடன் வங்கிக்குச் சென்றனர்.

வங்கியினுள் மேற்படி நகைகளை இளைஞர்களில் ஒருவர் கொண்டு சென்றார். சிறிதுநேரத்தில் வெளியில் வந்த அவர்,

தான் நண்பரொருவருடன் தொலைபேசியில் உரையாட வேண்டியிருப்பதால் வெளியே செல்வதாகவும் -

ஆகவே, வங்கிக்குள் சென்று நகைகள் தரமதிப்பீடு செய்யப்படுவதை அவதானிக்கும்படியும் - நகைகடை ஊழியரிடம் அவர் தெரிவித்தார்.

இதனை நம்பி வங்கிக்குள் சென்ற ஊழியர் அங்கு நகைகள் மதிப்பீடக் கொடுக்கப்படவில்லை என்பதை அறிந்து தாம் ஏமாற்றப்பட்டதை உணர்ந்துகொண்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பாகத் தம்புள்ள பொலீஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-ரி)

# ஆலய வாசலில் இறந்த நாகபாம்பு இறுதிக் கிரியைகளுடன் அடக்கம்

ஒட்டுசுட்டான்,மே23

மனிதர்கள் இறந்தவுடன் நடைபெறும் சடங்கு முறைகள் இறந்த நாக பாம்பு ஒன்றுக்கு இடம்பெற்றுள்ளது.

முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான் கற்சிலைமடுப் பகுதியில் மிகவும் பழைமைவாய்ந்த நாகம்மாள் ஆலயம் உள்ளது.

இவ்வாலயத்தை மக்கள் மிகுந்த நம்பிக்கையுடன் வழிபாடுசெய்து வருகின்றனர். அங்கு அடிக்கடி நாக பாம்பு ஒன்று வந்துபோவது வழமை.

அண்மையில் திடீரென ஒருநாள் அந்த நாகபாம்பு ஆலய வாசலில் இறந்து காணப்பட்டதினால் இப்பகுதி மக்கள் பெரும் கவலையடைந்தனர்.

இறந்த நாகபாம்பினை மக்கள் ஆலய முன்றிலில் சடங்கு முறைகளுடன் அடக்கம் செய்திருக்கின்றனர்.

தமிழ்மக்களிடையே பாம்பு வழி



பாடு முக்கியமானது. குறிப்பாக வன்னி மக்கள் நாகவழிபாட்டுக்கு முக்கியம் கொடுத்து வருகிறார்கள்.

புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலயம், புதூர் நாகதம்பிரான் ஆலயம் என்பன வன்னியில் முக்கியத்துவம் பெற்ற வழிபாட்டுத்தலங்கம் ஆகும்.

இந்தவகையில், ஒட்டுசுட்டான் கற்சிலைமடு நாகம்மாள் ஆலயத்தின் நாகபாம்பு இறந்துள்ளமை இப்பகுதி மக்களைக் கவலைகொள்ளச் செய்துள்ளது.

நாகவழிபாட்டுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் மக்கள் இறந்த நாக பாம்பிற்கு மனிதர்கள் இறந்தவுடன் செய்யும் சடங்குகள் போன்று சடங்குகள் செய்து அதனை அடக்கம் செய்துள்ளமை நாக வழிபாட்டுக்கு மக்கள் கொடுக்கும் முக்கியத்துவத்தினை எடுத்துக்காட்டுகின்றது என்று அப்பகுதி மக்கள் தெரிவித்தனர். (ஒ-12)

# மொழிப் புலமையும், ஆய்வுத்திறனும் மிக்க புவியியலாளன் பேராசிரியர் செல்வநாயகம்

யாழ். பல்கலைக்கழக புவியியற்றுறைப் பேராசிரியர் **சோ.செல்வநாயகத்தின்** 25 ஆவது நினைவுதினம் இன்று.
அதனை முன்னிட்டு இக்கட்டுரை பிரசுரமாகிறது.



பல்துறை ஆர்வம், தன்துறையான புவியியலிலே பூரணத்துவம், அத்துறையின் வளர்ச்சியில் ஆர்வம், சிந்தனாசக்தி, புவியியற்றுறையில் ஆழ்ந்த ஆராய்ச்சி, இலககியத்திலும், கலைகளிலும் கொண்டிருந்த கடுமையான ஆர்வம், எதையும் துணிச்சலுடன் முன்னெடுத்துச்செல்லும் தன்மை, மனிதரை மனிதராக மதிக்கும் பணபு, தன்னைத் தேடி வந்தோருக்கு ஆலோசனை வழங்கி ஓம்பும் தன்மை, எல்லாவற்றிற்கும் மேலாக தனித்துவத்தைக் (Originality) கொண்டவராக 1960 ஆம் ஆண்டுகளில் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் விளங்கியவர் விரிவுரையாளரும், புவிவியற்றுறைப் பேராசிரியருமான அமரர் சோ.செல்வநாயகம்.

வெறும் கடமைக்காக அன்றிப் பலரின் நலனுக்காகச் சேவையாற்றியோா வரிசையில் முதற்கண்வைத்து எண்ணப்படக்கூடியவா இவர். தன்னுடன் பழகிய யாவர்க்கும் இனியவர். அவர்களின் மனதில் நிலைப்பவர். ஆங்கிலத்திலும் தமிழிலும் அவருக்கிருந்த சரளமான பேச்சுவன்மை, மறைந்த பேராசிரியரை ஓர் உயர் நிலைக்கு எட்டவைத்தது; பலமொழி சார்ந்த அறிஞரை ஒன்றாக்கியது. எவாசெய்த பிழையையும் நேரடியாக எடுத்துக்கூறும் மனத்திண்மை வாய்ந்தவர்.

பேராசிரியர் செல்வநாயகம் தமது ஆரம்பக்கல்வியை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் பயின்று தனது மேற்படிப்பை கொழும்பு ஷாஹிராக் கல்லூரியில் கற்று இலங்கைப் பல்கலைக்கழகம், பேராதனையில் புவியியற் சிறப்புப் பட்டப்படிப்பை மேற்கொண்டு (1953-1957) சிறப்புக்கலை பட்டதாரியானார். பின்னர் அரசின் அர்ச கரும மொழித்திணைக்களத்தில் மொழிபெயர்ப்பாளராகக் கடமையாற்றினார்.

1959 இல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் புவியியற்றுறையில் துணைவிரிவுரையாளராகி 1961 இல் மேற்படிப்புக்காக லண்டன் பொருளியற் கல்லூரியில் முதுமாணிப் பட்டம்பெற்று 1963 இல் இவர் இலங்கை திரும்பினார். இச்சமயத்திற தான் கற்கைநெறிகள் தாயமொழிக்கு மாற்றப்பட்டன. இக்காலத்தில் இவர் சிரேஷ்ட விரிவுரையாளராக மாற்றம் பெற்றார். இக்காலத்தில் புவியியற்றுறையில் தாய்மொழியில் விரிவுரையாற்றும் ஆற்றலும், மாணவரை ஆற்றுப்படுத்தும் திறனும் தமது மக்களுககாகச் சேவையாற்றும் ஆர்வமும் இவருக்குப் பெருமை சேர்ப்பனவாய் அமைந்தன.

1974ஆம் ஆண்டில் நைஜீரியாவில் கடுனாவில் அகமடு பெலோ பல்கலைக்கழகத்தில் புவியியற்றுறையில் விரிவுரையாளராகச் சேவைபுரிந்தார். இப்பல்கலைக்கழகத்தில் இவருக்கு (Reader) உயர்பதவி வழங்கப்பட்ட சமயத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் புவியியற்றுறைப் பேராசிரியராக நியமனம் கிடைத்தது. தனது பதவியைக் கைவிட்டு யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் - தனது சொந்தப் பிரதேசத்தில் சேவையாற்ற வேண்டுமென்ற விருப்பு மேலோங்கி நின்றதால் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தால் வழங்கப்பட்ட பதவியை மிக விருப்புடன் ஏற்றுக்கொண்டார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் ஒருசிறு கூறாக ஆரம்பித்த புவியியற்துறையை விரிவுபடுத்தி மாணவரின் தேவைகளை நிறைவு செய்த பெருமை இவரைச்சாரும். பல்கலைக்கழகத்தில் புவியியற்றுறையில் பல மாற்றங்களைச் செய்தார். விரிவுரைகளுக்கான அறைகள், மண்டபங்கள் என்பவற்றை ஏற்படுத்திக் கொடுத்தார். தொலைபேசி வசதிகள், வளிமண்டல அவதான கருவிகள், எறிகைகருவி போன்றவற்றை வரவழைத்துக் கொடுத்தார். பல்கலைக் கழகத்தில் விவசாயப் புவியியல், நுண்கால நிலையியல், அயனக்கால நிலையியல், மீன்பிடிப் புவியியல், கிராமியப் புவியியல் ஆகிய துறைகளை விரிவுபடுத்திப் புவியியலைப் பிரதேசத்துடன் இணைந்ததாகக் கற்பித்தார். பாடசாலை மட்டத்திலே 1981ஆம் ஆண்டிலிருந்து செயற்பட்ட ஜி.சீ.ஈ.உயர்தரப் பரீட்சைக்கான புவியியற் பாடத்திட்டத்திற்கு பல சிபார்சுகளையும், ஆலோசனைகளையும் இவர் வழங்கினார்.

தனது துறை ஆய்வுகளை நிலப பயன்பாடுகளின் தன்மை, விமானப் படங்களை நிலப்பயன்பாட்டுக்குப் பயன்படுத்துதல், வரண்ட வலயக் குடியேற்றங்கள் பற்றியதாக மேற்கொணடார். இவருடைய ஆய்வுகள் அபிவிருத்திப் புவியியல் சம்பந்தப்பட்டவையாக அமைந்திருந்தன். அபிவிருத்தித்துறையில் மூன்றாம் உலகநாடுகளின் விவசாயத்துறை சம்பந்தப்பட்ட அபிவிருத்தியில் கூடிய ஆர்வததுடன் ஆராய்ச்சிகள்செய்தார்.

**செ.மகாலிங்கம் M.A.**
முன்னாள் திட்டப் பணிப்பாளர்,
யாழ்.மாவட்டம்.

இவரதுசேவை, தகைமை, திறமை அடிப்படையில் இவரை, உலகின் பயிர்ச்செய்கைத் தேசப்படச்சபை, ஐககிய நாடுகள் ஸ்தாபன அபிவிருத்தித் திட்டத்தின் (யு.என்.டி.பி.) சமூக அபிவிருத்திக்கான ஆய்வு நிறுவகம, இலங்கையின் விவசாய அமைச்சு, கல்வியமைச்சு, கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தின் தென்னாசியா விவசாயம் பற்றிய திட்டம் ஆகியவற்றின் தொழில்சார் ஆலோசகராகக் கடமையாற்ற வைத்தமை இவரின் சேவைக்கு ஓர் எடுத்துக்காட்டாகும்.

இவ்வாறு சிறப்புப் பெற்றவரும் ஆற்றல் மிக்கவருமான பேராசிரியர். தமது 47 ஆவது வயதில் அகால மரணமடைந்தமை தமிழ்ச் சமுதாயத்திற்கு ஓர் இழப்பாகும். இவரிடம் கற்ற மாணவர்கள் இன்று எமது நாட்டிலும், வெளிநாடுகளிலும் பல்வேறு துறைகளில் உயர் பதவிகளை அலங்கரிக்கின்றனர். ❖



ஏழாலைக் கவிஞர் கு.ரஜீவனின் 'வலிகளைத் தாங்கி' கவிதை நூல் வெளியீட்டு விழா அண்மையில் நடைபெற்றபோது நூலின் முதற்பிரதியை இந்தியாவிலிருந்து வருகைதந்த பாலசுப்பிரமணியம் தம்பதியினர் கவிஞர் முருகையனிடமிருந்து பெற்றுக்கொள்வதைப் படத்தில் காணலாம். கலாநிதி கி.விசாகரூபன், நூலாசிரியர் ஆகியோரும் படத்தில் உள்ளனர். (-10)

# மன்னிப்பு மனித வாழ்வின் ஓர் அம்சம்

**ஞாயிறு நற்பிரசாதம்**

பகை என்பது புற்றுநோய் போன்றது. எவ்வாறு முற்றிவிட்ட புற்று நோய்க்கு மருந்தில்லையோ அவ்வாறே நீண்டநாள் பகைக்கும் மாற்றுவழிகள் காண்பது கடினம். முற்றிவிட்ட புற்றுநோய் மரணத்தை இலகுவில் உண்டுபண்ணிவிடும். இவ்வாறே நாம் வளர்க்கும் பகை எமக்கு நாம் வெட்டும் குழியாகிவிடுகின்றது.

பகைவன் அல்லது எதிரி என்பவன் யார் என்ற தெளிவு எமக்கு வேண்டும். எம்மை வெறுப்பவன் அல்ல எமது எதிரி. மாறாக நாம் யாரை வெறுத்து பகைக்கின்றோமோ அவன்தான் எமது எதிரி. அவ்வாறெனின் பகைவன் அல்லது எதிரி என்பவன் எமக்கு அப்பாற்பட்ட ஒருவன் அலலன. மாறாக அவன் எம்மிலதான் உளளான். எம்மில் நாம் சுமக்கும் ஒரு மேலதிக சுமை. ஏன்தான் இந்த சுமையும் துன்பமும்?

எமது பற்கள் எமது நாவைக் கடித்துவிட்டால் நாம் எமது பற்களை அடித்து நொறுக்குவோமா? அல்லது பற்களுடன் கோபித்து பற்களுக்கெதிராக வழக்குத்தாக்கல் செய்வோமா? நாம் எமது நாவைக் கடித்த பற்களையும் மறந்துவிடுவதோடு நாவில் ஏற்பட்ட வலியை[illegible] தில் மறந்துவிடுகின்றோம். நாம் நாளாந்தம் எமக்கெதிராகச் செய்யும் பிழைகளுக்கு வழக்குத் தாக்கல் செயவோமாக இருந்தால் எமக்குக் குறைந்தபட்சம் தூக்குத் தண்டனை கிடைப்பது நிச்சயம்.

நாம் எமக்கெதிராகச் செய்யும் பிழைகளை இலகுவாக மன்னிப்பதோடு மறந்தும் விடுகின்றோம். ஆனால், பிறர் எமக்கு இழைக்கும் பிழைகளை மன்னிக்க மறுப்பதோடு பழிவாங்கவும் துடிக்கின றோம். நாம் எம்மை அளவுக்கதிமாய் அன்பு செய்வதால் எம்மையே நாம் மன்னித்துவிடுகின்றோம். நாம் எம்மை மன்னிக்க எமக்கு எங்கிருந்து துணிவு வருகிறது, விருப்பம் உண்டாகிறது என்பதைத்தான் ஆழமாகச் சிந்திக்கவேண்டும்.

பகைவனுக்கு அன்பு, வெறுப்பவனுக்கு நன்மை, சபிக்கிறவனுக்கு ஆசி, தூற்றுவோருக்காகச் செபம் என்கிறது யேசுவின் போதனை (லூக 26-28). ஆனால், கண்ணுக்குக் கண் பல்லுக்குப்பல் என்ற கொள்கையின் அடிப்படையில் இயக்கப்படுகின்ற உலகிற்கு இது ஒவ்வாததாக இருப்பதில் ஆச்சிரியமொன்றுமில்லை. ஒரு கன்னத்தை அறைந்தால் மறு கன்னத்தையும் [illegible] மேலாடையை எடுததால் உ[illegible]யும் கொடு. உடைமைகளைப் பறிப்பவனிடமிருந்து திருப்பிக்கேட்காதே. கேட்பவன் எவனுக்கும் கொடு. (லூக்6:28-30) இவற்றுக்கு வார்த்தைக்கு வார்த்தை அர்த்தம் எடுத்தால் எவ்வாறு கடைப்பிடிப்பது என்ற மலைப்புத் தோன்றுவது இயல்பானது. இவற்றின் மூலம் இயேசு எமக்குத் தரும் செய்தி என்னவென்று நாம் சிந்திக்கவேண்டும்.

நம்முடைய நன்மைப் பண்புக்கு பிறருடைய நன்மையோ, தீமையோ அளவுகோல் அல்ல. நன்மைக்கு நன்மையும் தீமைக்குத் தீமையும் செய்யும் போது நாம் பிறருக்கு அடிமையாகி விடுகின்றோம்.

மன்னிப்பு கிறிஸ்தவத்தின் அத்திபாரம். அது ஒரு சடங்கல்ல. மாறாக அது வாழ்வின் நிகழ்வு. மற்றவரை நாம் மன்னிப்பது வாழ்வின் ஓர் அம்சம். மன்னிப்பதும், மன்னிக்கப்படுவதும் வாழ்க்கையில் நாம் சந்திக்கும் மகிழ்ச்சிக்குரிய நிகழ்வுகளாகும். மனிதகுலம் மன்னிப்புக்காக வேண்டுமபோதும் இன்னொருவரை மன்னிக்கும் போதும் பேரழகு நிறைந்ததாக மாறிவிடும். மன்னித்து, விடுதலை பெற்று சுதந்திர மனிதர்களாக வாழ்வோம். ★

**யே.யூ.பேனாட்**

# யாழ். மாவட்ட வீதிகளுக்கு சக்திவாய்ந்த மின் விளக்குகள்

## விரைவில் பொருத்த நடவடிக்கை

யாழ்ப்பாணம்,மே23

யாழ். மாவட்டத்தில் விரைவில் முக்கிய சந்திகளிலும், பிரதான வீதிகளிலும் சக்திவாய்ந்த மின்விளக்குகள் பொருத்தப்படவுள்ளன. இதற்கென யாழ். மாவட்டத்தில் உள்ள 15 உள்ளூராட்சி அமைப்புக்களின் திட்டமிடற்பிரிவுகள் திட்டங்களைத் தயாரித்து வருகின்றன.

விரைவில் அவ்வப்பகுதி பிரதேச செயலர் ஊடாக யாழ். அரச அதிபருக்கு இத்திட்டங்கள் சமர்ப்பிக்கப்படவுள்ளன.

மேற்படி வீதிவிளக்குகளை ஜூலைமாதம் முதல் பொருத்துவதற்கு யாழ். அரச அதிபர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

இதேவேளை-

மேற்படி விளக்குகளைப் பொருத்துவதற்கு 'நிக்கொட்' நிறுவனம் நிதி வழங்கியுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (ஓ-185)

# 50 லட்சம் ரூபா போதைப்பொருள் தினமும் இலங்கைக்குக் கடத்தப்படுகிறது

கொழும்பு,மே23

சுமார் 50 லட்சம் ரூபா பெறுமதியான போதைப்பொருள்கள் தினமும் வெளிநாடுகளிலிருந்து இலங்கைக்குக் கடத்தி வரப்படுகின்றன என்று கூறப்படுகிறது.

பாகிஸ்தான், ஈராக், ஆப்கானிஸ்தான், பங்களாதேஷ், இந்தியா, இந்தோனேஷியா, சிங்கப்பூர், மலேசியா போன்ற நாடுகளிலிருந்தே இலங்கைக்கு இவை கடத்திக் கொண்டு வரப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றன.

இதனைத் தடுப்பதற்கும் போதைப பொருள் பாவனையை ஒழிப்பதற்கும் விசேட பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இதன்மூலம் போதைப் பொருள் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் புதிய திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன என்றும்-

போதைப்பொருள் விறபனையைத் தடுக்கும் நடவடிக்கையிலும் ஈடுபடவுள்ளன என்றும் -

போதைவஸ்து ஒழிப்புப்பிரிவின் பொலீஸ் அதிகாரி ஸ்ரீ குகனேசன் தெரிவித்தார்.

# கல்வி விழிப்புணர்வு வாரம் அனுஷ்டிப்பு

யாழ்ப்பாணம்,மே23

பாடசாலையிலிருந்து இடைவிலகிய மாணவர்களை மீண்டும் பாடசாலையில் இணைப்பதற்கான 'கல்வி விழிப்புணர்வு வாரம்' நாளை 24 ஆம் திகதி தொடக்கம் இம் மாதம் 30 ஆம் திகதிவரை ஆறு நாள்கள் அனுஷ்டிப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

'யுனிசெவ்' நிறுவனத்தின் நிதியுதவியுடனும் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் ஒழுங்கமைப்புடனும் இத் திட்டத்தைக் கிராமியப் பொருளாதாரக் கல்வி ஆய்வு அபிவிருத்தி நிறுவனம் செயற்படுத்தவுள்ளது என நிறுவனத்தின் திட்ட இணைப்பாளர் க.ஜெயசீலன் தெரிவித்துள்ளார். (ஓ)

# வாசகர் திருமுகம்

## விபத்தில் சிக்கும் வாகனங்களை தாக்குவது தவறுதான் ...ஆனால்.....

விபத்துக்குக் காரணமென்று கண்டறியப்படும் வாகனங்களை மக்கள் தாக்குவது தவறுதான். ஆனால், மக்கள் ஏன் அப்படி ஆவேசம் கொண்டார்கள், ஏன் பொறுமை இழந்தார்கள் என்ற காரணத்தைக் கண்டறிவது நல்லது.

அது எல்லோருக்கும் தெரிந்த காரணம். ஓட்டோ சாரதிகளும், மினிபஸ் சாரதிகளும் தெருக்களை ஏதோ தத்தமது சொத்துமாதிரிப் பாவிப்பதும் ஏட்டாபோட்டியாக வாகனங்களை ஓட்டி மற்றவர்களுக்கு ஆபத்தை விளைவிப்பதும் எல்லோருக்கும் தெரிந்த விடயம். எல்லாச் சாரதிகளும் அப்படிச் செய்வதில்லை ... ஆனால், சிலர் அப்படிச்செய்வதால் எல்லோருக்கும் கெட்டபெயர் ஏற்படுகின்றது.

மக்களின் அடக்கிவைத்த ஆத்திரம் விபத்து நடந்தவுடன் ஆவேசமாக மாறி விபத்துக்குக் காரணமான சாரதி தப்பிவிட வாகனத்தைத் தாக்கக் காரணமாகிறது.

ஆனபடியால் ஓட்டோ மற்றும் மினிபஸ் சாரதிகள் தத்தமது வாகனங்களை நிதானத்துடன் செலுத்தி, மக்களை ஆத்திரம் அடையவைக்காமல் இருப்பது நல்லது. அப்படி நடந்தால் தாக்குதல்களும், பேரணிகளும் தேவையற்றதாகிவிடும்.

*சுன்னாகம்* - **பரம்**

## காலம் மாறாதா? மாறுமா?

'மாணவர் நடத்தையில் மாற்றம் வேண்டும்' என்ற 15.05.2004 உதயன் வாசகர் திருமுகத்தில் எழுதிய சிவகுமார் அவர்களின் கருத்துக்கள் பற்றிய எனது வெளிப்பாட்டை முன்வைக்கின்றேன்.

கணிப்பீட்டு வேலைகளுக்கு அதிகநேரம் தேவை என்றும், இதனால்தான் கற்பிக்கமுடியவில்லை என்றும் குறிப்பிட்டிருந்தார். இது எந்தளவுக்கு உண்மை? கணிப்பீடு கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளுக்கு என கல்வி அதிகாரிகளால் சரிவரவே பாடவேளை ஒதுக்கப்பட்டுள்ளது. இதை விடுத்து, ஏன் நேரப் பிரச்சினை? ஏன் அப்படி, இதை வகுத்த கல்வி அதிகாரிகள் என்ன முட்டாள்களா? கணிப்பீடும் பாடத்திட்டத்துடன் சம்பந்தப்பட்டதே. இதனைக்கூட சரிவரச் செய்யின் கல்வியை மேம்படுத்தலாம் என்பதில் எதுவித ஐயமும் இல்லை. இதுகூட சரியானமுறையில் நடைமுறைப்படுத்தப்படுவதில்லையே சில பாடசாலைகளில்.

அடுத்துக் குறிப்பிட்டிருந்தார், பாடசாலைநேரத்தில் மாணவர்கள் வீடு செல்கிறார்கள் என்று ஓரிரு மாணவர்களின் செயற்பாட்டால் ஏனைய மாணவர் சமூகம் பாதிக்கப்படமுடியுமா? இதனைக் கண்டும் காணாதபடியும், நடவடிக்கை எடுக்காமலும் செயற்படும் ஆசிரியரும் தலைமை ஆசிரியர்களும் உணர்வார்களா? உங்கள் கருத்துப்படி மாணவர்கள் பாடசாலை நேரத்தில் வீடுசெல்ல ஆசிரியர்கள் Day Class எடுக்கச் செல்கிறார்கள் போலும்.

ஆனால்,ஓரிரு ஆசிரியர்கள் பாடசாலைகளில் சரிவரக் கற்பிக்காமல் தனியார் கல்வி நிறுவனத்தில் 'குதூகலத் திறமையுடன்' கற்பிக்கிறார்கள் என்பது அநேகமான மாணவர்சமூகம் கண்கூடாகவே அறிந்த உண்மை. இவையாவும் மாற காலம் ஒருமுறை உருண்டோடுமா? இவை பற்றிச் சிந்திப்பவர்களில் நானும் ஒருவன்

*உரும்பிராய்* - **கு.ஜீவன்.**

# ஜொலிஸ்ரார் வெற்றிக் கிண்ணத்துக்கான இறுதியாட்டம் இன்று யாழ். இந்துவில்

வலி.வடக்கு,மே23

ஜொலிஸ்ரார் வெற்றிக் கிண்ணத்திற்காக ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகத்தினால் நடத்தப்படும் மட்டுப்படுத்திய ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் போட்டியின் இறுதி ஆட்டம் இன்று மிகவும் விறுவிறுப்பாக யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

கடந்த பத்தொன்பது வருடங்களாக நடத்தப்பட்டுவரும் இப்போட்டியில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த பல்வேறு விளையாட்டுக் கழகங்களும கலந்து சிறப்பித்துக் கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

இன்று பத்தொன்பதாவது ஆண்டுக்கான இறுதிப் போட்டியில் கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக்கழக அணியும் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழக அணியும் மோதுகின்றன.

இரு அணிகளுமே ஒன்றுக்கு ஒன்று சளைத்த அணிகள் அல்ல. கடந்த ஆண்டுகளில் யாழ். மாவட்டத்தில் இடம்பெற்ற பல கிரிக்கெட் போட்டிகளில் பல வெற்றிக் கேடயங்களைத் தட்டிச் சென்ற அணிகளே இவையிரண்டுமாகும்.

இரு அணிகளிலும் இளம் வீரர்கள் இடம்பெற்றுள்ளதுடன், பலகளங கண்ட அனுபவசாலிகளும் இவ்வணிகளில் உள்ளனர். இன்றைய ஆட்டம் விளையாட்டு ரசிகர்களுக்குப் பெரு விருந்தாக அமையும்.

போட்டிகள் ஆரம்பிக்கப்பட்டு 19 ஆவது ஆண்டைத் தொடுகின்றபோதிலும் நாட்டுச்சூழ்நிலை காரணமாக 1985, 86, 87ஆம் ஆண்டுப் பகுதிகளிலும 1996, 97ஆம் ஆண்டுக் காலப் பகுதிகளிலும இப்போட்டிகள் நடத்தப்படவில்லையென்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

இன்றைய இறுதியாட்டத்தில் பிரதமவிருந்தினராக யாழ். வலயக் கல்விப்பணிப்பாளர் ப.விக்னேஸ்வரனும் சிறப்பு விருந்தினராக ஈ.எஸ்.பி. நிறுவன உரிமையாளர் ஈ.எஸ்.பி. நாகரத்தினமும் கலந்துகொள்வர். (எ-5-86)



கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக் கழக அணி வீரர்களின் விவரம் வருமாறு:-

எஸ்.சிவகுமார் (அணித் தலைவர்), எஸ்.சபானந்த், ஆர். பிரதீபன், க.துஷியந்தன், என்.பிரதீபன், என்.நதீஸ்வரன், எஸ்.சிற்சபேசன், எஸ்.உமாநாத், ரி.பிரகாஷ், சி.மதுஷன், இ.ஜங்கரன், ஆர்.சிறிரமணன், இ.வாகீஷ், ரி.அரவிந்தன், வி.விஜயசுரேஷ், சி.ஜெயரூபன்.

இந்த அணியின் பயிற்றுநரான எஸ்.கோகுலனும் முகாமையாளரான எஸ்.சத்தியேந்திரனும் படத்தில் உள்ளனர்.



யங்ஸ்ரார் விளையாட்டுக் கழக அணி வீரர்களின் விவரம் வருமாறு:-

ஞா.சசிவர்ணன் (அணித் தலைவர்), க.டினேஸ், ப.பார்த்தீபன், செ.ஜொனிற்ரன், ச.சுரேஷ்மோகன், சே. சுதாகர், சி.விஜியகர்ணன், ச.ரஜீத், தெ.செந்தூரன், அ.துஷ்யந்தன், சு.சதீஸ்கண்ணா, கே.கிருஷ்ணச்சந்திரா, க.சயந்தன், அ.நிஷாந்தன், ச.ஜசீதரன், ஞா.சுலக்சன்.

இவ்வணியின் முகாமையாளர் மற்றும் பயிற்றுவிப்பாளராகக் கடமையாற்றும் சீராளனையும் படத்தில் காணலாம்.

# காரைநகர் பிரதேச தடகளப் போட்டியில் சோலையான் வி.கழகம் முதலிடம்

காரைநகர்,மே23

காரைநகர் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களிடையே நடத்தப்பட்ட வருடாந்த தடகள விளையாட்டுப்போட்டியில் சகல துறைகளுக்குமான விருதை சோலையான் விளையாட்டுக் கழகம் பெற்றுள்ளது.

கடந்த வாரம் காரைநகர் தியாகராசா ம.ம.வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் காரைநகர் பிரதேச செயலர் செல்வி பிரபா கந்தசாமி ஐயர் தலைமையில் நடைபெற்ற காரைநகர் பிரதேச செயலர் பிரிவின் முதலாவது விளையாட்டுப் போட்டியினை யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு தொடக்கி வைத்தார்.

சிறந்த வீரருக்கான விருதினை தோப்புக்காடு விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த இ.டென்சில்ராஜாவும் சிறந்த வீராங்கனைக்கான விருதை சோலையான் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த செல்வி இ.பத்மினியும் பெற்றுக்கொண்டனர்.

இப்போட்டிகளில் முதலாம் இடத்தைச் சோலையான் விளையாட்டுக் கழ்கமும் இரண்டாம், மூன்றாம் இடங்களை முறையே தோப்புக்காடு இளைஞர் விளையாட்டுக் கழகமும், இளந்தென்றல் விளையாட்டுக்கழகமும் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (-10-73-190)


# டெஸ்ட் போட்டிகளில் அதிக சிக்ஸர்கள் பட்டியலில் முதலிடத்தில் கிறிஸ்கெய்ன்ஸ்

லண்டன்,மே23

இங்கிலாந்துக்கு எதிரான முதல் டெஸ்டில் நியூஸிலாந்து வீரர் கிறிஸ் கெய்ன்ஸ தனது அதிரடி ஆட்டத்தின் மூலம் 47 பந்துகளில், 82 ஓட்டங்கள் எடுத்தார். இதில் 4 சிக்ஸர்களும் அடங்கும். இதன்மூலம் டெஸ்டில் அதிக சிக்ஸர்கள் அடித்த வீரர் என்ற சாதனைய அவர் பெற்றார். அவர் 86 சிக்ஸர்கள் அடித்துள்ளார். இதற்கு முன்பு மேற்கிந்தியத் தீவுகள் அணியின் விவியன் ரிச்சாட்ஸ் 84 சிக்ஸர்கள் அடித்ததே சாதனையாக இருந்தது.

டெஸ்டில் அதிக சிக்ஸர்கள் அடித்த முதல் 10 வீரர்கள் வருமாறு:-

கெய்ன்ஸ் (நியூஸிலாந்து)- 86, விவியன் ரிச்சாட்ஸ் (மேற்கிந்தியா)- 84, கிளைவ் லாயிட் (மேற்கிந்தியா)- 70, இயன் போத்தம் (இங்கிலாந்து)- 67, கிரினீட்ஜ் (மேற்கிந்தியா)-67, பிரைன் லாரா (மேற்கிந்தியா)-65, கார்ல் கூப்பர்(மேற்கிந்தியா)-63, கபில்தேவ் (இந்தியா)-61, ஹைடன் (ஆஸ்திரேலியா)-60, வாசிம் அக்ரம் (பாகிஸ்தான்)-57. (-10)



இங்கிலாந்து - நியூஸிலாந்து அணிகளுக்கிடையே இங்கிலாந்தில் நடைபெற்றுவரும் டெஸ்ட் போட்டியில் நியூஸிலாந்து அணியின் சகல துறை வீரர் கிறிஸ் கெய்ன்ஸ் துடுப்பெடுத்தாடுவதைப் படத்தில் காணலாம்.

## விளையாட்டு நிகழ்வுகள்

வடமராட்சி,மே23

புலோலி மெதடிஸ்த மிசன் தமிழ்க்கலவன் பாடசாலையின் வருடாந்த மெய்வன்மைப் போட்டி இன்று பிற்பகல் 2 மணிக்கு அதிபர் க.சண்முகராசா தலைமையில் நடைபெறும்.

நிகழ்வில் யாழ். கல்வியியற் கல்லூரி உபபீடாதிபதி ஜெ.சந்திரப்பிரகாசம் பிரதம விருந்தினராகவும் வடமராட்சி கல்விக் கழகப் பொறுப்பாளர் கி.தாயகன் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்ளவுள்ளனர். (-10-173)

★ ★ ★

யாழ்ப்பாணம்,மே23

வேலணை, துறையூர் ஐயனார் சனசமூக நிலையத்தின் 61ஆவது ஆண்டு நிறைவாகவும் துறையூர் மாவீரர்களின் நினைவாகவும் ஐயனார் விளையாட்டுக் கழகம் தீவக ரீதியில் நடத்தும் வருடாந்த விளையாட்டு விழாவும் பரிசளிப்பும் இன்று பிற்பகல் 3 மணிக்கு க.விஜயதாஸ் தலைமையில் ஐயனார் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளன.

நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ், தமிழீழ விளையாட்டுத் துறைப் பொறுப்பாளர் கி. பாப்பா, யாழ். மாவட்ட அரசியல் துறைத் துணைப் பொறுப்பாளர் செம்மணன், தீவகக் கோட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் கண்ணன், பிரான்ஸில் உள்ள துறையூர் அபிவிருத்தி அமைப்பின் இணைப்பாளர் சி.ராதாகிருஷ்ணன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (-10)

★ ★ ★

வடமராட்சி,மே23

புலோலி இளைஞர் கழகம் நடத்தும் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டி புலோலி புற்றளை மகா வித்தியாலய மைதானத்தில் கடந்த 20ஆம் திகதி முதல் நடைபெற்று வருகிறது.

இருபது விளையாட்டுக் கழகங்கள் பங்குபற்றும் இச்சுற்றுப்போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெறும் விளையாட்டுக்கழகங்களுக்கு வெற்றிக்கேடயங்களும் வெள்ளிக் கிண்ணங்களும் பரிசாக வழங்கப் படவுள்ளன. (-10-173)

# விளையாட்டு

## ஒருநாள் போட்டிகளில் சச்சின் தொடர்ந்து முதலிடம்

புதுடில்லி,மே23

சாம்சங் நிறுவனத்தரப்பட்டியலில் டெஸ்ட் கிரிக்கெட்டில் இந்திய அணியின் துணைத்தலைவர் ராகுல் திராவிட் முதலிடத்தில் உள்ளார்.

இரண்டாவது இடத்தில் மேற்கிந்தியத் தீவுகள் அணியின் பிரைன் லாரா உள்ளார். சர்வதேச ஒரு நாள் போட்டிகளில் தொடர்ந்தும் டெண்டுல்கர் முதலிடத்தில் உள்ளார்.

பந்து வீச்சில் முரளிதரன் ஒரு நாள் மற்றும் டெஸ்ட் போட்டி ஆகிய இரண்டிலும் முதலிடத்தில் உள்ளார்.

இவர் டெஸ்ட் போட்டியில் 151 புள்ளிகளும் ஒரு நாள் போட்டியில் 141 புள்ளிகளும் பெற்றுள்ளார்.

டெஸ்ட் போட்டியில் இரண்டாவது இடத்தை ஆஸ்திரேலியாவின் வேஷன்வோர்னும் ஒரு நாள் போட்டியில் இந்தியாவின் இர்.'.பான் பதானும் பிடித்துள்ளனர்.

அணி வரிசையில் ஒருநாள் மற்றும் டெஸ்ட் போட்டி இரண்டிலும் ஆஸ்திரேலியா முதலிடத்தில் உள்ளது. இந்தியா ஒருநாள் போட்டியில் இரண்டாவது இடத்திலுள்ளது. டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்துடன் மூன்றாவது இடத்தைப் பகிர்ந்து கொண்டுள்ளது. (10-5)

## ஓய்வூதியத் தொகையை ஆதரவற்றோர் இல்லத்துக்கு வழங்கிய கபில்தேவ்

தனது ஓய்வூதியத் தொகையை ஆதரவற்றோர் இல்லத்துக்கு வழங்கினார் இந்தியக் கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் கபில்தேவ்.

இந்திய டெஸ்ட் கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரர்கள், நடுவர்களுக்கு மாதாந்தம் 5000 ரூபா ஓய்வூதியம் வழங்கும் திட்டம் கடந்த வெள்ளிக்கிழமை தொடங்கியது.

முதல் தடவையாக கபில்தேவுக்கு 5000ரூபா வழங்கப்பட்டது.

அந்தத் தொகையை ஆதரவற்றோர் இல்லத்தை நடத்தும் ஹமராகர் என்பவரிடம் வழங்கியதாக கபில் தெரிவித்தார்.

இதன் மூலம் 5சிறுவர்கள் பயன் பெறுவர் என்றும் இந்தத் தொகை தேவைப்படாதோர் தேவையுள்ளவர்களுக்கு வழங்குமாறும் கபில்தேவ் கேட்டுள்ளார். (-10-5)

## இப்பொழுது எனக்குக் கெட்டகாலம்: துடுப்பாட்ட வீரர் சடகோபன் ரமேஷ்

சென்னை,மே23

சென்னை மயிலாப்பூரில் உள்ள ஒரு நட்சத்திர ஹோட்டலில் ஒரு விழாவில் பங்கேற்க வந்த அவரது வருகையை எதிர்பார்த்துக் காத்திருந்த அனைவரது கண்களும் அவரை மொய்க்கின்றன. அந்த முகம். ஆம்! அவர்தான்.... சடகோபன் ரமேஷ்.

பாகிஸ்தான் அணி இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்தபோது இந்திய அணியின் துவக்க ஆட்டக்காரராக ஆடினார் இவர்.

ராவல்பிண்டி எக்ஸ்பிரஸ் என அழைக்கப்படும் வேகப்பந்து வீச்சாளர் சொகைப் அக்தர், இந்திய அணியை அதன் மண்ணிலேயே துவம்சம் செய்தார். திறமையானவர்களே ஆயினும் அதிரடி ஆட்டக்காரர்களும் சொகைப் அக்தர் என்ற பெயரைக் கேட்டு சிறிது கிலியுடன் ஆடி விக்கெட்டுக்களை இழந்தனர். ஆனால், துவக்க வீரராக இறங்கிய ரமேஷ், அக்தரின் புதுப் பந்து வீச்சைப் பயமின்றி எதிர் கொண்டு ரசிகர்களைப் பரவசப்படுத்தினார். வேகமாக ரன்களைக் குவித்தார். பிரெட்லீ, அக்தர் என உலகின் தலைசிறந்த வேகப் பந்து வீச்சாளர்களின் பந்துகளைப் பயமின்றி எதிர்கொண்டவருக்குப் பிரெட்லீயே தடைக கல்லானார்.

ஆஸ்திரேலி சுற்றுப்பயணம் (இம்முறைக்கு முந்தையது) சென்ற போது பிரெட்லியின் பந்துவீச்சில் கைவிரலில் ஏற்பட்ட காயம் ரமேசைக் கிரிக்கெட் உலகில் இருந்து சிறிதுகாலம் விலக்கிவைத்தது.

அதன்பிறகு இந்திய அணிக்கு தாஸ், ஷேவாக், ஆகாஷ் சோப்ரா போன்ற துவக்க வீரர்கள் கிடைத்ததால் மீண்டும் அணியில் இடம் பெறும் வாய்ப்பை இழந்தார்.

ஆனால், மனம் தளராது உள்நாட்டுப் போட்டிகளில் சிறப்பாக விளையாடி அண்மையில் ஆஸ்திரேலியா சென்ற இந்திய அணியில் இடம்பெற்ற ரமேஷ் மீண்டும் தனது திறமையை வெளிப்படுத்துவார். (-10)

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

ஒரு கைப்பாவனையில், நல்ல நிலையிலுள்ள HERO HONDA CD 100 SS விற்பனைக்குண்டு. வார நாள்களில் மாலை 4.00 மணிக்குப் பின்பும் சனி, ஞாயிறு முழுநாளும் பார்வையிடலாம். தொடர்பு: 22, சுவாமியார் வீதி, கொழும்புத்துறை, யாழ்ப்பாணம். T.P.: 3811 (32202)

கலர்மீன்கள், மீன்தொட்டிகள், அழகுசாதனப் பொருள்கள், பூச்சாடிகள், பூங்கன்றுகள், மஞ்சள் மொசந்தாஸ், டல்மேசன், அல்ஷேசன் நாய்க குட்டிகள், நாய்க்கூடுகள், லவ்பேட்ஸ், குருவிக்கூடுகள், விற்பனைக்குண்டு. தொடர்பு: 40/11, சீனியர் லேன், தட்டாதெரு, யாழ்ப்பாணம். (32186)

11ஸ்ரீ 5... கொரில்லா கார் விற்பனைக்குண்டு. தொடர்பு: 19/1, B.A தம்பி வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம் T.P மோகன் - 021 222 2453 (32247)

இரும்புப் பெட்டி, பித்தளைப் பொருள்கள், ஆட்டுக்கல் என்பன விற்பனைக்குண்டு. (ஞாயிற்றுக்கிழமைகளில் பார்வையிட லாம்) தொடர்புகளுக்கு 34/3, உடையார்லேன், பழம் றோட், கந்தர்மடம், யாழ்ப்பாணம்(32220)

மூன்று மாதம் நிறைந்த யேமன் செப்பேட் அல்ஷேசன பெண் நாய்க் குட்டி ஒன்று விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு ம.மார்க்கண்டு M.S.லேன் கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில். (32221)

சுன்னாகம், கந்தரோடையில் 14 பரப்பு வயல் காணி கிணற்றுட விற்பனைக்கு உண்டு. தொடர்பு T.P 0788 906103 (32221)

தரமான Prima Broiler மற்றும் பேட்டுக்குஞ்சுகள் 07.06.2004 முதல் விநியோகிக்கப்படும். பருத்தித்துறைக் கிளையிலும் Suddi Farm வட்டுக் கோட்டையிலும் பெற்றுக்கொள்ளலாம். முன்கூட்டி பதிவு செய்யவும். தொடர்பு: க.தனபாலசிங்கம் (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), 19,முருகேசர் ஒழுங்கை முத்திரைச்சந்தையடி, நல்லூர் (32515)

நல்ல அழகான Great Dane X Dobermann Pincher நாய்க்குட்டிகள் (2½ மாதம்) 2 உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு:க.தனபாலசிங்கம் (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), 19,முருகேசர் ஒழுங்கை முத்திரைச் சந்தையடி, நல்லூர். (32514)

## வாடகைக்கு

குளிரூட்டிய, தொலைக்காட்சி வசதிகளுடன் கூடிய சௌகரியமான அறைகள நாராஹேன்பிட்டியவில் (Narahanpitia-Colombo-05) அப்பலோ மருததுவ மனைக்கு அருகில் வாடகைக்குண்டு. தொலைபேசி 0777 873764. (31986)

## தவறிவிட்டது

உடுவிலைச் சேர்ந்த இபத்மநாதன என்பவரின் மோட்டார் சைக்கிள் பதிவுப் புத்தகம், வரி அனுமதிப்பத்திரம், காப்புறுதிப் பத்திரம் போன்ற ஆவணங்கள் பையுடன் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து கீழ்க காணும் முகவரியில் ஒப்படைத்துதவவும். R.பத்மநாதன் உடுவில் தெற்கு. T.P No. 0777 - 222545 (32511)

## மணமகன் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 24 வயது, மிகுந்த அழகும், 5½ அடி உயரமும், கொம்பியூட்டர் படித்த பெண்ணுக்கு வெளிநாட்டில் வேலை பார்க்கும் மணமகன் தேவை. தொடர்பு: விளம்பர இல. 2271, மே/பா உதயன். (32191)

இந்து கௌரவ குடும்பம், 1962ஆம் ஆண்டு பிறந்த, செவ்வாய்க் குற்றமுள்ள A/L சித்தியடைந்த மணமகளுக்கு அரச அல்லது தனியார் துறை உத்தியோகத்தர் அல்லது சொந்தக் கடையுள்ள மணமகன் தேவை. தாரமிழந்தவர்களும் விண்ணப்பிக்கலாம். குடும்ப விவரம், குறிப்புடன் தொடர்பு கொள்ளவும் விளம்பர இல. 2273 மே/பா உதயன். (32504)

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம் 39 வயது, 5' 3" உயரமுள்ள லண்டன பிரஜையான சுவாதி நட்சத்திரம் 2ஆம பாதம் டாக்டர் மணமகனுகசு அதே குடும்பத்தில் மெல்லிய அழகிய நிறமான மணமகள் தேவை. பெண்ணின குடும்ப விவரம், ஜாதகக் குறிப்பு முதலான முழு விரைங்களுடன் விண்ணபபிக்கவும். தொடர்பு: Dr. S. Rajakumar, 3 Beech wood, Rise, Watford wd 24 65E U.K. (சி-35128)

கௌரவ குடும்பம், சுவாதி, 34 வயது, அசைவ செவ்வாய்க்குற்றமற்ற லண்டன் வாழ் கணக்காளர், பட்டதாரி அழகிய மணமகனுக்கு லண்டன், கனடா வதிவிட உரிமைபெற்ற தகுதியான அழகான மணமகள் தேவை. தொடர்பு: க.வி.மயில்வாகனம், ஓய்வு பெற்ற அஞ்சல் அதிபர், கைதடி.(32219)

## மணமக்கள் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த அழகான பெண்ணுக்கு 37-45 வயதுக்கு இடைப்பட்ட உத்தியோக, ஆசிரிய, சுயதொழில் மணமகன் தேவை. சிறந்த சீதனம் வழங்கப்படும. இங்கிலாந்துப் பிரஜையான முகாமைத்துவ, இங்கிலாந்து பட்டதாரியான நற்குணம் வாய்ந்த தம்பியார் மாற்றுச் சம்பந்தத்துக்கும் இடமுண்டு. தொடர்பு: வி.இல. 2272 மே/பா உதயன், யாழ்ப்பாணம். (32234)

## தேவை

விற்பனைப் பிரதிநிதி ஒருவருக்கு யாழ்நகரை அண்டிய பகுதியில் அறை ஒன்று June முதலாம் திகதி முதல் தேவை. தொடர்பு: ஜோதி T.P. 0777 301394 (32225)

## மணமகள் தேவை

1972இல் பிறந்த, இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, விசாக நட்சத்திரமுள்ள லண்டனில் வசிக்கும் மணமகனுக்கு 5அடி உயரமுள்ள அழகிய மணமகள் தேவை. சீதனம் பெரிதாக எதிர்பார்க்கப்படமாட்டாது. சாதகக் குறிப்புடனும் புகைப்படத்துடனும் விண்ணப்பிக்கவும்.

**ப.கிருஷ்ணமூர்த்தி**
*(தேவி அச்சக ஒழுங்கை)*
114/19, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
போன்: 2789 (32195)

## திருமண சேவை

எங்களிடம் இந்து, கிறிஸ்தவ தோஷமுள்ள, தோஷமற்ற, வெளிநாடு, உள்நாடு அனைத்துத்துறை சார்ந்த மணமக்களின் ஜாதகக் குறிப்புக்கள் உள்ளன. தொடர்பு: சிவாலயா சர்வதேச திருமண நிலையம். ஸ்ரீவைகுந்த ஆச்சிரமம், 68/15, சட்டநாதர் வீதி, நல்லூர் (சமுர்த்தி வங்கிக்கு அருகில்) யாழ்ப்பாணம். (32516)

68 ஆம் ஆண்டு, டாக்டர், 73ஆம் ஆண்டு போமன் ஆகிய அரச தொழில மணமகன்களிற்கு மணமகள் கள் தேவை. தொடர்பு: துர்க்கா திருமண சேவை 101/1, ஓட்டுமடம் வீதி, சிவலிங்கப் புளியடி (K.K.S. வீதி) யாழ்ப்பாணம். பதிவுகள் யாவும் இலவசம். (32515)

## விற்பனைக்கு

இல.15/8, ஓட்டுமடம், செபஸ்ரியார் வீதியில் 5 பரப்புக் காணியுடன் சகல வசதிகளுடனும் அமைந்த மாடிவீடு விற்பனைக்கு உண்டு.

தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:

**த.கனகரத்தினம்**
இல.234/6, செபஸ்ரியார் வீதி,
ஓட்டுமடம், யாழ்ப்பாணம்.
(32232) (40)

## தேவை

*தொலைபேசி விற்பனை நிலையத்துக்குப் பெண்கள் தேவை.*

1. தொலைபேசி இயக்குநர்
2. போட்டோ பிரதி இயக்குநர்
3. கணக்காளர்
4. விற்பனையாளர்

தொடர்பு:

**யாழ். போன் சொப்**
*இல. 10, நவீன சந்தை மேல்மாடி, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.*
(சி-35122)

## மலிவு விலையில்

சைக்கிள் கியர் மற்றும் சைக்கிள் - சைக்கிள் உதிரிப்பாகங்கள்

**சேது களஞ்சியம்**
*230, கே.கே. எஸ் றோட், யாழ்ப்பாணம்.*
(32195) T.P: 2529 (37)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு: 06-03-1948
இறப்பு: 23-05-2003

**திருமதி சிவகாமசுந்தரி பரமேஸ்வரன்**

அன்போடு ஆதரித்து அரவணைத்த அன்னையே
பண்போடு வாழ்ந்து மறைந்த அம்மாவே!
இன்றோடு ஓராண்டு ஆனாலும் நினைவுகள்
ஒன்றோடு ஒன்று நிலைத்தே இருக்கும்
ஆத்மா சாந்தியடைய அம்பாளை வேண்டுகிறோம்.

420. காங்கேசன்துறை வீதி,
பன்றிக்கோட்டுப் பிள்ளையார் கோயிலடி,
யாழ்ப்பாணம்.

அன்புக் கணவர் சோ.பரமேஸ்வரன்,
பிள்ளைகள்: ப.சர்வேஸ்வரன்,
ப.பிரகதீஸ்வரன் மற்றும் உறவினர்கள்.
(32507) (26)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம் 26 - 05 - 1918



மறைவு 23 - 04 - 2004

திருமதி

**பிலோமினா சின்னத்தங்கம் வேலும்மயிலும்**

(ஓய்வுபெற்ற ஆசிரியை)

நீர் நீதியுள்ள நடுவராய் அரியணையில் வீற்றிருக்கிறீர்
என் வாழ்வில் நீதி வழங்கினீர்
அன்னையே! நாம் உதித்த நாள் முதல் இன்றுவரை
நின் அருட்பேரொளியினால் எம்மை வளர்த்தெடுத்து
நல்லவராக்கினீர் இன்று நாம் மாலுமியில்லா
மரக்கலமானோம்.

எமது தாயின் இறுதிச்சடங்கில் பங்குபற்றியோர், துக்கம் பகிர்ந்தோர், மலர்வளையம் வைத்து அஞ்சலித்தோர், தபால், தந்தி மூலம் அனுதாபம் தெரிவித்தோர் அனைவருக்கும் நன்றியைத் தெரிவிப்பதுடன், இன்று (23-05-2004) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் மதிய போசனத்திலும் பங்குபற்றுமாறு கேட்டுக்கொள்ளுகிறோம்.

**பாக்கியநாதன்** Dr. **வேலும்மயிலும்** (மருமகன்)
**மனோகரன்** (மகன்)
மகள்: **மனோ, ரஞ்சி,**
**பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.**

மயிலங்காடு,
ஏழாலை தெற்கு, சுன்னாகம். (32509) (26)


# Sainas Travels & Tours

**(Labour Licence No - 10004)**

Tel.:0115-365050,0115-376907
Fax.:0115-376908,
Hot Line:0777-311880

190, George RD, Silva Mawatta.
Colombo -13,
Sri Lanka.

## உடனடி டோஹா வேலை வாய்ப்புக்கள்

| தேவைப்படும் தொகையினர் | வேலைவிபரங்கள் | வயது | சம்பளம் | ரூபா |
|---|---|---|---|---|
| 25 | டீ போய் | 20 - 30 | 500 QR | 14000 |
| 15 | டீசல் மெக்கானிக் | | 1100 QR | 30800 |
| 18 | பெட்ரோல் மெக்கானிக் | | 700 QR | 19600 |
| 65 | மேசன் | | 700 QR | 19600 |
| 15 | ஸ்டீல் பிட்டர் | | 800 QR | 22400 |
| 65 | ஷடரிங் காபென்டர்ஸ் தச்சுவேலை | | 750 QR | 21000 |
| 25 | இலக்ரீசியன் (கட்டிடம்) | | 700 - 800 QR | 19000 - 22400 |
| 15 | வீட்டு சாரதி (Driver) | | 600 QR | 16 800 |
| 15 | கணக்காளர்கள் (Gulf Experience) | | 1200 - 1500 QR | 33600 - 42000 |
| | பொது வேலையாட்கள் (கட்டுமான வேலை) | | 500 QR | 14000 |
| 10 | சிவில் இஞ்சினியர் | | 2500 QR | 70000 |
| 15 | கட்டிட போமன் | | 1500 QR | 42000 |
| 10 | painters | | 550 QR | 15400 |
| 15 | சாதாரண வாகன சாரதி (Light Vehicle Driver) | | 600 QR | 16800 |
| 15 | டிங்கர் | | 700 QR | 19600 |
| 5 | மெசின் டெக்னீசியன் | | 750 QR | 21000 |
| 5 | தொழில் பாமசி (Industrial Pharmacy) | | 1200 QR | 33600 |
| 3 | தரக்கட்டுப்பாட்டாளர் Quality Controller | | | |
| | Lab Technician | | 1000 QR | 28000 |
| 3 | ஆய்வுகூட டெக்னீசியன் | | 800 - 1000 QR | 22400 - 28000 |
| 3 | பாதுகாவலர்/வரவேற்பாளர் | | 400 QR | 11200 |
| 1 | செயலாளர் | | 600 - 800 QR | 16800 - 22400 |
| 1 | கணனி பொறியியலாளர் | | 800 - 1000 QR | 22400 - 28000 |
| 5 | வைத்திய நிபுணர்கள் General Acupuncture Othurpatic | | சம்பளம் பேசி தீர்மானிக்கப்படும் | |
| 10 | குஷன் மேக்கர் (Van upostery) | | 700 - 800 QR | 19600 - 22400 |
| 10 | குஷன் மேக்கர் (chair) | | 700 - 800 QR | 19600 - 22400 |

ஈராக் - உடனடி வேலை வாய்ப்பு (ஆண்களுக்கு)
(Jordan, Doha, K.S.A, Dubai- Kuwait வீட்டுப் பணிப் பெண்கள் - உடனடிப் பயணம்.)




உ
கணபதி துணை (21)

## வேலணை மேற்கு பெரியபுலம்
## மகா கணபதிப் பிள்ளையார் (முடிப்பிள்ளையார்) கோயில்
## வருடாந்த மஹோற்சவ விஞ்ஞாபனம் - 2004

*இங்கரன் அடியார்களே!*

மேற்படி ஆலய வருடாந்த மஹோற்சவம் மங்களகரமான தாரண வருடம் வைகாசித் திங்கள் 10 ஆம் நாள் இன்று (23.05.2004) ஞாயிற்றுக் கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 11 நாள்கள் நடைபெறத்திருவருள் பாலித்துள்ளது!

கொடியேற்றம்: இன்று 23.05.2004 ஞாயிறு பகல் 11 மணி
சங்காபிஷேகம் (உற்சவமூர்த்தி): 24.05.2004 திங்கள் காலை 9.30 மணி
சங்காபிஷேகம் (மூலமூர்த்தி): 26.05.2004 புதன் காலை 9.30 மணி
வேட்டைத்திருவிழா: 30.05.2004 ஞாயிறு பிற்பகல் 3.00 மணி
சப்பரம்: 31.05.2004 திங்கள் இரவு 8.00 மணி
தேர்: 01.06.2004 செவ்வாய்க்கிழமை மு.ப.10.30 மணி
தீர்த்தம்: 02.06.2004 புதன் மு.ப.10.00 மணி

அடியார்கள் அனைவரும் கலந்துகொண்டு எம்பெருமானின் இஷ்ட சித்திகளைப் பெற்றுய்யும் வண்ணம் கேட்டுக்கொள்ளின்றோம்.

- பரிபாலன சபையினர்.

*தொ. பே. இலக்கம் 021. 4590840*
*பெரியபுலம் மகா கணபதிப்பிள்ளையார் கோயில்,*
*வேலணை தெற்கு.*
(32502)(37-16-19-21)

| | | | |
|---|---|---|---|
| | புத. ரா. | சூ. ▲ | சந்.செவ். வெ. சனி. |
| | இராசிச் சக்கரம் | | |
| | | | வியா. |
| | | கே. | |

# இந்த வார இராசி பலன்

## 23-05-2004 - 29-05-2004

### மாற்றம்:

23.05.2004 இல் புனர்பூசம் நட்சத்திரம் மிதுனம் இராசியில் சந்திரன் நிற்கும். 26.05.2004 இல் இடபத்தில் புதன் மாறிவரும்.

கிழக்கில் விட்டுவிட்டு வன்முறைகள் அதிகரிக்கும். அரசியலில் பேச்சுத் தொடரும். ஒரு தளம்பல் நிலை ஏற்படும். வெளிநாட்டவர்கள் கூடிய கவனம் செலுத்துவர். மாறி மாறிப் பேச்சு நடக்கும். உலகநாடுகள், குறிப்பாக இந்தியா கூடிய கவனம் செலுத்தும் இந்தியாவில் அரசியல்நிலையில் ஒரு மாற்றம் கொடுக்கும். சோனியா காந்திக்கு அச்சுறுத்தல் இருக்கும். கருணாநிதி தெற்கில் போராட்டம் நடத்துவார். இந்துசமுத்திரம் மற்றும் பசுபிக் சமுத்திரப் பிராந்திய நாடுகளில் காற்று, வெப்பநிலை அதிகரித்து, அழிவுகள் ஏற்பட இடமுண்டு எனக் கிரக நிலைகள் காட்டுகின்றன.

### மேடம்

வீடு, மனை சம்பந்தமான பிரச்சினைகள் மனவேதனையைத் தரும். பொருள்செலவு அதிகரிக்கும். கோபத்தால் கொதிப்பதனால் என்ன பயன்? காரியத்தில் கண்ணாயிருந்து புதிய திட்டங்களைப் போடவும். தலை சம்பந்தமான வருத்தம், நரம்பு உளைவு கொடுக்கும். விவசாயிகளுக்கு நன்மை கொடுக்கும். கமிஷன் வேலை, பாதுகாப்புத் துறைகளைச் சேர்ந்தவர்களுக்கு நன்மைகள் அதிகரிக்கும். பொதுத் தொண்டில் புகழ் அடைவீர்கள்.

*அதிர்ஷ்ட நாள்கள்: திங்கள், புதன்.*

### இடபம்

அதிகாரத்திலுள்ளவர்கள் நீதியற்றிருந்தால் இந்தச் சமூகம் அழிவுப் பாதையில் செல்லும். இதையெல்லாம் அதிகமாகச் சிந்தித்துக் கொண்டிருக்காதீர்கள். காலச்சக்கரத்தை ஓட்டுபவன் கவனமாகத்தான் பயன்களைக் கொடுக்கின்றான். அதிகாரத்திலுள்ளவர்கள், மேலதிகாரிகள் அடிக்கடி உதவுவார்கள். எதிர்ப்பாலார்கள் உதவி செய்வார்கள். மந்திர தந்திர நாட்டம் ஏற்படும். தொழில்நிலையில் புதிய அபிவிருத்திகள் தோன்றும். நாரிநோ, சளித்தொல்லை, ா.வி., டெக், கம்பியூட்டர் துறையினர்கள் அதிக லாபம் அடைவார்கள்.

*அதிர்ஷ்ட நாள்கள்: திங்கள், புதன், வெள்ளி.*

### மிதுனம்

பலருடைய ஆலோசனைகளைக் கேட்டுச் செயற்பட முடியுமா? உதவிக்கு வருபவர்களால் உபத்திரவம் வரும். பண இழப்பு, நண்பர்களால் அதிக செலவுகள் ஏற்படும். நண்பர்கள் உதவி செய்வார்கள். ஏட்டிற்குப் போட்டியான சம்பவங்கள் நடக்கும். சலிப்பு, களைப்பு, கை, கால் அடிபாடு, காயம் என்பனவரும். குருத்தொழில், அஞ்சல்பகுதி, செய்தித்துறை, பத்திரிகைத்துறையினர்களுக்கு நன்மைவரும்.

*அதிர்ஷ்ட நாள்கள்: திங்கள், புதன்.*

### கடகம்

விதி எவரையும் விடாது. எதிர்கொண்டு பொறுமையாக இருங்கள். பொருள்வரவு அதிகரிக்கும். நம்பிக்கை உறுதி தரும். மேலதிகாரிகள் நன்மை செய்வர். அரசியல்வாதிகள் உதவிகள் செய்வார்கள். தூரதேசம் செல்ல யோசனைகள் சந்தர்ப்பங்கள் ஏற்படும். வயிற்று வருத்தம், சலவருத்தம் கொடுக்கும். வியாபாரிகள் நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்ட நாள்கள்: திங்கள், புதன்.*

### சிங்கம்

உறுதியாக மக்களுக்கு உள்ளதைச் சொல்லுவோம். பல துன்பங்கள் வந்துபோகும். எதையும் தாங்கிச் செயற்படுவோம். தொழில்துறையில் புதிய பொறுப்புக்கள் கொடுக்கும். சகோதரங்கள் உதவி செய்வார்கள். பிரயாணத்தால் நன்மைகள் ஏற்படும். பொருள்வரவு ஏற்படும். நாரி உளைவு, இரத்த அழுத்தம் வரும். குருத்துறை, சட்டத்துறை, வியாபாரத்துறை போன்ற துறையினர்கள் நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்ட நாள்: புதன்.*

### கன்னி

இலக்கினாதிபதி அட்டமத்தில் இருப்பதனால் திட்டமிட்டு இடமாற்றம், பிரயாணங்களைச் செய்வீர்கள். திருமணச் சுக பேச்சுக்கள் நாடி ஓடிவரும். பணவரவு இருக்கும். கால் வருத்தம், சளித்தொல்லை, வயிற்றுநோ இருக்கும். குருத்தொழில், பத்திரிகைத் துறை, அஞ்சல்துறை, சங்கீதத்துறையினர்களுக்கு மாற்றங்களும் நன்மைகளும் கொடுக்கும்.

*அதிர்ஷ்ட நாள்கள்: புதன், வெள்ளி.*

### துலாம்

ஒவ்வொருவருடைய பலாபலன்கள் தனித் தனியாகப் பலன் செய்தபடி இருக்கும். நீஙகளும் உங்கள் குடும்பத்தவர்களுடன் அடிக்கடி மோதியபடி இருப்பீர்கள். வீடு, வாகன யோகம் உடையவராகவும் புத்திரர் சகோதரங்களின் முன்னேற்றத்திற்காகப் பாடுபடுபவர்களாகவும் இருப்பீர்கள். தொழில்ஸ்தானத்தில் நீங்கள் கண்டிப்பாக இருப்பதனால் சிலர் மறைமுக எதிரிகளாவார்கள். பெற்றோரின் எதிர்ப்புக்கள் இருக்கும். நாரிநோ, இரத்த அழுத்தம், சளித்தொல்லை என்பன இருக்கும். வியாபாரிகள், சட்டவாதிகள், ஆசிரியர்களுக்கு மாற்றங்கள் ஏற்படும்.

*அதிர்ஷ்ட நாள்கள்: ஞாயிறு, புதன், வெள்ளி.*

### விருச்சிகம்

செல்வாக்கு - லஞ்சம் - அராஜகம் இன்று நாட்டில் தலைவிரித்தாடுகின்றன. சட்டம் துடிக்கின்றது. மக்கள் பயப்படுகின்றார்கள். இது இன்றைய நிலை. இதையறிந்து சட்டத்தை அறிந்து நீங்கள் செயற்பட வேண்டும். அல்லது குற்றவாளி ஆக்கப்படுவீர்கள். தொழிலில் ஊக்கத்துடன் இருக்கவும். பணவரவு கொடுக்கும். அன்னியர் உதவுவார்கள். புதிய திட்டமிட்டு தொழிலை விரிவுபடுத்தச் சிந்திப்பீர்கள். பிரயாணங்களை நிதானமாகச் செய்யுங்கள் அல்லது இழப்புவரும்.

*அதிர்ஷ்ட நாள்கள்: ஞாயிறு, புதன், வெள்ளி.*

### தனுசு

நீங்கள் எதை எடுத்தாலும் தடை, தாமதமாக இருப்பதாகச் சொல்லுவீர்கள். இடத்திற்கிடம் மாறுபட்டுக் கதைப்பீர்கள். பொருள் வரவு அதிகரிக்கும். புதிய நண்பர்கள் உதவி செய்வார்கள். அடிக்கடி பிரயாண நிலை தோன்றிச் செலவுகளைத் தரும். இனஜனக் கொண்டாட்டம் இருக்கும். பொருள்கள் தவறலாம். குடும்பத்தினரின் அலுவல்களுக்காக ஓடியாடித் திரிவீர்கள். சளித் தொல்லை, கால் உளைவு இருக்கும். புதிய திட்டமிட்டு நண்பர்களுக்கு உதவிகள் செய்வீர்கள். வியாபாரிகள், சட்டத்துறையினர்கள் உதவி செய்து நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்கள்: ஞாயிறு, திங்கள், புதன், வெள்ளி.*

### மகரம்

அட்டமத்து வியாழன் கடும தாக்கம் தரும். உங்கள் அட்டகாசத்தால் நண்பர்கள் ஓடி மறைவார்கள். படிப்படியான மாற்றம் பணவரவு கொடுக்கும். உறவினர்கள் வரவு, தூர இடங்களிலிருந்து நற்செய்திகள் தருவார்கள். செலவு அதிகரிக்கும். தொழில் பீடத்தில் மேலதிகாரிகளின் அனுசரணைகள் இருக்கும். அடிக்கடி மனப் பேதலிப்பு - நம்பிக்கையில்லாத் தன்மை இருக்கும். முதுகு உளைவு கொடுக்கும். வியாபாரிகள், ஆராய்ச்சிப் பகுதியினர், குருத்துறையினர்களுக்குப் பல மாற்றங்களைக் கொடுக்கும்.

*அதிர்ஷ்ட நாள்கள்: திங்கள், வெள்ளி.*

### கும்பம்

பிறருக்காக உங்கள் நேரங்களைச் செலவு செய்வீர்கள். குருபார்வை இருப்பதனால் பிறர் உதவிகள் செய்து தருவர். புதிய நண்பர்கள் தொழில்ஸ்தானத்தில் உதவிகள் செய்து தருவார்கள். படிப்படியாக தொழில்ஸ்தானத்தில் நன்மைகள் அதிகரிக்கும். குடும்பத்தினரிடையே அபிப்பிராய பேதங்கள் கொடுக்கும். வயிற்றில் நோ, கால்விறைப்புக் கொடுக்கும். குருத்துறை, வியாபாரத்துறை, அரசியல் துறைகளைச் சேர்ந்தவர்களுக்கு நன்மைகள் கொடுக்கும்.

*அதிர்ஷ்ட நாள்: திங்கள்.*

### மீனம்

முன்னேற்றமான காலமாகும். பொருள் வரவு புத்திரர் சிறப்பு, இனஜனக் கொண்டாட்டம் கொடுக்கும். வழக்கு விசாரணை உண்டு. வெற்றி கொடுக்கும். இடமாற்றங்கள் ஏற்படும். குடும்பச் செலவுகள் அதிகரிக்கும் கால் விறைப்பு, சளித் தொல்லைகள் ஏற்படும். வியாபாரிகள், குருத்துறையினர்கள் நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்: திங்கள்.*

**மகாதேவா ஜோதிடம்**

---

# சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், மே23

வேலணை மேற்கு, பெரியபுலம் மகாகணபதிப் பிள்ளையார் (முடிப் பிள்ளையார்) ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று முற்பகல் 11 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் முதலாம் திகதி காலை 10.30 மணிக்குஇரதோற்சவமும் மறுநாள் காலை 10மணிக்குத் தீர்த்தோற்சவம் நடைபெறும். (-10)

★ ★ ★

வடமராட்சி, மே23

வடமராட்சி ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் கோயில் பெரியாழ்வார் மடத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11மணிக்கு இடம்பெறும் வாராந்த ஆன்மீகச் சொற்பொழிவு வரிசையில் 'உலக வாழ்வியலில் சமயம்' என்ற தலைப்பில் யாழ்.பல்கலைக்கழக தமிழ் சிறப்புக்கலை இறுதி வருட மாணவன் செல்வன் வே. நந்தகுமார் சொற்பொழிவாற்றுவார். (-10-173)

★ ★ ★

கொழும்புத்துறை, மே23

கொழும்புத்துறை கிழக்கு ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய கும்பாபிஷேகம் இன்று நடைபெறவுள்ளது. (-10-30)

★ ★ ★

வடமராட்சி, மே23

புலோலி சின்னத்தாய் விநாயகர் ஆலய மகாசங்காபிஷேகம் இன்று நடைபெறவுள்ளது. (-10-173)

★ ★ ★

சாவகச்சேரி, மே23

மீசாலை திருநீலகண்ட வெள்ளை மாவடிப் பிள்ளையார் ஆலய வருடாந்த மணவாளக்கோல விழா இன்று காலை 8 மணி தொடக்கம் நடைபெறவுள்ளது.

சங்காபிஷேகமும் விசேட பூசை வழிபாடுகளும் விநாயகர் வீதியுலா வருதலும் இடம்பெறுவதுடன் அன்னதானமும் வழங்கப்படவுள்ளது.(-10-31)

மட்டுவில், சந்திரபுரம் ஸ்ரீமகா முத்துமாரி அம்பாள் கோயில் வருடாந்த மஹோற்சவம் நாளை திங்கட்கிழமை முற்பகல் 11மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறும்.

இம்மஹோற்சவத்தின் இரதோற்சவம் எதிர்வரும் முதலாம் திகதி காலை 9மணிக்கும் தீர்த்தோற்சவம் மறுநாள் காலை 9மணிக்கும் இடம் பெறும். (-10-173)

★ ★ ★

சரசாலை நுணுவில் சிதம்பர விநாயகர் ஆலய மஹோற்சவம் நாளை திங்கட்கிழமை காலை 10மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறவுள்ளது.

முதலாம் திகதி காலை 8மணிக்கு இரதோற்சவமும் மறுநாள் காலை 8.30மணிக்கு தீர்த்தோற்சவமும் இடம் பெறும். (-10-117)

★ ★ ★

வலி.மேற்கு, மே23

வட்டுக்கோட்டை மேற்கு சின்னக் கதிர்காம ஆலயத்தின் வருடாந்த அலங்கார உற்சவம் நேற்றைய தினம் சனிக்கிழமை ஆரம்பமாகியுள்ளது.

தொடர்ந்து பத்து நாள்கள் திருவிழாக்கள் நடைபெறவுள்ளன. (-10-175)

★ ★ ★

யாழ்ப்பாணம்,மே23

தீயாய் அம்மன் ஆலயத்தின் வருடாந்த பொங்கல் விழா எதிர்வரும் 28 ஆம் திகதி நடைபெறவுள்ளது. (-10-36)

★ ★ ★

செம்பியன்பற்று புனித பிலிப் பினேரியார் ஆலயத் திருவிழா கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

தொடர்ந்து 10 நாள்கள் திருவிழா நடைபெறும். இறுதி நாளான எதிர்வரும் 26ஆம் திகதி திருநாள் திருப்பலிப் பூசை இடம்பெற்று, திருச்சொருபம் வீதியுலாவரும். (-10-36)

★ ★ ★

கொழும்புத்துறை மேற்கு வதிரி பீட மன்றுளாடும் பெருமான் விநாயகர் திருக்கோயில் வருடாந்த மஹோற்சவம் நாளை திங்கட்கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றதுடன் ஆரம்பமாகிறது. தொடர்ந்து 10 நாள்கள் நடைபெறும் உற்சவத்தில் எதிர்வரும் முதலாம் திகதி இரதோற்சவமும் மறுநாள் தீர்த்தோற்சவமும் நடைபெறும். (-10-15-78)

★ ★ ★

பருத்தித்துறை ஆத்தியடிப் பிள்ளையார் கோயில் வருடாந்த மஹோற்சவம் நாளை திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

தொடர்ந்து 10 நாள்கள் நடைபெறும் உற்சவத்தில் எதிர்வரும் முதலாம் திகதி இரதோற்சவமும் மறுநாள் தீர்த்தோற்சவமும் நடைபெறும். (-10-15-78)

★ ★ ★

காரைநகர்,மே23

காரைநகர் பாலாவோடை குறிஞ்சாக்குழி முத்துமாரி அம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளை திங்கட்கிழமை காலை 10மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறவுள்ளது. இரதோற்சவம் அடுத்த மாதம் 2ஆம் திகதியும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் நடை பெறவுள்ளன. (-10-73)

★ ★ ★

காரைநகர் மடத்துக்கரை முத்துமாரி அம்மன் ஆலய வருடாந்த வேள்வி உற்சவம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 7மணி தொடக்கம் இடம்பெறவுள்ளது. (-10-73)




**யாழ்ப்பாணத்தில் அண்மையில் 'ஸ்கிரீன் பிரிண்டிங்' பயிற்சிநெறியை இந்திய அச்சுக்கலை நிபுணர் ஆர்.பரதன் நடத்தியபோது எடுக்கப்பட்ட படம். பயிற்சியில் கலந்துகொண்டோரும் படத்தில் உள்ளனர். (-10)**

# வலி. மேற்குப் பிரதேச ஓய்வூதியர் கவனத்துக்கு!

வலி.மேற்கு,மே23

வலிகாமம் மேற்குப் பிரதேசத்தில் அதிபர்களாகவும் ஆசிரியர்களாகவும் பணியாற்றி 31.12.1996ஆம் திகதிக்கு முன்னர் ஓய்வுபெற்ற அனைத்து ஓய்வூதியர்களையும் வலி.மேற்கு பிரதேச செயலக ஓய்வூதியப் பிரிவுடன் தொடர்புகொண்டு படிவம் ஒன்றினைப் பெற்றுப் பூரணப்படுத்தி ஒப்படைக்குமாறு பிரதேச செயலர் சீ.ஏ.மோகன்றாஸ் அறிவித்துள்ளார்.

அண்மையில் வெளியான ஓய்வூதிய முரண்பாடுகளை நீக்குவதற்குரிய அதிகரிக்கப்படவுள்ள ஓய்வூதியத்தினை வழங்குவதற்காகச் சம்பந்தப்பட்டவர்கள் நேரடியாகச் சமுகமளித்துத் தமது முழு விவரங்களுடன் படிவத்தினைப்பெற்றுப் பூரணப்படுத்தி ஒப்படைக்குமாறு பிரதேச செயலர் அறிவித்துள்ளார்.

01.01.2004 தொடக்கம் அதிகரிக்கப்படவுள்ள ஓய்வூதியம் நிலுவையுடன் ஜூன் மாதம் வழங்கப்படவுள்ளதாகப் பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ஒ-175)

## கூ.சங்கக்கிளை இடம்மாற்றம்

கொழும்புத்துறை,மே23

யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் அரியாலை 18ஆம் இலக்கக் கிளை வேறிடத்திற்கு மாற்றப்பட்டுள்ளது.

இதுவரை அரியாலை நொத்தாரிஸ் ஒழுங்கையில். இயங்கிவந்த இக்கிளை, தற்போது கலைமகள் வீதியில் உள்ள புதிய கட்டடத்திற்கு மாற்றப்பட்டுள்ளது. (ஒ-30)

கொழும்புத்துறை மேற்கு வதிரிபீட

ஸ்ரீ மன்றுளாடும் பெருமான் விநாயகர் திருக்கோயில்

தாரண வருட மஹோற்சவம் - 2004

கொடியேற்றம

நாளை (24.05.2004) திங்கட்கிழமை காலை 10.00 மணி

தேர்த்திருவிழா

01.06.2004 செவ்வாய்க்கிழமை காலை 8.00 மணி

தீர்த்தோற்சவம்

02.06.2004 புதன்கிழமை காலை 9.00 மணி

★பிரதம குருக்கள்: பிரம்மஸ்ரீ தாணு வாசுதேவக்குருக்கள் (சிவாகம வித்தியாசாகரன்)

★ஆலயகுரு: பிரம்மஸ்ரீ சோ.பாலகிருஸ்ணக்குருக்கள்

தினசரி மாலை 5.00 மணிக்கு

மகாபாரத விரிவுரை நடைபெறும்.

கொழும்புத்துறை மேற்கு. - ஆலய அறங்காவலர் சபையினர். (32532)(37-16-17)

# கண்ணீர் அஞ்சலி

எமது பணிமனையில் கடமையாற்றும்
உயர்திரு.செல்லையா செல்வராசா அவர்களின்
அன்புத் தாயார்

## திருமதி சிவக்கொழுந்து செல்லையா

அவர்கள் காலமானதையிட்டு துயருறுவதுடன் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும் ...........

*உதவி அரச அதிபர் பணிமனை, ஊர்காவற்றுறை.* (சி35142)(32-17-16) உதவி அரச அதிபரும், ஊழியர்களும்.


பதவி வெற்றிடம்

UMAZAKI

செண்ட் அந்தனீஸ் கொன்சலிடேட்டட் லிமிட்டட். உலகப் பிரசித்திப்பெற்ற தயாரிப்புகளின் முகவர்கள். கீழ்க்காணும் வெற்றிடத்துக்குப் பொருத்தமான தகுதி வாய்ந்த ஆடவர்களிடமிருந்து யாழ்ப்பாண மாவட்டத்தில் விற்பனையை ஊக்குவிப்பதற்கு விண்ணப்பங்களைக் கோருகிறது.

**விற்பனை அதிகாரி** (யாழ்ப்பாணம்)
Sales Executive (Jaffna)

பட்டதாரி அல்லது பட்டப்படிப்பை மேற்கொண்டவரும் விற்பனை ஊக்குவிப்பில் ஆர்வம் கொண்டவருமே மேற்படி பதவிக்குப் பொருத்தமானவராவார்.
மோட்டார் வாகன விற்பனையில் அனுபவம் மேலதிக தகுதியாகக் கணிக்கப்படும்.
சாரதி அனுமதிப்பத்திரம் அவசியமாகும்.
வயது எல்லை சுமார் 30 வருடங்கள்.
சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் பேசி முடிவுசெய்யப்படும்
விண்ணப்பங்களை உறவினரல்லாத இரண்டு நடுவர்களின் பெயர் விலாசங்களுடன் தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் வெற்றிடத்தின் பெயரைக் குறிப்பிட்டு 7 நாட்களுக்குள் தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும்.

நிர்வாக முகாமையாளர்.
**செண்ட் அந்தனீஸ் கொன்சலிடேட்டட் லிமிட்டெட்**
516, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு 10.
பெக்ஸ்: 2 446554 இமெயில்: saman@eureka.lk


## கணனிப் பயிற்சி

தென்மராட்சி,மே23

புனர்வாழ்வு அமைச்சின் மனித வள அபிவிருத்தித் திட்ட பிரிவினரால் தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவில நடத்தப்பட்டுவரும் கணனிப் பயிற்சியின் இரண்டாம் கட்டப் பயிற்சிகள் நாளை ஆரம்பமாகுமென அறிவிக்கப்பட்டுள்ளது. சாவகச்சேரியில் நடத்தப்படும் இப்பயிற்சி வகுப்புக்களில் கலந்து கொள்ள 20 பயிலுநர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். (ஓ-117)


ராஜா யாழ்ப்பாணம்
இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரே தின வெளியீடாக
சூர்யா, ஈஷா, மாதவன், மீரா ஜஸ்மின், சித்தார்த், த்ரிஷா மற்றும் பலர் நடித்த



ஆய்த எழுத்து (ரீல்ஸ்)
காட்சி நேரம்: 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே) (C/34517) (22)

பிரபு, குஷ்பு, நெப்போலியன், செந்தில் நடித்த
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே) (ரீல்ஸ்)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 இற்கு
(சி34420)(12) SILIVER

லக்சுமி இணுவில்
3 ஆவது வெற்றிவாரம்...
இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின வெளியீடு
சூர்யா (2 வேடங்கள்) ஜோதிகா நடித்த மிகப் பிரமாண்டமான நாரிப்பில



பேரழகன் (ரீல்ஸ்) (32115)(12)
தினசரி :11.00, 3.00, 7.00, 10.00 (பு.நே.)

நாகம்ஸ் சுன்னாகம்
3ஆவது வெற்றி வாரத்தை நோக்கி
டொல்பி ஒலி அமைப்புடன்
விக்ரம், ஜோதிகா, கபாலி, வடிவேல் நடித்த



அருள்
காட்சிகள் தினசரி: 11.00, 3.00, 7.00 (பு.நே.) (C34180)(22)
மே 7 ஆம் திகதி முதல் அருள் திரையிடும் இறுதிநாள் வரையான நுழைவுச் சீட்டுக்களைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள்! குலுக்கல் மூலம் தெரிவுசெய்யப்படும் 3 ரசிகர்களுக்குப் பெறுமதியான பரிசில்கள் காத்திருக்கின்றன.
முதலாம் பரிசு துவிச்சக்கரவண்டி
இரண்டாம் பரிசு C.D பிளேயர்
மூன்றாம் பரிசு மேசை மின்விசிறி
26 முதல் எதிரி


# மரண அறிவித்தல்கள்

## S.A.E இரட்ணராஜா S.L.E.A.S II

*(இளைப்பாறிய அதிபர் புனித அந்தோனியார் கல்லூரி, ஊர்காவற்றுறை)*



கரம்பொன், புனித செபஸ்தியார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட S.A.E இரட்ணராஜா அவர்கள் (20.05.2004) வியாழக்கிழமை மாலை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிங்கநாயகம்-லில்லி யோசெப்பின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான நல்லூரைச் சேர்ந்த சின்னத்துரைச்செட்டியார் சிவநாயகி அம்மா ஆகியோரின் அருமை மருமகனும், புவனேஸ்வரி அம்மாவின் அருமைக் கணவரும், மஞ்சுளா, ஊர்மிளா, சர்மிளா ஆகியோரின் அருமைத் தகப்பனாரும், சாந்தகுமார், காலஞ்சென்ற பசில மற்றும் ஜீவன் எட்வேட் ஆகியோரின் அன்பு மாமனாரும், ஏர்வின், நிரோஷ், எலனா நிலூஷா, ஷேர்வின் நிவேதன், சரண் நிரோமி, ஆரன் தார்ஷன், றெடிக் றோஷன் ஆகியோரின் அன்புப்பேரனும், அழகேஸ்வரி, ஆனந்தராஜா, இன்பராணி, சிறீராஜா காலஞ் சென்றவர்களான அழகராஜா, பூராஜா ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான வீரசூரியா, பற்றீசியா, லோறன்ஸ் மற்றும் மலர் ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் நாளை (24.05.2004) திங்கட்கிழமை பி.ப 3.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் புனித செபஸ்தியார் ஆலயத்திறகு எடுத்துச் செல்லப்பட்டு, திருப்பலிப் பூசையின் பின்னர் கரமபொன்புனித செபஸ்தியார் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இ.புவனேஸ்வரி அம்மா (மனைவி),
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

*கரம்பொன் புனித செபஸ்தியார் கோவிலடி, ஊர்காவற்துறை* (32536)(16-17-37)

## கலிக்கோ சின்னத்தம்பி பொன்னையா அட்வகெட்



யாழ். வல்வெட்டியைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலியை வதிவிடமாகவும் தற்பொழுது பொஸ்வானாவில் (Botswana) வசித்து வந்தவருமான கலிக்கோ சின்னத தம்பி பொன்னையா அட்வகேட் 21.05.2004 இல் பொஸ்வானாவில் இறையடிசேர்ந்தார்

அன்னார் காலஞ்சென்றவர்களான வல்வெட்டி சின்னத தம்பிதங்குப்பிள்ளையின் அன்பு மகனும் திருநெல்வேலியைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான தம்பிமுத்து தங்கம் ஆகியோரின் அன்பு மருமகனும் திருமதி நாகேஸ்வரி (இளைப்பாறிய உப அதிபர், யாழ். சுண்டுக்குளி மகளிர் கல்லூரி) அவர்களின் அன்புக் கணவரும் திருமதி ஆனந்தி ஈஸ்வரன் (பொஸ்வானா), திருமதி டாக்டர் வாசுகி கைலைநாதன் (நியூசிலாந்து), திருமதி சிவகாமி ஐங்கரன் (லண்டன்), காலஞ்சென்ற டாக்டர் வாகீசன் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஈஸ்வரன் (பொஸ்வானா), கையிலைநாதன் (நியூசிலாந்து), டாக்டர் ஐங்கரன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் முகுந்தன், லைசினி, லட்சுமி, பிரணவன், திவ்வியன், சாரங்கா ஆகியோரின் அன்புப் பேரனும் இராசையா (மலேசியா), காலஞ்சென்றவர்களான குமாரசுவாமி, சதாசிவம், இராசம்மா ஆகியோரினதும் மற்றும் திருமதி பானுமதி அருளானந்தம் (வல்வெட்டி) ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.05.2004) ஞாயிற்றுக்கிழமை பொஸ்வானாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பாமன் தோட்டம், வல்வெட்டி, வல்வெட்டித்துறை.*
*T.P.: 2263190* (32524)(24-16-17-37)

தகவல்:
திருமதி பானுமதி அருளானந்தம் (சகோதரி).

## பாலகிருஸ்ணன் சுதாகர்

நாதஸ்வர இளஞ்சக்கரவர்த்தி M.P.B.சுதாகர் அவர்கள் 21.05.2004 வெள்ளிக்கிழமை அதிகாலை காலமானார்.

அன்னார் நாதஸ்வர வித்துவான் அளவையூர் M.P.பாலகிருஸ்ணன் - பங்கஜலீலா ஆகியோரின் அன்புப் புதல்வனும் உதயச்சந்திரிகாவின் அன்புக் கணவரும் சண்முகப்பிரியன், கார்த்தீபா ஆகியோரின் பாசமிகு தந்தையும் M.P.B.சேகர் (நாதஸ்வர வித்துவான்), கனகாங்கி, சித்திராங்கி (கனடா), சரசாங்கி (சுவிஸ்), ரெத்தினாங்கி ஆகியோரின் அன்புச் சகோதரனும் பருத்தித்துறை நாதஸ்வர வித்துவான் சுந்தரமூர்த்தி தம்பதிகளின் அன்பு மருமகனும் நாதஸ்வர வித்துவான் S.ரெத்தினம், K.சுரேஸ்குமார் (கனடா), நாதஸ்வர வித்துவான் R.சத்திவேல் (சுவிஸ்), நாதஸ்வர வித்துவான் துஸ்யந்தன் (பரதன், கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.05.2004) ஞாயிற்றுக்கிழமை காலை 10மணி முதல் அவரது இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நாளை (24.05.2004) திங்கட்கிழமை மாலை 3மணியளவில் மாதம் பிட்டிய மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

(சி-35145) (26-16-17-37)

தகவல்:
நாதஸ்வர வித்துவான்
M.P.பாலகிருஷ்ணன் (தந்தை)

## கதிரித்தம்பி ஜீவரட்ணம்

சம்பந்தர் கடையடி, கரவெட்டி மத்தி, கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கதிரித்தம்பி ஜீவரட்ணம் அவர்கள் 22.05.2004 இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கதிரித்தம்பி மற்றும் வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் மகனும் அன்னபாக்கியம் அவர்களின் அன்புக் கணவரும் சிவாகரன் (கொழும்பு), பிரதீபா ஆகியோரின் பாசமுள்ள தந்தையும் மாணிக்கவாசகர் (லண்டன்), மகேஸ்வரி (ஆசிரியை - கொழும்பு), கனகாம்பிகை, செல்வராணி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (23.05.2004) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 11.00 மணியளவில் இடம்பெற்று, தகனக்கிரியைகள் சோனப்பு மயானத்தில் இடம்பெறும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கரவெட்டி மத்தி, கரவெட்டி.* (35144)(37-16-17)

தகவல்:
க.பொன்னுத்துரை (மைத்துனர்)

## திருமதி பேசியோசேப்பின் தங்கராணி

இளவாலை, போயிட்டியைப் பிறப்பிடமாகவும் பருத்தித்துறை, தும்பளையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பேசியோசேப்பின் தங்கராணி 20.05.2004 வியாழக்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் பாக்கியம் (ஞானப்பிரகாசம்), பெரியபிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும் யுலக்கீம் பேசிபெல் அவர்களின் அன்பு மனைவியும் விக்ரா (நோர்வே), வினித்தா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், வின்சன் அன்ரனி (பிரான்ஸ்) அன்பு மாமியாரும், தங்கராசா (சுவிஸ்), ஜெயம் (நோர்வே), விஜியன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிச்சடங்குகள் பற்றிய விவரம் பின்னா அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சாதக்கடவை, தும்பளை,பருத்தித்துறை.* (32528)(37-16-17)

தகவல்:
யுவக்கீம் பேசிபெல் (கணவர்)
(இஞ்சின் திருத்துநர்).


TRRO C.T.C

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம்
TRRO Computer Training Center

பிரவாகம் 08 புதிய பிரிவிற்கான கணனிக் கற்கைநெறிகள் 05.06.2004 அன்று ஆரம்பமாகின்றன

Diploma in Microsoft Office XP
- Introduction to Computer-
- Microsoft Word
- Microsoft Excel
- Microsoft Access
- Microsoft PowerPoint
- Scaning & Printing
- Using the Internet

Diploma in Desktop Publishing (DTP)
- Introduction to Computer
- CorelDRAW 11
- Adobe PageMaker 7.0
- Adobe Photoshop 7.0
- Image & Text Scaning

Certificate Courses
- Microsoft Word XP
- Microsoft Excel XP
- Microsoft Access XP
- Microsoft Visual Basic 6.0
- CorelDRAW 11
- Adobe PageMaker 7.0
- Photoshop 7.0
- Accounting Pakages
- Kids Courses

விண்ணப்ப முடிவுத் திகதி 01. 06. 2004
கற்கைநெறிகள் குறைந்த கட்டணத்தில்

மேற்படி கற்கைநெறிகள் நடைபெறும் இடங்கள். (விண்ணப்பப் படிவங்களையும் இங்கே பெற்றுக்கொள்ளலாம்)

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம், 106, 4ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். ☎ - 021 - 222 2416

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் (MC Lead Hospital) கே.கே.எஸ் வீதி, இணுவில். ☎ - 071-2307628

இன்னாசித்தம்பி பரியாரியார் வளவு, கதிரமலை கோவிலடி, சில்லாலை.

சிறுப்பிட்டி மேற்கு

# அருள்மிகு ஸ்ரீ ஞானவைரவர் திருக்கோயில்

## உற்சவவிஞ்ஞாபனம் 2004

வைரவ அடியார்களே!

இன்று (23.05.2004) ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகி தினசரி காலை 11.00 மணிக்கும் மாலை 6.30 இற்கும் உற்சவம் நடைபெறும்.

01.06.2004 செவ்வாய்க்கிழமை தேர்த்திருவிழா
காலை 10.00 மணி

02.06.2004 புதன்கிழமை தீர்த்த உற்சவம்
காலை 11.00 மணி

உற்சவகுரு: சிவஸ்ரீ ச.கிருஷ்ணசாமிக்குருக்கள்
புன்னாலைக்கட்டுவன்

தெய்வீகப் பேருரை: கலாநிதி சைவசித்தாந்த பண்டிதர்
பிரம்மஸ்ரீ கு.சிவராஜசர்மா

~ஆலய பரிபாலனசபை.

(32525) (40-12-18)

# வீடு விற்பனைக்கு

7/8, முதலாம் ஒழுங்கை பிறவுண் வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள 2 ½ பரப்புக் காணியுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு.

தொடர்பு:
சி.தெய்வேந்திரன்
T.P. 021-222 7720

(32546)

# தவறிவிட்டது

நாகேஸ்வரி ஐயாத்துரை என்பவருடைய 565221027-X இலக்க தேசிய அடையாளஅட்டையும், விசேட அடையாள அட்டை, வங்கி சேமிப்புப் புத்தகம் அடங்கிய மணிபேர்ஸ் அரசடிக்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையில் பேருந்தில் (17.05.2004) தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் சன்லைட் றைகக்கிளினர்கள், மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் ஒப்படைக்கவும். (32534)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி செல்லையா சிவக்கொழுந்து
(பொன்னுக்கண்டு)



கரணவாய், வதிரியைப் பிறப்பிடமாகவும், கதிரவேலு ஒழுங்கை அரியாலையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லையா சிவக்கொழுந்து அவர்கள் நேற்று (22.05.2004) சனிக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா - தங்கமுத்து தம்பதியரின் சிரேஷ்ட புத்திரியும் காலஞ்சென்ற குமாரசாமி செல்லையா அவர்களின் அன்பு மனைவியும் செல்வராஜா (எழுதுநர், உதவி அரச அதிபர் பணிமனை காரைநகர்) அவர்களின் அன்புத் தாயாரும் மகேஸ்வரி (சன்னாசிப்பரந்தன்), புவனேஸ்வரி (A.D.P., பிரதேச செயலகம், கரவெட்டி), பரமேஸ்வரி (ஆசிரியை, வட.இந்து மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஞானேஸ்வரி (மக்கள் வங்கி, பல்கலைக்கழகக் கிளை - எழுதுநர்) அவர்களின் மாமியாரும் காலஞ்சென்ற சிவசண்முகம் மற்றும் நடராஜா (ஓய்வுபெற்ற தபாலதிபர்), ஸ்ரீநாதன் (ஆசிரியர், தம்பசிட்டி அ.மெ.வித்.), காலஞ்சென்ற செல்வரத்தினம் (பொன்னுத்துரை) ஆகியோரின் அன்பு மைத்துனியும் நிதீஷனின் அப்பம்மாவும் சயந்தன் (தரம் -10), நிதர்ஷன் (தரம்-9, ஹாட்லிக் கல்லூரி மாணவர்கள்) ஆகியோரின் பெரியம்மாவும் லீலாவதி, லோகேஸவரி, கணேசரட்ணம், ஜீவரட்ணம், சற்குணவதி, தருமபாலா, திலகரட்ணம் (அரியாலை) ஆகியோரின் சிறிய தாயாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.05.2004) ஞாயிற்றுக் கிழமை காலை 10.00 மணிக்கு (புதிய நேரம்) இல.12 கதிரவேலு ஒழுங்கை, அரியாலையிலுள்ள இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*12, கதிரவேலு ஒழுங்கை,*
*அரியாலை,*
*யாழ்ப்பாணம்.*

தகவல்:
செ.செல்வராசா
(மகன்).

(C/35151)(38-12-18)

## மருதர் நாகலிங்கம்
(இளைப்பாறிய கூட்டுறவுப் பரிசோதகர்)



தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் இல.12, பாரதி லேன், நாயன்மார்கட்டை வசிப்பிடமாகவும் கொண்ட மருதர் நாகலிங்கம் 21.05.2004 வெள்ளிக் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற மருதர் சீதேவியின் இளைய மகனும் வன்னமணியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற மாணிக்கம் - இலட்சுமியின் அன்பு மருமகனும் குலேந்திரன் (செல்வம்-ஜேர்மனி), ஞானேஸ்வரன்-மைத்திரேஜி (பவுண் - ஜேர்மனி), அன்பழகன் - சந்திரிக்கா (வவா), புவனேந்திரன் (இந்திரன் - பிரான்ஸ்), நிலாவண்ணன் - கௌரிமலர் (கௌரி - கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஞானேஸ்வரன், அன்பழகன் (சின்னக்கிளி - வேலன்ஸ் தச்சுத் தொழிற்சாலை உரிமையாளர்), பாலகௌரி, புஸ்பலதா, நிலாவண்ணன் ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்றவர்களான வள்ளிப்பிள்ளை, கதிரவேலு, ஆறுமுகம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற பசுபதி, தம்பிராசா, சதாசிவம் (துரை) ஆகியோரின் அருமை மைத்துனரும் பிரகவி, சௌமியா, டிவாகர், டிலானி, சானுஜா, டனுஷாந், கிருஷாந், மதுஷாந், பிரஷாந், வினுஷா, யதுஷன், அஜிதன், றிபேக்கா, பிஷானி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.05.2004) ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*12,பாரதி லேன்,*
*நாயன்மார்கட்டு,*
*யாழ்ப்பாணம்.*
*077-6099241.*

தகவல்:
வ.அன்பழகன்
(சின்னக்கிளி - மருமகன்).

(32542)(12-18)

## இராசையா குமாரசாமி
(பொன்னுத்துரை)



யாழ். கச்சேரி நல்லூர் வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராசையா குமாரசாமி (இராசையா அன் சன்ஸ், யாழ். - முன்னாள் உரிமையாளரும், முன்னாள் அரசாங்க கட்டட ஒப்பந்தகாரரும், றாம் வேக்ஸ் முன்னாள் எழுதுவினைஞரும்) அவர்கள் 21.05.2004 வெள்ளிக்கிழமை கொழும்பில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற இராசையா நாகம்மா தம்பதிகளின் அன்பு மகனும் திரேசம்மாவின் (றோஸ்) அன்புக் கணவரும் கிறிஸ்ரின் ராஜினி (ஆசிரியை, சென்.மேரிஸ் மகளிர் கல்லூரி, திருமலை), றெஜினோல்ட் தேவகுமார் (இராசையா அன் சன்ஸ்), லின்டா மகிழினி, றஞ்சித் விஜயகுமார் (அராலி பாம் சென்ரர்), விஜித்ஜெயகுமார் (விஜி ரயர் வேக்ஸ்), ராஜித் ஜீவகுமார் (பிரான்ஸ்), லலித் சந்திரகுமார் (கனடா), சஜித் சாந்தகுமார் (கணக்காளர் கல்வி காலசார விளையாட்டுத்துறை அமைச்சு வடக்கு - கிழக்கு மாகாணம் - திருமலை), மெற்றில்டா ஸ்ரெலாஜினி ஆகியோரின் பாசமிகு தந்தையும் அன்ரனி பிரான்சிஸ் (பிரதம பொறியியலாளர் சுகாதாரத் திணைக்களம் வடக்கு - கிழக்கு மாகாணம் - திருமலை), திருமதி மேரி பொன்சேக்கா தேவகுமார் (ஆசிரியை, ஸ்ரீ விக்கினேஸ்வரா வித்தியாலயம் நல்லூர்), பேரின்பநாயகம் (உதவி வைத்திய அதிகாரி, கண்டி), ஜெயபாலநாயகி ஜெனிபர் சுவிற்றா, டொறின் வினோதினி (கனடா), வினிதா (பிரான்ஸ்), செபநேசன் (ஆசிரியர், உடுப்பிட்டி அ.மி.கல்லூரி - வருகைதரு விரிவுரையாளர், யாழ்.தேசியக் கல்வியியற் கல்லூரி) ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்ற சிவபாக்கியம், யோகம்மா (கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரனும் பாலேந்திரா, தர்மேந்திரா, இந்திராணி, யோகராணி, ஜீவம், சுரேன், யோகேன், பிரேம் ஆகியோரின் மாமனாரும் காலஞ்சென்ற இராஜேந்திரன், காலஞ்சென்ற மைக்கேல் மற்றும் புஸ்பம், அலெக்சாண்டர் ஆகியோரின் அன்பு மைத்துனரும் வான்சலிஸ்டா பிராத்மி (வெளிவாரி மாணவி, யாழ்.பல்கலைக்கழகம்), பிரசன்னா, பிரித்தீவா (மாணவி,யாழ்ப்பாணக் கல்லூரி), டனிங்டன் (மாணவன், இந்துக் கல்லூரி-திருமலை), சனற்சஞ்சுவி (மாணவி, சென்.மேரிஸ் மகளிர் கல்லூரி - திருமலை), விவேக், ஐசாக், பிரியா, கிசோர், ஏனோக்சாருக், திவ்யா, திரேசியா, தனுஷன், லக்ஷிதன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (23.05.2004) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இறுதி ஆராதனைக்காக அடைக்கல அன்னை ஆலயத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*17/1, றெயில்வே றோட்,*
*சுண்டுக்குளி,*
*யாழ்ப்பாணம்.*

தகவல்: றெஜினோல்ட் தேவகுமார்
(மகன்).

(32539)(12-18) 021-222 6009, 0776146532.

# கண்ணீர் அஞ்சலி

## அமரர் S.A.E இரட்ணராஜா (S.L.E.S)

ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி இளைப்பாறிய அதிபரும், கரம்பொன் புனித செபஸ்தியார் ஆலய நீண்டகால பங்குச்சபை நிர்வாகியும், ஆலயப் பணிகளுக்காகத் தன்னை அர்ப்பணித்தவருமாகிய இரட்ணராஜா அவர்களின இழப்பில் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தையும் செபத்தையும் காணிக்கை ஆக்குகிறோம்.

பங்குத் தந்தையும், பங்குமக்களும்
புனித செபஸ்தியார் ஆலயம், கரம்பொன்.

(32538)(38)

# கண்ணீர் அஞ்சலி



தீவகத்தின் கல்வி வளர்ச்சிக்காக சொல்லொணாத் துன்பங்களுக்கு மத்தியிலும், கொத்தணி அதிபராகவும், புனித அந்தோனியார் கல்லூரி அதிபராகவுமிருந்து சேவையாற்றி பல கல்விமான்களையும் உருவாக்கி தனது மண்ணிலேயே வாழ்ந்து மடியவேண்டுமென்ற வைராக்கியத்தோடு இருந்து இன்று எங்களையெல்லாம் விட்டுப் பிரிந்த

S.A.E.இரட்ணராஜா(S.L.E.A.S-Class II)

அவர்களின் ஆத்மா சாந்தியடைய எமது கண்ணீர் அஞ்சலியைத் தெரிவிப்பதுடன் குடும்பத்தவர்களுக்கும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி
யாழ்.மாவட்டம்.

(32535)(38)

# மரண அறிவித்தல்கள்

## குலசேகரம் தேவராஜா

உடுவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட குலசேகரம் தேவராஜா நேற்று (22.05.2004) சனிக்கிழமை அகாலமரணமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற குலசேகரம் இராசம்மா தம்பதிகளின் அன்பு மகனும் கனகேஸ்வரியின் அன்பு மனைவியும் சூரியகுமாரி (ஸ்கந்தபுரம், கிளிநொச்சி) இராசகுமார் (லண்டன்), தேவகுமார் (உடுவில்), சிவகுமார் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் குலராஜதேவனின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் இல்லத்தில் இன்று (23.05.2004) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 4 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பூவோடை மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

தகவல்:
தேவகுமார் (மகன்),
திருமதி க.தேவராசா (தையல் ஆசிரியர்)
கனகேஸ்வரி.

*உடுவில்.* (32545)(40)

## முத்துச்சாமி பத்மநாதன்
(றிக்கோ ஹோட்டல் உரிமையாளர்)



சுண்டுக்குளியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட முத்துச்சாமி பத்மநாதன் 20.05.2004 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முத்துச்சாமி - சோதியம்மா ஆகியோரின் மூத்த மகனும் காலஞ்சென்ற இராசலிங்கம் மற்றும் கனகாம்பிகை ஆகியோரின் அன்பு மருமகனும் யசோதர விலாசினியின் அன்புக் கணவரும் தாட்சாயினி (லண்டன்), செந்தூரன் (சவுதி), ராகவேந்திரா (பரியோவான் கல்லூரி, மாணவன்) ஆகியோரின் பாசமிகு அப்பாவும் Dr.ஜெயக்குமாரின் (Oxford, லண்டன்) மாமனாரும் கணகேஸ்வரி, விமலநாதன், செல்வநாதன் (லண்டன்), தனலட்சுமி (லண்டன்), கமலநாதன் (அபீஸ் கோப்பி), கோணேஸ்வரநாதன் (கனடா), புவனேஸ்வரி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு அண்ணாவும் சிவபாதன் (இருபாலை), சந்திரமதி, புவனேஸ்வரி (லண்டன்), சபாநாதன் (லண்டன்), கலாதேவி, கலாஜோதி (கனடா), சிவச்சந்திரன் (லண்டன்), உருத்திர விலாசினி (லண்டன்) துவாரகாவிலாசினி (ஜேர்மனி) ஆகியோரின் மைத்துனரும் செல்வரட்ணம் (லண்டன்), ராஜேந்திரம் (ஜேர்மனி) ஆகியோரின் சகலனும் தனுசியா (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, மாணவி), சோபி (லண்டன்), சேரன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனும் ராஜேஸ்கண்ணா (சிலிங்கோ காப்புறுதி, கொழும்பு), நிருஜிதா, விஜிக்கிருஸ்ணா (பரியோவான் கல்லூரி, மாணவன்), அபிசங்கர், ஜீவசங்கர் (பரியோவான் கல்லூரி, மாணவா), பிரியங்கா (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), அஞ்சனா, அருண்மைந்தன் (கனடா) ஆகியோரின் பெரியப்பாவும் துஸ்யந்தன் (ஜேர்மனி), கிருசாந்தி (லண்டன்), பிரசாந்தி (லண்டன்), தாரணி, உமையாள், அவந்திகா (ஜேர்மனி) ஆகியோரின் சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*'செந்தாமரை'*
*22/3A, விதானையார் வீதி,*
*சுண்டுக்குளி.*

தகவல்:
திருமதி ய.பத்மநாதன் (மனைவி),
ராக்கவேந்திரா (மகன்).

(32544)

# மரண அறிவித்தல்கள்

## செல்லையா சிதம்பரப்பிள்ளை
(ஓய்வுபெற்ற விவசாய உத்தியோகத்தர் - சங்கரத்தை பிட்டியம்பதி பத்திரகாளி அம்பாள் ஆலய அறங்காவலர்)

வட்டுக்கிழக்கு, வட்டுக்கோட்டையைச் சேர்ந்த செல்லையா சிதம்பரப்பிள்ளை 21.05.2004 வெள்ளிக் கிழமை அன்னாரின் இல்லத்தில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா - சின்னாச்சிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் நவமணியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற தம்பையா, காலஞ்சென்ற அன்னம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும் கண்ணதாசன், மோகனதாஸ் ஆகியோரின் அன்புத் தந்தையும் அழகுராணி, துளசி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள இன்று (23.05.2004) ஞாயிற்றுக்கிழமை 2.00 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனகிரியைக்காக வழுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
குடும்பத்தினா.

*வட்டு கிழக்கு,*
*வட்டுக்கோட்டை.* (C35155)(12-18)

## சண்முகம் வேலுப்பிள்ளை

சுழிபுரம் மேற்கு, ஆலமேடையைச் சேர்ந்த சண்முகம் வேலுப்பிள்ளை நேற்று (22.05.2004) சனிக் கிழமை பிற்பகல் 4.00 மணியளவில் காலமானார்.

அன்னார் இராசமணியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற கங்காணி சண்முகம் - இராசம்மா தம்பதிகளின் மூத்த மகனும் மீனாட்சிப் பிள்ளையின் பெறாமகனும் கிருஷ்ணமூர்த்தி, தங்கம்மா, யோகேஸ்வரன், நந்திகா, திலகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ரஞ்சிதமாலா (ஆசிரியர், யா/வட்டு. மத்திய கல்லூரி), யோகச்சந்திரன், (சுவிஸ்), ஜெயலலிதா (ஆசிரியர், யா/மூளாய் சைவப்பிரகாச வித்தி.), வத்சலா, கிருஸ்ணமாலா (வவுனியா), கிருஷ்ணவேணி ஆகியோரின் அன்புத் தந்தையும் மனோகரன், சாந்தகுமார், யோகலட்சுமி ஆகியோரின் மாமனாரும் மயூரன், பிரபு, கயேஸ், சஜின், சாம்பவி, மிதிலா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள இன்று (23.05.2004) ஞாயிறு பிற்பகல் 2.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக திருவடிநிலை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
யோகச்சந்திரன் (மகன்).

*சுழிபுரம் மேற்கு,*
*சுழிபுரம்.* (C/35154)(38)

# வெளிவிவகார அமைச்சர் நட்வர்சிங் நிதி அமைச்சுப் பொறுப்பு பிரதமர் வசம்

புதுடில்லி,மே23

இந்தியாவின் 13ஆவது பிரதமராகப் பதவியேற்றுள்ள மன்மோகன் சிங் விண்வெளி ஆராய்ச்சி மற்றும் நிதி ஆகிய அமைச்சுப் பொறுப்புக்களை தம்வசம் எடுத்துள்ளார்.

வெளிவிவகார அமைச்சராக காங்கிரஸின் மூத்த பிரமுகர் நட்வர்சிங் பதவியேற்றுள்ளார்.

பாதுகாப்பு அமைச்சுப் பொறுப்பு சிவ்ராஜ் பட்டீலிடம் ஒப்படைக்கப்பட்டும் என்று தெரிகிறது.

உள்துறை, நிதி, வெளியுறவு, இராணுவம் ஆகிய நான்கு முக்கிய துறைகளை காங்கிரஸ் தன்வசமே வைத்துள்ளது. கடும் சவால்களுக்கு மத்தியில் ஏனைய பிற அமைச்சுப் பொறுப்புகள் கூட்டணி கட்சிகளுக்குப் பிரித்து வழங்கப்பட்டுள்ளன.

அமைச்சுப் பொறுப்புகள் விவரம் வருமாறு:-

பிரணாப் முகர்ஜி - உள்துறை, அர்ஜுன்சிங் - மனிதவள மேம்பாடு, கபில்சிபல் - சட்டம், குலாம்நபி ஆசாத - விமானப் போக்குவரத்து, லல்லுப் பிரசாத் யாதவ் - ரயில்வே, ஜெய்பால் ரெட்டி - செய்தி ஒளிபரப்பு, மணிசங்கர் அய்யர் - ஊரக வளர்ச்சி, அமகது படேல் - பெற்றோலியம், வகேலா - ஜவுளி, சந்திரசேகர்ராவ் - நீர்ப்பாசனம், பிரிய ரஞ்சன்தாஸ் முன்ஷி - நாடாளுமன்ற விவகாரம், கமல்நாத் - தொழில், ப.சிதம்பரம் - வர்த்தகம், சரத்பவார் - உணவு மற்றும் விவசாயம், பிரபுல் படேல் - உள்நாட்டு விமானப் போக்குவரத்து, சிபுசோரன் - நிலக்கரி மற்றும் சுரங்கம்.

தி.மு.கவுக்கு 3 கபினெட், 4 இணை அமைச்சர் பதவிகள் கிடைக்கின்றன. தயாநிதி மாறன், டீ.ஆர்.பாலு, ராஜா மூவரும் கபினெட் மந்திரிகள் ஆகின்றனர். தி.மு.க. சார்பில் இடம்பெறும் மந்திரிகளும், அவர்களுக்கு ஒதுக்கப்படும் துறைகளும் வருமாறு:-

தயாநிதிமாறன் - தொலைத் தொடர்பு மற்றும் தகவல் தொழில் நுட்பம், டி.ஆர். பாலு - தரைவழிப் போக்குவரத்து, ஏ.ராஜா - வனம் மற்றும் சுற்றுச் சூழல்.

### இணை அமைச்சர்கள்

ரகுபதி - உள்துறை, பழனிமாணிக்கம் - நிதி, க.வேங்கடபதி - சட்டம், சுப்புலட்சுமி ஜெகதீசன் - சமூகநலம், பெண்கள் மேம்பாடு.

6 எம்.பிக்களை வைத்துள்ள பாட்டாளி மக்கள் கட்சி 2 மந்திரிப் பதவி பெறுகிறது. டாக்டர் அன்புமணி கபினெட் மந்திரி ஆகிறார், அவருக்கு சுகாதாரத்துறை ஒதுக்கப்படுகிறது. (ஐ)

## ஜனாதிபதியை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

செய்தி விமர்சகர் வஸந்த விக்கிரமதுங்க ஏனையவர்களின் கறைகளை நீக்கும் பொருட்டும் ஜனாதிபதி குறித்து உண்மைக்கு புறம்பான செய்திகளைக் கட்டவிழ்த்து விடுவதற்கு எடுத்துவரும் முயற்சிகள் ஆச்சரியப்படக் கூடியவை அல்ல.

பிரபல்யமான அல்லது பிரபல்யமற்ற தனிப்பட்ட நபர்களின் சொந்த வாழ்வின் நடத்தைகள் பற்றி ஜனாதிபதி அக்கறை கொள்வதில்லை என்றும் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ஐ-ரி)

## இந்தியாவில் புலிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பான நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடும் என்று நம்புவதற்கு இடமிருப்பதாக மத்திய அரசு வெளியிட்ட அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டிருப்பாதாகக் கூறப்படுகின்றது.

"கடந்த பன்னிரெண்டு வருடங்களாக புலிகள் இயக்கம் இந்தியாவில் தடைசெய்யப்பட்டிருப்பினும் அதற்கு விசுவாசமானவர்கள் அதனை ஆதரித்து வருகின்றனர். விடுதலைப் புலிகள் தமிழ்நாட்டை ஒரு தளமாக வைத்துக்கொண்டு பெற்றோல், டீசல் ஆகியனவற்றைக் கடத்திச் செல்கின்றனர். அந்த இயக்கம் மிகவும் வலிமையான பயங்கரவாத இயக்கமாகச் செயற்பட்டு வருகின்றது. இதன் காரணமாக இந்தியாவில் பிற சக்திகளுக்கு ஊக்கம் கொடுக்கும் என மத்திய அரசு நம்புகிறது.

"தனது வன்முறை மற்றும் இந்திய எதிர்ப்பு நிலைப்பாட்டினை விடுதலைப் புலிகள் கைவிடாத நிலையில் அவர்களது நடவடிக்கைகள் காரணமாக இந்தியாவின் இறையாண்மைக்கு ஆபத்து ஏற்படக்கூடும்."

இவ்வாறு மத்திய அரசின் அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாக தமிழக அரசு அறிக்கை தெரிவிக்கிறது.

விடுதலைப் புலிகள் மீதான தடை உத்தரவை நீடிக்கும் அறிவிப்பு, இந்தியப் பொதுத் தேர்தல் முடிவுகள் வெளியிடப்பட்ட மறுநாள் புதுடில்லியிலிருந்து தமிழக அரசுக்கு கிடைத்தது என்று தெரிவிக்கப்படுகிறது. தமிழக அரசு அந்த அறிக்கையை முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தியின் நினைவு தினமான மே 21ஆம் திகதியிட்டு (நேற்றுமுன்தினம்) வர்த்தமானியில் வெளியிட்டிருக்கிறது.

மத்தியில் புதிய பிரதமரும் அமைச்சரவையும் பதவியேற்ற நாளில் புலிகள் மீதான தடை பற்றிய அறிவிப்பு வெளியிடப்பட்டமை மத்திய அரசின் பங்காளிக் கட்சிகளான திராவிட முன்னேற்றக் கழகம், மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம் ஆகிய கட்சிகளுக்கு தர்மசங்கடமான ஒரு நிலையை உருவாக்கியிருக்கும் என்று அவதானிகள் குறிப்பிட்டனர்.

(ஐ-3-6-ரி)

## புலித்தேவன் கிளிநொச்சியில்!

ஜனாதிபதியின் சட்ட ஆலோசகர் ஜயம்பதி விக்கிரமரட்ணவுடன் விடுதலைப் புலிகளின் பிரமுகர் புலித்தேவன் நேற்றுமுன்தினம் பேர்லினுக்குப் புறப்பட்டார் என்று வெளியான தகவல்களை விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகம் மறுத்துள்ளது.

சமாதான முயற்சிகளை மீள ஆரம்பிப்பது தொடர்பாகவும் எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பாகவும் பேச்சுக்களை நடத்துவதற்காக ஜயம்பதி விக்கிரமரட்ணவும் விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகப் பணிப்பாளரான புலித்தேவனும் பேர்லின் புறப்பட்டுள்ளனர் எனச் செய்திகள் வெளியாகியிருந்தன.

இதை முற்றாக மறுத்த சமாதானச் செயலக வட்டாரங்கள், கொழும்பு சென்றிருந்த புலித்தேவன் நேற்றுக் கிளிநொச்சி திரும்பிவிட்டார் என்றும் தெரிவித்தன. (ஐ-3)

## நோர்வே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடரவேண்டுமாயின், சில விதிமுறைகளின்படி அதனை மாற்றி அமைக்க வேண்டும்.

தற்போதைய அரசில் நாங்களும் சுதந்திரக் கட்சியினரும் சமபங்காளிகள். சமாதான முயற்சிகள் எந்த வகையில் முன்னெடுக்கப்படுகின்றன என்ற விபரங்களைப் பரிமாறிக்கொள்ள புரிந்துணர்வு ஏற்படவேண்டும்.

- இவ்வாறு ஜே.வி.பி. தலைவர்கள், பிரதமரிடம் தெரிவித்தனர்.

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான பேச்சுக்கள் ஆரம்பமாக முன்பாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, ஜே.வி.பி. தலைவர்களைச் சந்தித்து, சமாதான முயற்சிகள் தொடர்பாக விளக்கம் அளிப்பார் என்று கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

இந்தச் சந்திப்பு அடுத்த வாரம் இடம்பெறலாம் என்றும் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-3)

## மன்மோகன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

2001இல் நடந்த சட்டசபை தேர்தலில் தி.மு.க. தோல்வியடைந்ததைத தொடர்ந்தும் அடுத்த ஆண்டில் முரசொலிமாறனுக்கு உடல் நலம் பாதிக்கப்பட்டதைத் தொடர்ந்தும் அவர் பிறந்த நாள் கொண்டாடவில்லை. கடந்த ஆண்டு 80ஆவது பிறந்தநாளை முத்து விழாவாகக் கொண்டாட தி.மு.க.வினர் திட்டமிட்டனர். அந்த விழாவையும் நடத்தவேண்டாம் என்று கூறி விட்டார்.

இந்த நிலையில் நாடாளுமன்ற தேர்தலில் தி.மு.க.வெற்றிபெற்றுள்ளதால் கருணாநிதி பிறந்த நாள் விழாவை ஜனநாயக முற்போக்குக் கூட்டணியின் வெற்றி விழாவாகக் கொண்டாட ஏற்பாடுகள் நடக்கின்றன.

இந்த விழாவுக்கு புதிய பிரதமர் மன்மோகன் சிங்கை தி.மு.க. அழைத்துள்ளது. அவரும் வருவதாக ஒப்புக கொண்டுள்ளார். (ஐ-6)

## ஆலங்குளம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குச் சமீபமாக உள்ளது. அங்குள்ள நிலைமைகளைப் பார்க்கும்போது, படையினர்தான் இந்தத் தாக்குதலை நடத்தியிருக்கமுடியும் அல்லது அவர்களது உடந்தையுடன் வேறு சக்திகள் தாக்குதலை மேற்கொண்டிருக்கலாம். இது யுத்தநிறுத்த உடன்படிக்கையை மீறும் ஒரு செயல் என்று தமிழ்ச்செல்வன் கண்காணிப்புக் குழுவுக்கு அனுப்பிய முறைப்பாட்டில் குறிப்பிட்டுள்ளார்.

அப்பட்டமான யுத்தநிறுத்த மீறலாகக் கருதி இந்தத் தாக்குதல் குறித்துக் கண்காணிப்புக் குழுவினர் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் தமிழ்ச்செல்வன் கேட்டுள்ளார்.

கடந்த வியாழக்கிழமை இரவு 9.30 மணியளவில் மேற்கொள்ளப்பட்ட இந்தத் தாக்குதலில் விடுதலைப் புலிகளின் உறுப்பினர் ஒருவர் உயிரிழந்ததும் இருவர் காயமடைந்ததும் தெரிந்ததே. (ஐ-3-21)


**மலிவு விற்பனை**

புதிய பழைய ஓடியோ CD கள்
பழைய பாடல் MP3 CD கள்
புதிய பாடல் MP3 CD கள்
செந்தில், வடிவேல், விவேக் காமடி CD கள், (வீடியோ)
VCD Song CD கள்
மற்றும் தமிழீழத்து புரட்சிப் பாடல்கள்
(பழைய, புதிய பாடல்கள் அனைத்தும்)
தமிழீழத்து திரைப்படங்கள் அனைத்தையும் CD மூலம் மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
வியாபாரிகளுக்கு விசேட கழிவு உண்டு.
**விஷ்ணு வீடியோ**
கே.கே.எஸ்.வீதி, கோண்டாவில்.
(32207)(16-18)

**கணக்கீடு**
**O/L**
இலாப நட்டக் கணக்கு
இன்று (23.05.2004) ஞாயிறு 3 மணி
**தரம்-10**
வங்கிக் கணக்கிணக்கக்கூற்று
இன்று (23.05.2004) ஞாயிறு 2 மணி
**N.T.S.சுபநாதன்**
யாழ். கல்வி நிலையம், ஆறுகால்மடம்.
(சி-35149)

**வீடு வாடகைக்கு**
யாழ்ப்பாணத்தில் சகல வசதிகளும் கொண்ட வீடு மானிப்பாய் வீதியில் வாடகைக்கு உண்டு.
தொடர்பு:
622/1, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
(சி-35149)

**SUBRA (14)**
சித்தன்கேணி
**SPOKEN ENGLISH AND GRAMMAR**
BY: BRITTO
ஆரம்பம்: 26.05.2004
புதன் காலை 7.00 மணி
★ அனுமதிகளுக்கு முந்துங்கள்.
(C-35017)(43)

**SKY Computer Systems**
109, Kandy Road, Chundikuli, Jaffna.
Tel/ Fax.No. 021- 4590325
(கச்சேரிக்கு அருகில்)
**Diploma Courses**
MS Office, Computerised Accounting, Hardware, DTP, Visual Basic.
**Certificate Courses**
Photoshop, PageMaker, Corel DRAW, Word, Excel, Access, Power Point, Quick books, Internet & E-Mail.
பாடசாலை மாணவர்களுக்கான விஷேட கணனி கற்கைநெறி.
2004 A/L முடித்த மாணவர்களுக்கு புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன.
E-mail: skycom@wow.lk
Today you learn Tomorrow you Lead.
(C/35133)


**Garry Kasparov Chess Academy**
5, வைமன் வீதி, நல்லூர்
6-18 வயது வரையிலான சிறுவர், சிறுமியர்களுக்கான சதுரங்கப் பயிற்சி வகுப்புகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.
(1) Beginners (2) Intermediate
(3) Advance பிரிவுகளாக நடைபெறும் இவ்வகுப்பில் இணைந்து கொள்பவர்களுக்கு
(1) Chess CD's (2) Chess Books
(3) Chess hand outs (4) Chess Record Books என்பன இலவசமாக வழங்கப்படும். உடனடியாகப் பதிவுகளை மேற்கொள்ளவும்.
(32503)(40)
- நிர்வாகி.




**Career.Com**

தொழில்சார். கற்கைநெறிகளின் முன்னோடிகள்
aat, CAT and CMA
100% Free for A/L 2004 Batch (Only for 75 Students)
விரிவுரைகள் ஆரம்பம்: 02.06.2004
Note: மாணவர்கள் O/L சான்றுகள் A/L 2004 பரீட்சை எழுதியமைக்கான சான்றுதல்கள் கொண்டு வருதல் வேண்டும்.
79 Main Street Jaffna.



**TOSHIBA**

TOSHIBA போட்டோ கொப்பியர்கள், ரோணர்கள், உதிரிப்பாகங்களையும் மற்றும் அனைத்துவிதமான கணனிகள், கணனி உதிரிப்பாகங்களையும் யாழ்நகரிலேயே மிகக்குறைந்த விலையில் உத்தரவாதத்துடன் பெற்றுக்கொள்ளக்கூடிய ஒரே ஒரு நிறுவனம்.

TOSHIBA FROM JOHN KEELLS
யப்பானிய தொழில்நுட்பத்துடன் கூடிய உலகத்தரம் வாய்ந்த TOSHIBA உற்பத்திகளுக்கான வட இலங்கையின் ஏகமுகவர்
**IIS Office Automation**
No. 360/3, Main Street, Jaffna. TP No.: 222 7676 / 4 590 190




**EXPOAIR எக்ஸ்போ எயார்**
your friend in the skies... வானில் உங்கள் நண்பன்...

யாழ் பயணத்தின் போது ரோள்ஸ் ரெய்ஸ் இயந்திரத்தின் சொகுசுப் பயணத்தினை அனுபவியுங்கள்!
யாழ்ப்பாணம்: 021 2223891, 021 2226297, 077 2349999
கொழும்பு: 011 4512666 (3 Lines) Fax: 011 4514700
வெள்ளவத்தை - 011 2 360290, 2 360291
e-mail: jaffna@expoavi.com, reservations@expoavi.com

இலங்கையின் நம்பத்தகுந்ததும் முன்னணியுமான யாழ் – கொழும்பு விமான சேவை


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிரைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 23.05.2004இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.


யாழ்ப்பாணம்

சூரியகாந்தி

உதயன் ஞாயிறு சிறப்பம்சம்

23-05-2004

# இந்தியப் பிரதமராகத் தலைவிதியில்லாத இத்தாலியப் பெண்



அன்னை இந்திராவின் சமாதியில் கணவருடன்....

இந்து தீவிரவாதம் தன்னை பழிவாங்கிவிடுமோ என்று சோனியாகாந்தி பயப்பட்டதன் விளைவே அவர் பிரதமர் பதவியை ஏற்க மறுத்ததாகும் என்றொரு அபிப்பிராயம் உள்ளது. காங்கிரஸ் கட்சியின் லோக்சபாவுக்கு தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினர்கள் மத்தியில் உரைநிகழ்த்திய சோனியா அவர்கள் பிரதமர் பதவியைத் தான் நிராகரிப்பதற்குக் காரணம் தனது உள்ளுனர்வு அல்லது உள்மனதில் இருந்து வரும் குரலது (Inner-Voice) வழிகாட்டலாகும் என்றவாறாக விளக்கியிருந்தார். இந்த உலகின் நவீன வரலாற்றில் ஜனநாயகத் தேர்தல் வாயிலாக ஒரு வல்லரசு நாட்டின் உச்ச அதிகாரம் கொண்ட பதவியென்று - பழம் நழுவி பாலில் விழுவது போல - வந்த போது நிராகரித்த முதல் நபர் சோனியாவாகத்தான் இருக்கமுடியும். உண்மையில் இதற்கான மூலகாரணம் அவர் இத்தாலியப் பெண்மணி என்பதுதான். இத்தாலியப்பெண் இந்தியாவின் பிரதமராக முடியாது என்ற அடிப்படையில் பாரதீய ஜனதாக்கட்சியும் அதன் ஆதரவுக்கட்சியும் தமது பிரசார நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தன. அப்பிரசாரத்தை இந்தியக் குடிமக்களில் ஒரு சாரார் ஏற்றுக்கொள்கின்றனர். எனினும். காங்கிரஸ் கட்சியும் அதன் தோழமைக் கட்சிகளும் சேர்ந்து ஆட்சியமைக்கும் வகையில் தேர்தல் முடிவுகள் அமைந்தன. அத்தேர்தல் முடிவுகள் சோனியா பிரதமராக வருவதற்கான மக்கள் ஆணையாகக் கொள்ளப்படக்கூடிய வாய்ப்புக்கள் போதியளவு இருந்தன. எனினும். உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் பலதரப்பினரையும் அதிர்ச்சியில் ஆழ்த்தும் வகையில் சோனியாகாந்தி தான் பிரதமர் பதவியை ஏற்கப்போவதில்லை என்று அறிவித்துவிட்டார்.

## இந்துத் தீவிரவாதத்துக்குப் பயந்தவரா சோனியா?

சோனியாவினது உள்ளுனர்வின் குரல் அவரைப் பிரதமர் பதவியை ஏற்கவேண்டாம் என்று கூறியதன் காரணம் மிகவும் சிக்கலானது. இந்து தீவிரவாதம் தன்னைப் பழிவாங்கி விடுமோ என்று பயப்படும் நிலையில் சோனியா இருந்திருந்தால் தனது மகன் ராகுல். தனது மகள் பிரியங்கா ஆகியோரையும் இணைத்துக்கொண்டு முழுக்குடும்பமாக லோக்சபா தேர்தல் பிரசார நடவடிக்கைகளில் முழுமூச்சாக இறங்கியிருந்திருப்பாரா? என்ற கேள்வியும் எழுகிறது. மிகத்துணிகரமாக பி.ஜே.பியின் சவால்களையும் எதிர்நோக்கியபடி இந்திய நகரங்கள். கிராமங்கள்தோறும் அவர் பிரசாரங்களில் ஈடுபட்டார். பல இடங்களில் தனக்கான தற்பாதுகாப்பு ஏற்பாடுகள். மெய்ப்பாதுகாவலரின் ஒழுங்குகள் என்பவற்றையும் மீறியபடி மக்கள் புடைசூழ நின்றபடி உரையாடியிருக்கிறார்.

தேர்தல் முடிவுகள் இந்திரா காங்கிரஸ் ஆட்சியமைக்கும் வகையில் அமைந்து விட்டபின் சோனியாகாந்தி தான் இந்தியாவின் புதிய பிரதமர் என்பது இந்தியாவிலும் சர்வதேச நாடுகளிலும் முற்று முழுதாக உறுதியாக நம்பப்பட்ட நிலையில் அவர். திடீரென பின்வாங்கிவிட்டார். சோனியா பிரதமராக பதவியேற்கவிருந்த நாளில் பல எதிர்க்கலகங்களை இந்தியாவின் தலைநகரத்திலும் ஏனைய முக்கிய நகரங்களிலும் தூண்டுவதற்கு பி.ஜே.பி



கணவரின் இறுதிச் சடங்கில் பிள்ளைகளுடன்...

ஆயத்தங்களைச் செய்திருந்தது. பி.ஜே.பி யின் சிரேஷ்ட அங்கத்தவர்களான சுஸ்மா சுவராஜ். உமாபாரதி போன்ற பெண்கள்கூட கடுமையான ஆவேசமாகக் காணப்பட்டனர். நூறு கோடி இந்தியர்களுக்கு ஒரு இத்தாலியர் பிரதமராவதா? அவ்வாறாயின் அந்நாளே இந்தியாவின் அதியுயர் துக்கதினமாகும் (The blackest day of India) என்று இந்திய மக்களுக்கு உருவேற்றினர்.

## மொட்டையடிக்கத் தயாரான சுஸ்மா!

பி.ஜே.பி. அரசாங்கத்தில் ஊடகத்துறை அமைச்சராக இருந்த சுஸ்மா சுவராஜ் என்ற பெண்மணி தான் தனது கூந்தலை வெட்டியெறிந்து தலையை மொட்டையடித்து சோனியா பிரதமராகும் நாளை துக்கதினமாக அனுஷ்டிக்கப் போவதாகவும் அறிவித்திருந்தார். இவ்வாறாக பி.ஜே.பியின் பெண் அங்கத்தவர்களே கோலம் கொண்டிருந்த போது அத்வானி போன்ற மூர்க்கத்தனமான இந்துத் தீவிரவாத அரசியலில் நம்பிக்கை கொண்டோர் எவ்வளவு தூரம் 'போர்க்கோலம்' கொள்ள தலைப்பட்டிருப்பர் என்பது யாவரும் அறியக்கூடியதல்லவா? அத்வானி அவர்கள் எடுத்ததற்கெல்லாம் நாடளாவிய ரீதியில் இரதயாத்திரை சென்று பெரும்பான்மை இந்து மக்களைத் தூண்டி கலகங்கள். குழப்பங்களை விளைவிக்கக் கூடியவர்.

## சோனியாவின் அனுபவப் படிப்பு

தனது மாமி இந்திராகாந்தி சட்டுக்கொல்லப்பட்ட வேளையில் சீக்கிய மக்களுக்கு எதிராக இந்து மக்களை இந்து தீவிரவாத அமைப்புக்கள் தூண்டியதனால் பல்லாயிரக்கணக்கான மக்கள் கொல்லப்பட்ட அனுபவத்திலிருந்து அயோத்தியில் பாபர் மசூதி இடிக்கப்படுவதற்காக அத்வானியின் தூண்டுதலால் அமைக்கப்பட்ட கரம் சேவா என்ற வன்முறையமைப்பு செயற்பட்ட விதம் வரைக்கும் இந்துத் தீவிரவாதம் பற்றி சோனியா அனுபவவியலாக அறிந்திருப்பார். அத்துடன். இந்தியாவின் புராதன வரலாற்றிலும் நவீன வரலாற்றிலும் இந்துத்துவமும். இந்துத் தீவிரவாதமும் எல்லாவகையான முக்கியத்துவத்தைக் கொண்டிருந்தது என்பதை சோனியா நிச்சயம் படித்தறிந்து இருப்பார்.

## 'இனியும் இழக்க எதுவுமில்லை' - ராகுல், பிரியங்கா

பஞ்சாப் தீவிரவாதத்துக்கு தங்கள் அன்புக்கும் மதிப்புக்குமுரிய பேர்த்தியான இந்திராவை இழந்தவர்களான ராகுலும். பிரியங்காவும் தமிழ் தீவிரவாதத்துக்கு தங்கள் உயிரிலும் இனிய தந்தையை இழந்தவர்களான ராகுலும் பிரியங்காவும் இந்துத் தீவிரவாதத்துக்கு தங்கள் தாயை இழந்துவிடத் தயார் இல்லை. இதனை இநதிய இலத்திரனியல் ஊடகமொன்றின் ஆய்வாளர் ஒருவர் சுட்டிக்காட்டினார். இவ்வாறான வரலாற்று அனுபவத்தின் ஆபத்துணர்வு பற்றிய எச்சரிக்கையின் அடிப்படையில் சோனியா - ராஜீவ் தம்பதிகளின் வாரிசுகளான ராகுலும். பிரியங்காவும் தமது தாயார் இந்தியப் பிரதமராகுவதை விரும்பவில்லை எனவும் தெரியவந்தது. ராஜீவ்-சோனியா திருமணம் சோனியாவைச் சட்டப்படி இந்தியப் பிரஜை ஆக்கியிருந்தாலும் இந்திய மக்கள் நூறு கோடியும் அதை தார்மீக ரீதியாக மதிக்கவில்லையென ராகுலும். பிரியங்காவும் திடமாக நம்புகின்றனர்.

## ஜனாதிபதி அப்துல் கலாமும் விரும்பவில்லையா?

இந்திய ஜனாதிபதியாக இருப்பவரும் இந்திய அணு விஞ்ஞானியுமான அப்துல் கலாமும் சோனியா பிரதமராவதை மறைமுகமாக விரும்பாதவராகவிருந்தார். என இந்தியப் பத்திரிகைகள் செய்திகள் வெளியிட்டன. மிகுந்த இந்திய தேச பக்தியுள்ளவராக விளங்கும் அப்துல் கலாம் இத்தாலியப் பெண்மணியொருவர் இந்தியப் பிரதமர் பதவியை ஏற்பதற்கான

**- புவியரங்கன் -**

சத்தியப்பிரமாணத்தை தான் செய்துவைப்பதில் 'கூச்சம் ' காட்டினாரோ தெரியவில்லை. இந்திய ஜனாதிபதி கலாம் சோனியா இந்தியப் பிரதமராகுவதை விரும்பவில்லை என்ற காரணத்தையும் சோனியாவும் பிள்ளைகளும் அறிந்து வைத்திருந்தனர் என்பதினாலும் அவர் பிரதமர் பதவியை நிராகரித்தார் என்று இந்திய ஊடகவியலாளர்கள் கருதுகின்றனர். எனினும். இவ்வகையான நிலைப்பாடுகள் எதுவும் இந்திய ஜனாதிபதி செயலகத்திடம் கிடையாது என்று இந்திய ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ பேச்சாளர் அறிவித்தார்.

## கும்பிட்டுக்கேட்ட காங்கிரஸ்காரர்

சோனியா தன்னால் பிரதமராக முடியாது என்று அறிவித்ததும் தேர்தலில் லோக்சபா உறுப்பினர்களாகத் தெரிவுசெய்யப்பட்ட காங்கிரஸ்காரர்கள் அனைவரும் இந்திய நாடாளுமன்றத்தின் மத்திய மண்டபத்தில் நடந்துகொண்டிருந்த கூட்டத்தில் ஒலி வாங்கிக்கு முன்னால் ஒவ்வொருவராக வந்து சோனியா தனது முடிவை மீள் பரிசீலனை செய்யவேண்டும் என்று கேட்டனர். சிலர் மீள் பரிசீலிக்கும்படி உரக்கக் கத்தினர்; இன்னும் சிலர் கெஞ்சி மன்றாடினர்; மிகுதியானோர் கும்பிட்டுக் கேட்டனர். எல்லோரது உரைகளையும் மிகவும் கூர்மையாகக் கேட்டுக் கொண்டிருந்த சோனியாகாந்தி தான் பிரதமராகப் போவதில்லை என்று மீளவும் அறிவித்தார். தனது முடிவை ஏற்றுக்கொள்ளும்படி காங்கிரஸ் உறுப்பினர்களை வேண்டினார். எனினும். காங்கிரஸ் ஆதரவாளர்களும். உறுப்பினர்களும் சோனியாவை நேரடியாகச் சந்தித்து மன்றாடியும் பயனில்லை.

## மன்மோகன் சிங்கை சோனியா பிரேரித்தார்

சோனியா பதவியை மறுத்தபோதே இந்தியாவின் முன்னாள் நிதியமைச்சராகவிருந்த (1990 களின் ஆரம்பத்தில்) பொருளியலாளர் மன்மோகன் சிங்கை இந்தியப் பிரதமர் பதவிக்காக பிரேரித்திருந்தார். மன்மோகன் சிங் அடுத்த பிரதமர் பதவிக்காக பிரேரிக்கப்படுவதற்கு ஏதுவாக நாடாளுமன்றத்துக்குத் தெரிவான காங்கிரஸ் உறுப்பினர்கள் அணியின் துணைத் தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டார். அத்துடன். காங்கிரஸை ஆதரிக்கும் ஏனைய சகல கட்சித் தலைவர்களையும் சந்தித்து சோனியா நிலைமையை விளக்கினார். மன்மோகன் சிங் பிரதமராவதற்குரிய ஆதரவை காங்கிரஸை ஆதரிக்கும் அனைத்துக் கட்சிகளிடமும் திரட்டினார்.

## திறந்த பொருளாதாரச் சந்தைவாதியா மன்மோகன்?

பொருளியலாளரான மன்மோகன் சிங் ஒரு திறந்த பொருளாதாரச் சந்தைவாதியாவார் என இடதுசாரி பொருளியலாளர் கூறினார். அவர் இந்தியாவின் நிதியமைச்சராகவிருந்த காலத்தில் (1990 களின் முற்பகுதியிலிருந்து நடுப்பகுதி வரை) இந்திய பொருளாதாரம் தாராளவாத சந்தை முறைமையை நோக்கித் திட்டமிடப்பட்ட முறையில் சீரமைக்கப்பட்டது. புதிய இந்தியப் பிரதமராகும் மன்மோகன்சிங் இந்திய தாராளவாதச் சந்தையின் சிற்பி என விவரிக்கப்படுபவர் ஆவார். சோனியா அவர்களால் பிரேரிக்கப்பட்ட மன்மோகன் சிங் நவீன இந்தியாவின் பொருளாதாரத்தை விரிவுபடுத்தி பல லட்சக்கணக்கானோருக்கு வேலை வாய்ப்புக்களை உருவாக்கி இந்தியப் பொருளாதாரத்தை வெற்றிப்பாதையில் இட்டுச்செல்லப்போவதாக செய்தியாளர்களிடம்

(IV ஆம் பக்கம் பார்க்க)



# சோனியா! சோனியா!

# சொக்கவைத்த சோனியா...!

இந்தியப் பிரதமர் பதவியை ஏற்கமுடியாது என்று சோனியா காந்தி அறிவித்தமை இலங்கையில் சிங்கள அரசியல் கட்சித் தலைவர்களை அதிர்ச்சிக்குள்ளாக்கியது. சாதாரண சிங்கள மக்களும் ஆச்சரியப் பட்டனர். ஏன் அவர் பிரதமர் பதவியை மறுத்தார் என்பதனை ஆராய்வதற்கு முன்னர் அவர்களிடம் இருந்த கவலை விடுதலைப் புலிகளை எதிர்காலத்தில் கையாள்வதற்கான ஒரு சக்தியாக தாம் சோனியாவை கற்பனைக் கோட்டை கட்டியிருக்க அந்தக் கற்பனைக் கோட்டை தூர்ந்துபோய் விட்டது என்பதாகும்.

## சோனியா தோள்கொடுப்பார் என்ற கற்பனை

இந்திய தேசத்தின் பாதுகாப்பு, ஒருமைப்பாடு என்பவற்றின்மீது இந்திய அரசியல் தலைவர்களுக்கே யில்லாத அக்கறை இலங்கை அரசியல் தலைவர்கள் சிலருக்கு உள்ளது. அதேபோல் அந்நாட்டின் பாதுகாப்பு, ஒருமைப்பாடு என்பவற்றின்மீது அதீத அக்கறை கொண்டுள்ளதாகச் சிங்களப் பத்திரிகைகளும் கொழும்பிலிருந்து வெளிவரும் ஆங்கிலப் பத்திரிகைகளும் உள்ளன. இந்தியாவின் பாதுகாப்புக்கு விடுதலைப் புலிகளால் ஆபத்து என்ற வகையில் அபிப்பிராயத்தை கட்டி வளர்ப்பதில் சிங்களப் பத்திரிகைகளும் ஆங்கிலப் பத்திரிகைகளும் முன்னின்று செயற்பட்டன. திருகோணமலை எண்ணெய்க் குதங்களையும் முதலீடுகளையும் காப்பாற்ற புலிகள் அழிக்கப்பட வேண்டும் என்றும் சிங்களப் பத்திரிகைகள் எழுதின. விடுதலைப் புலிகளால் பாதிக்கப்பட்டவர் சோனியா என்ற ரீதியில் கருத்துலகத்தை கட்டியெழுப்பிய கொழும்பின் சிங்கள, ஆங்கில ஊடகங்கள் டில்லியில் அமையவுள்ள புதிய காங்கிரஸின் பிரதமராக சோனியா வருவார் என்றும் அவர் விடுதலைப் புலிகளை சமாளிப்பதற்கு இலங்கை அரசுக்குத் தோள்கொடுப்பார் என்றும் சிங்கள மக்கள் மத்தியில் நம்பிக்கையை ஏற்படுத்தியிருந்தனர். இதன்வழி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர்களும் ஜே.வி.பி தலைவர்களும் கூட அபிப்பிராயத்தை தம் மத்தியிலும் மக்கள் மத்தியிலும் உருவாக்கி வைத்திருந்தனர்.



## பழிக்குப்பழி என்ற கற்பனை

தனது கணவர் பழிவாங்கப்பட்டமைக்காக அவரைப் பழிவாங்கிய சக்தியை பழிவாங்குவதற்காகவே சோனியாகாந்தி இந்தியப் பிரதமராகப் போகின்றார் என்ற அடிப்படையில் மிகவும் அவசரப்பட்டு முதிர்ச்சியுமில்லாத வகையில் (Prematured and immatured) கருத்துலகத்தில் சஞ்சரித்த குறிப்பிட்ட சில சிங்களப் பத்திரிகைகள், ஒருசில ஆங்கில வாரப் பத்திரிகைகளின் பத்தி எழுத்தாளர்கள் தமது தெரிதலும் தெளிதலும் இல்லாப்போக்கை எண்ணி நொந்துகொள்ளவேண்டியதே. பழிக்குப் பழிவாங்கவே சோனியா பிரதமராகிறார் என்ற அடிப்படையில் தமது ஆய்வுகளை முன்வைக்கத் தொடங்கிய தென்னிலங்கை ஊடகங்களும் அரசியல் தலைவர்களும் பிரதமர் பதவியை ஏற்க சோனியா மறுத்தமையை சோகம் கலந்த ஆச்சரியத்தோடு பார்க்கின்றனர்.

## பக்குவமும் பண்பும் நிறைந்த சோனியா

பழிவாங்கும் அரசியல் நாடகமொன்றை அரங்கேற்றும் எண்ணம் இப்போதைக்கு சோனியா காந்தியிடம் இல்லை என்பது தெளிவாகிவிட்டது. ஏனெனில், கடந்தகாலத் தவறுகள் அல்லது அனுபவங்களின் அடிப்படையில் பண்பட்ட, பக்குவப்பட்ட குடும்பமாக சோனியா குடும்பம் மாறியுள்ளதாகவே பார்க்க வேண்டியுள்ளது. பழிவாங்கும் ஆவேசம் மட்டுமல்ல பதவிவெறி கூட சோனியாவிடம் இல்லை என்பதாகவே தோன்றுகின்றது. இலங்கை இனப்பிரச்சினை விவகாரத்தில் தமது கணவர் ராஜீவ்காந்தி பிரதமராகவிருந்தபோது தலையிட்ட மாதிரியான ஒரு தலையீட்டை மீண்டும் மேற்கொள்வதற்கு சோனியா நிச்சயமாக எண்ணியிருக்கவில்லை என்பது புலனாகின்றது. இலங்கை இனப்பிரச்சினை தற்பொழுது இந்திய உபகண்டத்துக்கு அப்பால் நகர்ந்துவிட்டது என்பது இலங்கையின் உள்நாட்டு இராணுவ அரசியல் சூழ்நிலைக்குள் இப்போதைக்கு நேரடியாகத் தலையிட முடியாது என்பதும் சோனியா காந்திக்கோ அவரது ஆலோசகர்களுக்கோ தெரியாத ஒன்று அல்ல. இந்நிலையில், தனது உள்நாட்டின் அரசியல் காரணங்களுக்காக சோனியா காந்தி அவர்கள் பிரதமர் பதவியை ஏற்க மறுத்தமை பழிக்குப் பழிவாங்கும்படலம் என்ற கற்பனைக்கு உடனடியாகவே முற்றுப்புள்ளி வைத்துள்ளது.

## நேரடித் தலையீட்டுக் கொள்கை மன்மோகனிடம் இல்லை

அத்துடன், அடுத்த இந்தியப் பிரதமராக சோனியாவால் பிரேரிக்கப்பட்ட மன்மோகன் சிங் பொருளியல் நிபுணத்துவம் நிறைந்தவர். பொருளாதார நன்மைகளை இந்தியாவுக்குப் பெற்றுக்கொடுப்பதற்காகவே இந்திய அரசியலை வழிநடத்தப் போகிறவர். மன்மோகன்சிங் ஓர் இராணுவ வாதியல்ல. வீணாக அயல் நாடுகள் மீது இராணுவ ரீதியில் தலையிட்டு தமது திறந்த பொருளாதாரச் சந்தையின் விருத்திக்கு பலவீனங்களை விலைகொடுத்து வாங்க விரும்பாத அபிவிருத்தியாளர் சிங். அயல் நாடுகளுடனான அரசியல் இராணுவ விவகாரங்களில் குறிப்பாக பாகிஸ்தான் சார்ந்த விவகாரங்களுக்கு – மிகவும் சாதுரியமான – சமாதான அணுகுமுறைகளை மேற்கொள்வதன் வாயிலாக இந்தியப் பொருளாதாரத்தை வளர்த்தோங்கச் செய்வதே மன்மோகன் சிங் மேற்கொள்ளும் முயற்சியாகவிருக்கும். அத்துடன், இலங்கை விவகாரத்தில் வழமைபோல் இந்திய நலன்களை அவர் விட்டுக்கொடுப்பார் என எதிர்பார்க்க முடியாது எனினும் நேரடித் தலையீட்டை தவிர்க்கவே செய்வார்.

## நெகிழ்ச்சிகளும் சிறு மாற்றங்களும்

இலங்கைத் தமிழர்களுக்கான அரசியல் தீர்வு வடிவம் இந்திய சிறுபான்மை இனங்களின் உரிமைக் கோரிக்கைகளுக்கு ஊக்கமும் ஆக்கமும் கொடுத்துவிடாதபடியாக இந்திய வெளிவிவகாரக் கொள்கைகளும் அதன் பாதுகாப்புக் கொள்கைகளும் அமைந்துள்ளன என்பது தெளிவாக அனைவரும் அறிந்த உண்மை. அவ்வகையில் இலங்கை இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு முயற்சிகளுக்கான பேச்சுக்களில் வெற்றி தோல்விகளில் இந்தியா தனது நலன்சார்ந்து தொடர்ந்தும் இயங்கும் என்பது வெளிப்படையான விடயம் என ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். அரசாங்கங்கள், பிரதமர்கள் மாறினாலும் இந்தியாவின் வெளிவிவகாரக் கொள்கை வகுக்கும் நிபுணத்துவமும் பாதுகாப்பு கொள்கை வகுக்கும் நிபுணத்துவமும் எவ்வித பண்பு மாற்றத்துக்கும் உட்படப் போவதில்லை என்பதை ஆய்வாளர்கள் தொடர்ந்தும் வலியுறுத்துகின்றனர். எனினும், அவ்வப்போது ஏற்படும புதிய தலைமைகள் சிறுசிறு நெகிழ்ச்சிப் போக்குகளையும் சிறிய அளவு மாற்றங்களையும் கடைப்பிடிக்கக்கூடும். அவ்வகையில், இலங்கை இனப்பிரச்சினையில் இந்தியா தீவிரமான பங்கு வகிக்கவேண்டும் என்று எதிர்பார்க்கும் இலங்கை அரச தலைவர்களின் கோரிக்கைகள் மன்மோகன் சிங்கினால் அவசர காரியமாக உடனடியாகப் பரிசீலிக்கப்படவும் சந்தர்ப்பமில்லை. அண்மைக் காலமாக காங்கிரஸின் உயர் தலைவர்கள் இலங்கைத் தமிழர் விவகாரத்தை தமது உடனடிக் கவனத்துக்குரிய விடயமாகக் காட்டிக் கொள்வதில்லை. எனினும், கொள்கை வகுப்பு விவகாரங்களில் தேர்ச்சியடைந்த இந்திய நாட்டின் அரசியல் – இராணுவ நிபுணர்கள் தமது பணிகளில் தூங்கிக் கிடப்பார்கள் என்றும் எதிர்பார்க்கமுடியாது.

## கருணாநிதியும் ராமதாஸும் வைகோவும் என்ன செய்வர்?

மேலும் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் மு.கருணாநிதி அவர்களோ மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் வை.கோபாலசாமி அவர்களோ பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் டாக்டர் ராமதாஸ் அவர்களோ இலங்கை இனவிவகாரம் தொடர்பான இந்தியாவின் வெளிவிவகாரக் கொள்கைகளில் எந்த மாற்றமும் செய்து விடுமளவுக்கு வலுவான நாட்டம் கொண்டவர்களாகத் தெரியவில்லை. வாஜ்பாய் அரசாங்கத்திலும் எந்த முயற்சிகளையும் மேற்கொள்ள முடிந்ததாகத் தெரியவில்லை. இந்தக் கட்சிகள் சோனியாகாந்தியை நோக்கியோ மன்மோகன் சிங்கை நோக்கியோ அல்லது வேறு எந்த காங்கிரஸ் தலைவர்களை நோக்கியோ ஈழத்தமிழர் விவகாரம் தொடர்பான எந்தக் கோரிக்கையையோ எந்தச் சிறிய நிபந்தனையையோ இதுவரை முன்வைக்கவில்லை. எனினும், கருணாநிதியிலிருந்து ஏனைய இருவரும் நடைமுறையளவில் முடியாவிட்டாலும் கொள்கையளவில் சில மாறுபாடான நிலைப்பாடுகளைக் கொண்டிருக்கலாம். அவர்கள் இருவரும் சந்தர்ப்பம் சூழ்நிலைகளில் அவ்வப்போது ஈழத்தமிழர்களை ஆதரித்து காரசாரமான அறிக்கைகளை விடும் நிலை தொடர்ந்து பேணப்படும் என்றே எதிர்பார்க்கலாம். அதற்கும் அப்பால் திராவிடத் தலைவர்களால் என்ன செய்யமுடியும் என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். மலையக மக்கள் முன்னணியின் சந்திரசேகரன் போன்றோர் தமிழ்நாட்டின் திராவிடத் தலைவர்களுக்கூடான நட்பின் மூலமாக டில்லித் தலைவர்களிடம் என்ன மாற்றத்தை ஏற்படுத்த முடியும் என்பதும் விடையில்லா வினாவே.

**- புவியரங்கன் -**

## இந்திய அரசின் பதில்

விடுதலைப் புலிகளின் பிரமுகர்கள் தாம் இந்திய வெளியுறவுக் கொள்கையில் ஒரு சாதகமான மாற்றத்தை விரும்பி நிற்பதாகவும் கடந்தகால துன்பியல் சம்பவங்களை மறந்து அம்மாற்றத்தை இந்திய கொள்கை வகுப்பாளர்கள் ஏற்படுத்தவேண்டும் என்றும் அவர்கள் விரும்புவதாகத் தெரிகிறது. கடந்த ஒரு சில ஆண்டுகளாக இவ்வகையான கருத்துக்களை புலிகள் வெளியிட்டு வருகின்றனர். இந்தியாவின் ஒருமைப்பாட்டுக்கும் நலன்களுக்கும் எதிராக தாம் ஒருபோதும் செயற்படவில்லை என்றும் இந்தியா இப்பிராந்தியத்தின் ஒரு முக்கியமான வல்லரசு என்பதை தாங்கள் புரிந்து வைத்துள்ளதாகவும் விடுதலைப் புலிகள் கூறியுள்ளனர். இந்திய மத்திய அரசியல் தலைமைகளுடனும் கொள்கை வகுப்பாளர்களுடனும் விடுதலைப் புலிகள் எவ்வகையான தொடர்புறவை கருத்துவெளியிடல் மூலம் ஏற்படுத்தியுள்ளார்கள் அல்லது ஏற்படுத்த உள்ளார்கள் என்பதும் அதற்கு இந்தியா சார்பில் என்ன பதில் (Response) உள்ளது என்பதும் பிரதமர் மன்மோகன் சிங் அரசின் நடவடிக்கைகள் மூலம் விரைவில் தெரியவரும். எனினும், சோனியாவைக் காட்டி வெருட்டும் சிங்கள அரசியல் தலைவர்களினதும் ஊடகங்களினதும் 'முனி வரும் முனி வரும்' என்ற போக்கிலான கதையளத்தலுக்கு இப்போதைக்கு நிச்சயம் முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுள்ளது.

---

# மிஸ்டர் 'கீளீன்'



அரசியற் காற்றில் உச்சத்தில் இருக்கும் தலைவர்கள் காணாமற்போய் விடுவார்கள். யாரும் எதிர்பாராத ஒருவர் ஆட்சி பீடத்தில் வந்து அமருவார்.

அதேபோன்று நிகழ்வு இப்போது மீண்டும் இந்திய அரசியலில் ஏற்பட்டுள்ளது. சோனியா தான். இந்தியாவின் அடுத்த புதிய பிரதமர் என்று எல்லோரும் நினைத்துக்கொண்டிருக்க, நடந்தது வேறு. மனச்சாட்சியைக் காரணம் காட்டி சோனியா விலகிக்கொள்ள 'புதிய பிரதமர்' என்ற அந்தஸ்து மன்மோகன் சிங்கிற்கு கிடைத்துள்ளது. இந்தியப் பொருளாதாரத்தின் விடுதலை வீரர் என்று புகழப்படும் மன்மோகன்சிங், அரசியலில் ஈடுபட முன்பு பொருளாதாரத்துறையில் பல உயர் பதவிகளை வகித்தவர்.

1932ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 26ஆம் திகதி மன்மோகன்சிங் குர்முக்சிங் அம்ரித் கவுர் தம்பதிக்கு மகனாகப் பிறந்தார்.

மன்மோகன் சிங் இளமைப் பருவத்தில் இடதுசாரி சிந்தனையில் திளைத்து வளர்ந்தவர். ஏழைக் குடும்பத்தில் பிறந்து, சொந்த அறிவாற்றலால் படிப்படியாக முன்னேறி உலகமே அங்கீகரிக்கக்கூடிய பொருளாதார மேதையாகப் பரிமளிப்பவர்.

கல்வியில் மன்மோகன்சிங் எவ்வளவு தூரம் ஆர்வம் கொண்டிருந்தார் என்பதற்கு ஒரு உதாரணம் சொல்லவேண்டுமானால் வீட்டுச்சந்தடிகளில் இருந்து படிப்பது சாத்தியமில்லையென்று கண்டபோதெல்லாம் தெருவிளக்கின் அருகில் போய் இருந்து படிப்பாராம். இவ்வாறு படித்ததன் மூலம்தான் அவரால் ஒக்ஸ்போட் பல்கலைக்கழகத்துக்கும் கேம்பிறிஜ் பல்கலைக்கழகத்துக்கும் நிதி ஆதாரக் கொடைமூலம் பொருளாதாரத்தில் மே[illegible]ந் தொடர முடிந்தது'

மன்மோகன்சிங்கின் சகோதரர் சூரிஜிட்சிங் (47). தனது சகோதரர் பற்றிப் பேசும்போது கூறினார்:-

காலஞ்சென்ற எங்கள் தந்தையார் கூறுவார். இவன் இந்தியாவின் பிரதமராகப் போகிறான். பத்துப் பிள்ளைகளில் இவன் ஒருவனே அப்படி விழுந்து விழுந்து படிக்கின்றான்' என்று.

அவர் எப்போதும் ஒரு புத்தகத்தின் உள்ளே மூக்கை நுழைத்துக்கொண்டே இருப்பார் என்று சூரிஜிட்சிங் மேலும் சொன்னார்.

கடந்த வாரம் வரை மன்மோகன்சிங் புதுடில்லியிலுள்ள ஒரு சாதாரண வீட்டில்தான் வாழ்ந்து வந்தார். 13 ஆண்டுகளுக்கு முன்னர் நிதியமைச்சராகவிருந்தபோது இந்தியாவை பொருளாதாரத்தில் தாராளமயப்பாதையில் செலுத்தியவர் என்ற புகழ் மட்டுமே இருந்தது. இன்று இந்தியாவின் சக்திவாய்ந்த ஒரு பதவியில் அமர்த்தப்படுவர் என்று எவருமே எதிர்பார்க்கவில்லை.

நீல வண்ணம் கொண்ட தலைப்பாகை அணிவதில் மன்மோகன்சிங் விருப்பம் கொண்டவர். உள்ளூர் தயாரிப்புகளான குர்தாவும் பைஜமாவும் அவரது பாஷன். இந்தியா சுதந்திரம் பெற்று 57 ஆண்டு கால சரித்திரத்தில் முதலாவது சீக்கிய பிரதமர் இவர். இந்தியாவின் மதச் சார்பற்ற அரசமைப்பில் பலத்த நம்பிக்கையைக் கொண்டவர்.

மன்மோகன் காஹ் என்ற கிராமத்தில் பிறந்தார். அப்பகுதி, நாடு இரண்டாகப் பிரிந்தபோது பாகிஸ்தானுக்குச் சொந்தமாகிவிட்டது.

பாகிஸ்தானின் தலை நகரான இஸ்லாமாபாத்துக்கு இணைநகரான ராவல்பிண்டியில் மன்மோகன் சிங்கின் பூர்வீக வாசஸ்தலம் இருக்கின்றது.

மன்மோகனுக்கு 14 வயதாக இருந்தபோது இந்தியாவுக்கு அவர் குடும்பம் வந்து சேர்ந்தது. தந்தையார் உலர்ந்த பழங்களை விற்கும் கடையொன்றை நடத்திவந்தார். அமிர்தசரஸ் நகரில் ஒரு பழைய வீட்டில் நான்கு பையன்களையும் ஆறு பெண்களையும் கொண்ட அவர்களின் குடும்பம் வாழ்ந்துவந்தது. சீக்கியர்களின் புனிதஸ்தலமான பொற்கோயிலுக்கு அருகில் அவர்களின் இல்லம் அமைந்திருந்தது.

தனியார் அறநிலையம் ஒன்றினால் நடத்தப்பட்ட ஒரு பாடசாலையில் அவர் முதலில் படிக்கச் சென்றார். வீட்டில் எப்பொழுதும் ஆள்கள் இருந்து பெரும் சந்தடியாகவிருந்ததால் பெரும்பாலும் தெருவிளக்கின்கீழ் இருந்தே இரவில் படிப்பார்.

இந்த விவரங்களைக் கூறிய அவரது சகோதரர் சூரிஜிட்சிங் தனது இன்னொரு சகோதரரான தல்ஜித்சிங்குடன் சேர்ந்து அமிர்தசரஸ் நகரில் ஆட்டோ உதிரிப்பாகங்கள் தயாரிக்கும் நிலையத்தை நடத்திவருகின்றார்.

மன்மோகன்சிங் வீண் பேச்சுக்கள் பேசி நேரம் கழிப்பதில் விருப்பமில்லாதவர். புத்தகங்களில் மூழ்கிக் கிடப்பதே அவருக்கு விருப்பம் என்கிறார் அவரது சகோதரர்.

நாட்டில் ஏழ்மையைப் போக்குவதற்காகவே பொருளாதாரத்தைத் தாம் கற்றதாக அவர்

(III ஆம் பக்கம் பார்க்க)

**- நந்தன் -**

## நாஸ்டர் டாமின் தீர்க்கதரிசனம்

*இந்தியாவின் அடுத்த பிரதமர் சோனியாவே என்று இந்தியர்கள் மட்டுமின்றி முழு உலகுமே நம்பியிருக்கக் காலம் மன்மோகன்சிங்கை இந்தியப் பிரதமராக்கி அழகு பார்த்தது.*

*இந்த நிலையில், 15ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த கிரேக்கத் தீர்க்கதரிசி 'நாஸ்டர்டாம்' இதனை தனது தீர்க்கதரிசனத்தில் குறிப்பிட்டிருக்கிறார் என்று இப்போது பேசப்படுகிறது.*

*நாஸ்டர்டாம் தனது தீர்க்கதரிசனப் பாடல்களில் குறிப்பிட்டுள்ள விளக்கம் வருமாறு:*

*5 நதிகள் கூடும் இடத்திலிருந்து ஒரு இந்தியப் பிரதமர் உதயமாவார். அவர் சிகப்புத் தலைப்பாகை அணிந்து இருப்பார். முதலில் சாதுவாக அரியணை ஏறும் இவர் பின்னாளில் உலகையே மிரட்டுவார். இவரது காலத்தில் இந்தியா சர்வ வல்லமை பெற்ற நாடாக விளங்கும். ராணுவத்துக்கு முக்கியத்துவம் தரும் அந்தப் பிரதமர் உலகின் முக்கிய தலைவராக விளங்குவார் என்று அத்தியாயம் 4,5,6 ஆகியவற்றில் [illegible] 71,51 ஆகிய விளக்கங்களில் நாஸ்டர்டாம் குறிப்பிட்டு இருக்கிறார்.*

*5 நதிகள் கூடும் இடம் என்பது பஞ்சாப் என்றும் தலைப்பாகை அணிந்தவர் மன்மோகன் சிங் என்றும் இப்போது இந்தியாவில் பேச்சு அடிபடுகிறது.*

# பிரபஞ்சத்தின் இயற்கைத் தன்மையே கருணைதான்!

இயற்கையை அழிக்கக் கூடாது. அவ்வாறு அழித்தால் அதனால் ஏற்படும் பிரதி வினைகள் நமது அழிவுக்கு அடித்தளம் இடுகின்றன. இதைச் சான்றோர்கள் கர்மா என்று சொன்னார்கள்.

நான் குழந்தையாக இருந்தபோது சில சமயங்களில் எந்தவிதமான நோக்கமும் இன்றி, ஓர் எறும்பை நசுக்கி விடுவேன். இப்போது என் தாயார், அவ்வாறு செய்யாதே, அடுத்தபிறவியில் நீ எறும்பாகப் பிறப்பாய், நசுக்கப்படுவாய் என்பார்.

அந்த இளம் வயதில் இந்தத் தத்துவம் எனக்குப் புரியவில்லை. நான் எட்டாம் வகுப்பு படிக்கும் போது நியூட்டனின் மூன்றாம் விதியான ஒவ்வொரு செயலுக்கும் அதற்குச் சமனான மற்றும் எதிரான பிரதிச் செயல் உண்டு என்பதை எனது பௌதிக ஆசிரியர் கற்பித்தார். அப்போது தான் எனது அம்மா சொன்ன கர்மாவின் தத்துவம் எனக்குப் புரிய ஆரம்பித்தது.

இன்றைய உலகில் கர்மா என்னும் வார்த்தை மிகவும் பரவலாக உபயோகப்படுத்தப்படுகிறது. சமஸ்கிருதத்தில் கர்மா என்னும் பதத்தின் பொருள் ஆணிவேர் என்பதாகும். இதற்கு அர்த்தம், செய்தல் என்பது.

கர்மா என்னும் வார்த்தையின் நேரடியான அர்த்தம் செயல் எனலாம். ஆன்மீகமாகப் பார்க்கும்போது கர்மா என்பதை நம்முடைய செயல்களின் பலன் என விவரிக்கலாம்.

கர்மச் சக்கரத்தைச் சுழல வைப்பது நம்முடைய செயல்களே என நாம் வழக்கமாக எண்ணுகிறோம். ஆனால், அது அவ்வாறு அல்ல. ஒவ்வொரு முறை நீங்கள் எண்ணும்போதும் (கண்ணோட்டம்),

பேசும்போதும், செயற்படும்போதும் கர்மாவின் விதிகளை நீங்கள் நகர்த்தத் துவங்கிவிடுகிறீர்கள்.

நீங்கள் ஓர் விதையை விதைத்து விட்டீர்கள். நீங்கள் விதைத்துள்ள இந்த விதையின் தன்மை,நீங்கள் துவக்கி வைத்துள்ள எண்ணம், சொல், செயல், இவைகளின் இயற்கைத் தன்மையைப் பொறுத்தே அமையும். அதாவது பயம், வெறுப்பு, அன்பு, குறை கூறுதல், கோபம், ஆனந்தம் முதலியன.

மேலும் ஒவ்வொரு முறை நீங்கள் எண்ணும்போதும் செயற்படும் போதும் அவ்விதையைப் பேணிக்காக்கிறீர்கள். அந்த விதை நாளடைவில் ஒரு பெரிய மரமாக வளர்ந்து தொன் கணக்கில் பழங்களை வழங்குகிறது. நீங்கள் விதைத்ததை பன்மடங்காக அறுவடை செய்கிறீர்கள். நாம்தான் நம்முடைய வாழ்க்கையின் கட்டடக் கலைஞர்கள். நாம் அனைவரும் சேர்ந்து இக்கிரகத்தின் விதியை உருவாக்குகிறோம்.

இன்று மனிதனை பாதிக்கும் ஒவ்வொரு நோயும், அது தனி மனிதனாக இருக்கட்டும் அல்லது கூட்டாக இருக்கட்டும், மனிதனின் கர்மாவின் விளைவே.

மனித சமுதாயத்தின் கூட்டுக்கர்மா எவ்வாறு ஆரோக்கியத்தை பாதிக்கின்றது என்பதை முதன்மையாகப் பார்ப்போம்.

இந்தக் கிரகம் பூமியானது ஓர் உயிருள்ள பொருள். எந்த ஒரு பொருளால், தனக்குள் உஷ்ண நிலையைக் காப்பாற்ற முடிகிறதோ அப்பொருளை உயிருள்ள பொருள் என்கிறோம். அதனுள் இருக்கும் உறுப்புக்கள் செயலற்றுப் போகும்போது, அந்த உயிருள்ள பொருள் இறந்து கொண்டிருக்கிறது என்கிறோம். நம்முடைய கிரகத்திற்கு இந்த கதி நேர்ந்து கொண்டிருப்பதை நாம் பார்க்கவில்லையா?

ஒவ்வொன்றும் பழுதடைந்து வருகிறது. காற்றில் விஷம், சமுத்திரமும், நதிகளும் எண்ணெயாலும், இரசாயனப் பொருள்களாலும் பாதிப்பு, நிலம் அசுத்தத்தால் நிரம்பியுள்ளது. ஓசோன் மண்டலமே பாதிப்படைந்து கெடுதி விளைவிக்கும் ஒளிக்கதிர்கள் காற்று மண்டலத்தில் பரவி வருகின்றன. வட.தென் துருவங்கள் உஷ்ணத்தினால் உருகிவருகின்றன. சமுத்திரத்தின் நீர் மட்டம் ஏறி வருகிறது. பல ஜீவராசிகள் அழிந்துபோய்விட்டன. பல அழியும் நிலையில் உள்ளன.



மனிதன் இந்தக் கிரகத்தை சிறிது சிறிதாக வாழமுடியாதவாறு ஆக்கி வருகிறான் எனத் தெளிவாகக் காணமுடிகிறது. இன்று அவன் தன் கர்மத்தின் பலனைத் தானே அனுபவிக்கிறான். உலகின் சில அரசுகள், பஞ்சகர்மா போன்ற சளியையும், விஷங்களையும் உடலில் இருந்து வெளியேற்றும் ஆயுர்வேத முறையை தடைசெய்துள்ளன.

அவர்களுடைய ஆராய்ச்சியில் சூழ்நிலையை மாசுபடுத்தக் கூடிய கதிர் இயக்கக் கழிவுகள், சளியில் மிக அதிகளவில் இருப்பதாகக்கண்டுபிடித்துள்ளனர். அவர்களுடைய கொள்கையானது உன் உடலிலேயே இருக்கட்டும். இந்தக் கிரகத்தை நாசமாக்காதீர்கள் என்பதே!

தொழில் முன்னேற்றம் அடைந்த நாடுகளில் உள்ளது போலவே சமீபகாலமாக, வளரும் நாடுகளிலும் புற்றுநோய் ஒரு மாபெரும் உடல் நலப் பிரச்சினையாக வெளிப்பட்டுள்ளது.

2000 ஆம் ஆண்டு உலகெங்கிலும் பல காரணங்களால் நிகழ்ந்த 56 மில்லியன் மரணங்களில் 12 சதவீதம் புற்றுநோயால் ஏற்பட்டவை என்பது தெரியவந்தது.

மேலும் பல நாடுகளில் இறப்பில் கால் பங்கு புற்றுநோயால் ஏற்படுபவையே. இது ஏன் இவ்வாறு உள்ளது? மேலோட்டமாகப் பார்க்கும் போது பலவிதமான காரணங்கள் உள்ளன. ஆனால், கர்மாவின் கண்ணோட்டத்திலிருந்து பார்க்கும்போது தொடர்ந்து காடுகளை அழிப்பதால் இந்தக் கிரகத்திலுள்ள உயிரணுக்களின் வளர்ச்சியை எவ்வாறு நாம் தடை செய்கிறோம் என்பதனைக் காண முடியும். இந்த அணுக்கள் எங்காவது வளர வேண்டும். அவை புற்றுநோய்களாக மனித உடலில் வளர்கின்றன.

தாவரங்களிலும், மிருக இனத்திலும் நோய் எதிர்ப்புச் சக்தியுள்ள இனத்தை உருவாக்க முயற்சி செய்து டி.என்.ஏ. செயற்பாட்டில் குறுக்கீடுகள் செய்வதன் விளைவாக எதிர்ப்புச் சக்தியற்ற நோய்கள், மனித உடலில் அதிக அளவிற்கு உருவாகி வருகின்றன. இதுபோன்ற பட்டியல்களுக்கு முடிவே இல்லை.

தனி மனிதனின் நிலையிலிருந்து கர்மாவைப் பார்க்கும்போது ஒவ்வொரு எதிர்மறையான எண்ணமும் சொல்லும் மற்றும் செயலும் ஆரோக்கியத்தைப் பாதிக்கிறது. சீரற்ற உறவு முறைகள் பிறரைப் புண்படுத்தல், வெறுப்பு, குழந்தைப் பருவ நிர்ணயங்கள், பயங்கள் போன்றவை சில உதாரணங்கள்.

மேலும் மனிதன் குடிப்பழக்கத்தினாலும், தவறான வாழ்க்கை முறைகளினாலும் தன் தேகத்திற்கு தீங்கிழைத்துக் கொள்வது, பன்மடங்கு எதிர்மறையான கர்மாவை உருவாக்கி உடலைச் சீர்கெட வைக்கிறது. இதைப் பார்த்த பின்பு அடுத்து எழும் கேள்வி என்னவெனில் ஒருவர் உருவாக்கியுள்ள இந்தச் சக்கரத்தை உடைத் தெறிய முடியுமா? கர்மாவிலிருந்து விடுதலை பெறவேண்டுமானால், கர்மாவின் சட்ட திட்டங்கள் ஏன் உள்ளன என்பதை முதலில் புரிந்துகொள்ளவேண்டும். கர்மா என்பது உலகில் எந்த விதமான சீரமைப்பை அமைக்கவிரும்புகிறது?

அனைத்து உயிருள்ள ஜீவன்களில் உறைந்துள்ள இயற்கைச் சுபாவமே கொடுப்பது, தானம் செய்வது தன்னையே ஏதேனும் ஒரு காரணத்திற்காக தியாகம் செய்வது. இயற்கையிலும் நாம் இதைத்தான் காண்கிறோம். இந்தப் பிரபஞ்சத்தின் இயற்கைத் தன்மையே கருணைதான். இந்த இயற்கையான கருணைதான் பிரபஞ்சத்தின் சீரான இயக்கத்திற்கு உதவுகின்றது. பிரபஞ்சத்தின் சீரான நிலையே கருணைதான். ஏதேனும், உயிரினங்கள் அல்லது ஜீவராசிகள் இந்த சீரான நிலையிலிருந்து விலகிச் செல்லும்போது, மறுபடி சீரான நிலைக்கு கொண்டு வருவதற்கு கர்மாவின் சட்டங்கள் நடைமுறைக்கு வருகின்றன.

கர்மா என்பது ஒருவரின் இதயத்தை மலரச் செய்வதற்கான ஓர் இரகசியத் திட்டம். கர்மா என்பது உயிருள்ள ஓர் சட்டம். ஆகையால், அதனுடைய இயற்கைத் தன்மை கருணையாகத் தான் இருக்கவேண்டும். அது ஒரு தண்டனை அளிப்பவர் அல்லர். அது ஒரு ஆசிரியர். அது அனுபவங்கள் மூலமாகக் கற்றுத் தருகின்றது. அதைக்கற்கவேண்டும் என்ற கண்ணோட்டத்தோடு ஒருவர் இருக்க வேண்டும். அது மனிதனை அன்புடன் இருக்க, கருணையோடு இருக்க மற்றும் வளைந்து கொடுக்கக் கற்றுக் கொடுக்கிறது.

கர்மா கற்றுக்கொடுக்க நினைக்கும் பாடங்களை நாம் கற்ற பின்பு , நம் வாழ்க்கை முறை இந்தப் பிரபஞ்சத்தின் கருணை என்னும், நெறியோடு ஒன்றிய பிறகு கர்மாவின் இரகசியத்திட்டங்களுக்கு அவசியமே இருக்காது.

***- பகவான் ஸ்ரீ கல்கி.***

# இது ஒரு தமிழ்த் திருமணம்....!

கிரியைகள் இல்லை; எரியோம்பல் இல்லை; தீவலம் வருதல் கிடையாது; புரோகிதர்கள் இல்லவே இல்லை. இவ்வளவும் இல்லாமல் திருமண வைபவம் நடத்தியிருக்கின்றார்கள்.

சடங்குகள். கிரியைகள். சம்பிரதாயங்கள் எதுவும் இல்லாமல் - வேறு சில வித்தியாசமான நிகழ்வுகளுடன் இந்தத் திருமணம் நடந்தேறியிருக்கிறது. அப்படியானால் இது தமிழ்த் திருமணம் அல்ல என்று நினைக்கிறீர்களா...?

இல்லை இல்லை இதுதான் தமிழ்த் திருமணம் என்று அடித்துக் கூறியிருக்கின்றார்கள் இதனை நடத்தி வைத்திருக்கின்ற பெரியோர்கள்.

இளசுகளில் பலர் இது என்னடா புதிய திருமணமுறை என்று கூடக் கருதலாம். அதற்கு அவர்கள் என்ன கூறுகிறார்கள் தெரியுமா...?

**தொகுப்பு: அலங்காரன்**

இதுதான் தமிழர்களின் பழைய திருமண முறை என்று.

அண்மையில் கிளிநொச்சி நகரப் பண்பாட்டு மையத்தின் மண்டபத்தில் இந்த வித்தியாசமான திருமண வைபவம் நடந்திருக்கின்றது.

திரு.திருமதி சிவசுப்பிரமணியம் தம்பதியினரின் மகள் சிவாயினியும். திரு.திருமதி கனகசபாரத்தினம் தம்பதியினரின் மகன் பிரதீபனுமே வித்தியாசமான முறையில் திருமண பந்தத்தில் இணைந்திருக்கின்றனர்.

தற்போது எமது தமிழ்ச் சமூகத்தில் வழக்கில் இருக்கின்ற திருமணச் சடங்கின் கிரியைகள் இங்கு இடம்பெறவில்லை. எரியோம்புதல். தீவலம் வருதல். புரோகிதர்கள் மந்திரம் ஓதுதல். தட்சணை வழங்குதல் என்பன அறவே இருக்கவில்லை.

முக்கிய நிகழ்வுகளாக தமிழ்த்தாய் வாழ்த்து. கடவுள் வாழ்த்து என்பனவும் "மண்ணில் நல்லவண்ணம் வாழலாம்" என்ற திருமுறைப் பாடலும் இசையுடன் பாடப்பட்டன. திருக்குறளின் 'இல்லறவியல்' அதிகாரத்திலுள்ள குறட்பாக்கள் படிக்கப்பட்டன.

• மணமக்கள் உறுதிமொழி எடுத்தல் என்ற நிகழ்வும் இடம்பெற்றது.

அத்துடன். மணமக்களை வாழ்த்தும் நிகழ்வில் முதலில் -

வயதில் மிக மூத்த பெண்கள் மணமக்களுக்கு சந்தனம். குங்குமம். திருநீறு என்பன வைத்து வாழ்த்தினர். தொடர்ந்து வயதில் மிகமூத்த ஆண்கள் மணமக்களுக்குத் திருநீறு பூசி வாழ்த்துத் தெரிவித்தனர். பின்னர் ஏனையோரின் வாழ்த்துரைகளும் இடம்பெற்றன.

இந்தத் 'தமிழ்த் திருமணம்' பலரது கவனத்தையும் ஈர்ந்திருக்கின்றது.

இந்தத் திருமண வைபவத்துக்குத் தலைமை வகித்த மக்கள் வங்கி மேலாளர் பொன் கணேசமூர்த்தி தனது உரையில் கூறியதாவது:-

உலகிலுள்ளவர்கள் அனைவருமே தத்தமது வீடுகளில் நடைபெறுகின்ற நிகழ்வுகளைக் குறிப்பாக திருமண நிகழ்வுகளைத் தத்தமது தாய்மொழியிலேயே நடத்துகின்றனர்.

ஆனால், தமிழர்கள் மட்டுமே கருவுறு நிகழ்ச்சி முதல் இறந்த பின் நிகழும் நிகழ்வுகள் வரை அனைத்தையும் தமிழல்லாத மொழியில் - சமஸ்கிருதத்தில் நடத்துகின்றனர். இது மற்றைய மொழியினர் எம்மைப் பார்த்து எள்ளி நகையாட வைத்திருக்கிறது.

இன்று எம்மத்தியில் திருமணச் சடங்குகள் யாவும் வைதிக மணமுறைச் சடங்குகளாகும். இந்த முறையானது தமிழினத்தின் பாரம்பரியம் அன்று. ஆரிய இனத்தவரிடம் உருப்பெற்ற சடங்குமுறைகளே இவை.

எனவே. அவற்றை விடுத்து தமிழர்கள் தம்மை உணர்ந்து மானமுள்ள மனிதர்களாகத் தலைநிமிரச் செய்யவும் தமிழராக வாழச் செய்யவும் எமது தனித்துவமான தமிழ் மொழியில் திருமண நிகழ்வு இங்கு நடத்தப்படுகிறது.

இது பிராமணர்களையோ புரோகிதர்களையோ தனிப்பட்ட முறையில் வெறுப்பதற்காகச் செய்திருக்கின்ற நிகழ்வல்ல - என்று தெரிவித்தார்.

இந்தத் திருமண நிகழ்வுகளை ஒழுங்கமைத்திருந்த தமிழ்ச் சங்கச் செயலாளர் வே.பரமநாதபிள்ளை உரையாற்றும்போது கூறியதாவது:-

இந்தத் திருமணம் புதியமுறையில் நடைபெறுவதாக எண்ணிவிடாதீர்கள். இதுதான் பழையமுறை. இது முற்றிலும் தமிழருக்கே உரித்தான திருமண முறை ஆகும். முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ.விசுவநாதம் அவர்கள் தமது வாழ்நாளில் இவ்வாறு 6 ஆயிரத்துக்கும் மேற்பட்ட திருமணங்களை நடத்தி வைத்துள்ளார்.

எனவே. எமது தாய்மொழியில் நடைபெறுகின்ற இதுபோன்ற திருமண நிகழ்வுகளுக்கு ஆதரவளிக்கவேண்டியது அனைவரதும் கடமையாகும் - என்றார்.

சரி. இனியென்ன வாசகர்களே! உங்கள் வீடுகளிலும் தமிழ்த் திருமணம் தானே.........!

# மிஸ்டர் 'கிளீன்'...

(II பக்கத் தொடர்ச்சி)

கூறியிருக்கிறார்.

ஒக்போர்ட் கலாநிதிப் பட்டம் பெறுவதற்காக இந்தியாவின் வெளிநாட்டு ஏற்றுமதி பற்றிய ஆராய்ச்சி நூல் ஒன்றை எழுதினார்.

பிற்காலத்தில் டில்லி பொருளாதாரக் கல்லூரியில் பொருளாதார ஆசிரியராகப் பணிபுரிந்தார். மத்திய வங்கியின் கவர்னராகப் பணிபுரிந்த அவர். அரசாங்கத்துறையில் பல்வேறு மட்டங்களில் பதவிகளை வகித்துள்ளார். நிதி அமைச்சராகவிருந்த காலத்தில் இந்தியாவை வங்கரோத்து நிலையில் இருந்து காப்பாற்றியவர் என்ற புகழைப் பெற்றார்.

இந்திய மேல்சபையின் ஒரு சாதாரண உறுப்பினராகவே இருந்து வந்தார்.

சாதாரண உடைக்கும் பச்சைக்காய்கறிகளும் அவருக்கு அதிக விருப்பம். காரம் மணம் நிறைந்த உணவுகளில் அவருக்கு விருப்பமில்லை என்று அவரது உறவினர்கள் கூறுகின்றார்கள்.

ஏழை மக்களைப் பற்றி அவர் அதிகம் கவலைப் படுபவர். அவர்களின் பொருளாதாரத்தை மேலோங்கச் செய்வதெப்படி என்றே சிந்திப்பார் என்று சகோதரர் கூறுகிறார்.

பிரதம மந்திரி பதவி ஏற்கும்படி ஜனாதிபதியால் அழைக்கப்பட்டதன் பின்னர் நிருபர்களுடன் பேசிய மன்மோகன்சிங் நாட்டை பொருளாதாரச் சீர்திருத்தத்தின் ஒரு முன்மாதிரியாக உருவாக்க விரும்புகின்றேன்; கீழ் நிலையிலுள்ள ஏழை எளியவர்களுக்கெல்லாம் சந்தர்ப்பங்கள் கிடைக்க வழி செய்யப்படும் என்றார்.

சூர்ஜிட்சிங்கும் மற்றும் இரு சகோதரர்களும் மன்மோகன்சிங் பதவியேற்பதைப் பார்க்க புது டில்லி போகவிருக்கிறார்கள். இது எங்கள் எல்லாருக்கும் பெருமைதரும் ஒரு நிகழ்வு என்று கூறினார் அவரது சகோதரி நரீந்தர் காவுர்.

# இளைஞர் சிந்தனையைத் 'தின்னும்' தென்னிந்தியச் சினிமா வன்முறை

**பாலியல் வக்கிரகங்களோடு வன்முறையை நியாயப்படுத்தல் பாணியில் வெளிவரும் சமீபத்திய இந்தியத் திரைப்படங்கள் பல இந்தியச் சமூகத்தை 'ஏப்பம்' விட்டுக்கொண்டு இப்போது நம்மில் பாய்ந்திருக்கின்றன. இதனால் நமது சமூகத்திலும் பெண்கள் சின்னத்திரைக்கு முன்னால் கண்ணீர் விட்டுக்கொண்டிருக்க, இளைஞர்கள் சந்திகளில் சினிமா கதாநாயகர்கள் ஆகிவிட்டிருக்கின்றனர்.**

இதோட அடங்கிப் போயிடுவினம்...... இப்படித்தான் அதில நிண்ட அதிகமான பெரியவர்கள் பேசிக்கொண்டிருப்பது என் காதில் விழுந்தது. இளைய சமூகத்தின் இன்றைய போக்குமீது இருந்த அளவுகடந்த கோபம் அவர்களை அப்படிப் பேச வைத்திருக்க வேண்டும் என நினைக்கிறேன். அந்தச் சனக்கூட்டத்தின் நடுவில் யாரோ ஒருவன் கொலையுண்டு போய்க் கிடந்தான். சனங்களில் யாரும் அவனுக்காக அனுதாபப்பட்டதாகத் தெரியவில்லை. நியாயமான கொலை என்றும் பழிதீர்த்தல் என்றும் தண்டனை என்றும் பேசிக்கொண்டிருந்தனர்.


கதாநாயகர்கள் ஆகிவிட்டிருக்கின்றனர்.

சிறுவயதிலேயே பாடசாலையை விட்டுக் காரணமின்றி இடைவிலகும் மாணவர்கள் தொகையும் பாடசாலைக்கு ஒழுங்கின்றி வரும் மாணவர் தொகையும் அதிகரித்து வருகின்றது. இந்த நிலையே நாளடைவில் வன்முறையான இளைஞர் உருவாக்கத்திற்கு காரணமாகின்றது.

முற்பட்ட சில காலங்களை விட இப்போது சிறு வயதிலேயே குடிப்பழக்கத்திற்கு உட்படும் பலரைக் காணமுடிகிறது. சந்திகளிலும் மதுபானச் சாலைகளிலும் 18 வயதுக்குக் குறைந்த அநேகரைக் காணமுடிகிறது. இவர்களின் குடிப்பழக்க

சார்ந்த ஒவ்வொரு பதவியும் தாங்கள் இந்த வன்முறைக்கலாசார, உருவாக்கத்திற்கு எவ்வாறு காரணமாய் இருக்கிறோம் எனச் சிந்திப்பதாக இல்லை. என்பதும், சிறுவர்கள் ஆயுதக் குழுக்களில் சேர்கிறார்கள் என்று கூச்சல் போடுகிற சர்வதேசத் தொண்டு நிறுவனங்கள் கூட சிறுவர்களே ஆயுதம் தயாரிக்கிறார்கள். தங்களுக்குள் வெட்டிக்கொள்கிறார்கள் என்பதை கணக்கில் போட்டுக்கொள்ளவில்லை என்பதும் விமர்சனத்துக்குரியவை.

சமூக அபிவிருத்தி பற்றி பேசும் இந்த அமைதிக் காலத்தில் நிச்சயமாக வன்முறைப் போக்கு பிடுங்கியெறியப்பட வேண்டும். இளைஞர்களுக்கான



இது எப்படியாயினும் யாழ்ப்பாணத்தில் இப்போது கொலைகளும் மர்மச் சாவுகளும் அதிகரித்து விட்டன. எந்தத் தேவைக்காகவும் 'வாள' எம்மை ஆட்டிவைக்கத் தொடங்கிவிட்டிருக்கிறது. தந்தை மகனை வெட்டுவதும் மகன் தந்தையை வெட்டுவதும் காற்றுவாக்கில் வந்து போகும் சாதாரண செய்தியாகிவிட்டது. குடும்பத் தகராறுகளே கொலைகளாக முடியும் கீழ்நிலை உருவாகியிருக்கிறது. மிகவும் பிற்போக்கான மனநிலையுடன்



எமது இளம் சமூகம் உருவாகிவருகிறது. ஆயினும் இதற்கெல்லாம் பெரியவர்களும் பொறுப்பாளிகள் என்பதையும் மறுத்துவிட முடியாது.

இந்த வன்முறைக் கலாசாரம் எவ்வாறு எமது பிரதேசத்தில் சாத்தியமாயிற்று என்பதே இன்று எல்லோர் மனங்களிலும் தோன்றும் விடையறியாக் கேள்வி. வாழ்தல் மீதே நம்பிக்கையின்றி போரும் இடப்பெயர்வும் இழப்புக்களுமாய் மன இறுமாப்புக்களைக் கூட கைவிட்டு மரங்களின் கீழும், பொலித்தீன் குடிசைகளிலும் இன்னும் பாடசாலை, பொதுமண்டபத் தாழ்வாரங்களிலும் குந்திருந்தபடி வெறும் தேநீருக்கே கொட்டாவி விட்ட சோகங்களையெல்லாம் எப்படி ஒரேயடியாய் மறந்து போனோம்? இப்படி உருமாறிப் போனோம்??

இந்த வன்முறைக் கலாசாரம் தானாக உருவாகிய ஒன்றல்ல எம்மீது ஆதிக்கத்தினால் திணிக்கப்பட்ட போரின் ஒருவடிவம்; சமூக கட்டுமாணத்தைச் சிதைத்து எம் இலட்சியத்தை மழுங்கடிக்கும் உளவியல் போர்முறை. எனவேதான் நாம் விழிப்படையவேண்டியிருக்கிறது. இந்தப் போரிலும் நாம் வென்றாகவேண்டியிருக்கிறது.

**- கு. லக்ஷ்மணன் -**

உண்மையில் பாலியல் வல்லுறவுகள், விபசாரம், போதைப்பொருள் பாவனை, கசிப்பு உற்பத்தி என்பன கட்டுக்கடங்காத நிலையில் வளர்ந்து விட்டன. விசமிகள் திட்டமிட்டே இவற்றைத் தூண்டி விடுகின்றனர்.

சினிமாவின் தாக்கம் புற்றுநோய் போல உள்ளேயிருந்து இப்போது தாக்கத் தொடங்கியிருக்கிறது. தென்னிந்திய சினிமாக்களின் கட்டுடைத்த வருகை, இளைஞர்களின் சிந்தனையை தின்று விட்டுள்ளது. சுயம் பற்றிய பிரக்ஞை அற்றவர்களாய், நிர்வாணமாய் அலையும் வக்கிரம் கொண்டவர்களாய் மாறியிருப்பது அருவருப்பானது. முழுச் சமூகத்துக்குமே தலைக் குனிவைத் தந்திருக்கின்றது.

பாலியல் வக்கிரகங்களோடு வன்முறை நியாயப்படுத்தல பாணியில் வெளிவரும் சமீபத்திய இந்தியத் திரைப்படங்கள் பல இந்தியச் சமூகத்தை 'ஏப்பம்' விட்டுக்கொண்டு இப்போது நம்மில் பாய்ந்திருக்கின்றன. இதனால் நமது சமூகத்திலும் பெண்கள் சின்னத்தி[illegible] கண்ணீர் விட்டுக் கொண்டிருக்க இளைஞர்கள் சந்திகளில் சினிமா

மும் அதற்கு அடிப்படையான விட்டேற்றியான போக்கும் இவர்களை இலகுவாகக் கலாசாரப் பிறழ்வான பழக்கங்களுக்கு இட்டுச் செல்கின்றன. கசூரினா பீச்சில் கடந்த சில வாரங்களாக இளைஞர்களின் அட்டகாசம் தாங்கடியாமல் இருப்பதாக மக்கள் விசனப்படுகிறார்கள். பெண்கள் மீதான பாலியல் வக்கிர எண்ணங்களே இத்தகைய நடவடிக்கைகளுக்கு அடிப்படைக் காரணமாக அமைகிறது. இத்தகைய கீழ்த்தரமான எண்ணங்களை உருவாக்குவதிலும் தீவிரமடையச் செய்வதிலும் தென்னிந்தியச் சினிமாவுக்கு முக்கிய பங்குண்டு.

கடந்த சில வருடங்களாகவே 'காங்க' என்ற சொல்லுக்கு யாழ்.நகரில் தனி மரியாதை ஏற்பட்டிருக்கிறது. இளைஞர்கள் சினிமாப் பாணியில் தனது 'காங்கின' பெயரைச் சொல்வதில் தமக்கிடையே பெருமைப்பட்டுக் கொள்கிறார்கள். தீனா, அமர்க்களம் என்ற பெயர்களில் மட்டுமன்றி சில தனிநபர்கள் பேர்களிலும் சில குழுக்கள் இயங்கி வந்ததை எல்லோரும் அறிவார்கள் இவர்களது அடாவடித்தனங்களை செய்தியாகப் பத்திரிகைகளில் படிக்கிறபோது இந்தக் குழுக்களும் அவர்களை உருவாக்கிய மறைமுகத் தீய சக்திகளும் மகிழ்ந்து போயிருந்தன இத்தகைய குழுக்கள் ஆள்கடத்தல், கொலை, கொள்ளை, கற்பழிப்பு என்பவற்றுடன் தேச விரோதக் காட்டிக்கொடுப்புக்களையும் செய்தார்கள் என்பது பலரும் அறிந்த விடயம்.

செல்லப்பிள்ளைகளில் உள்ள அளவற்ற பாசத்தை வெளிக்காட்ட வெளிநாட்டுப் பணத்தில் மோட்டார் சைக்கிள் வாங்கிக் கொடுத்து விடுகிறார்கள் பெற்றோர். ஒரே நிறத்தில் ஒரேவகை மோட்டார் சைக்கிள்களை வாங்கிவிடும் இளைஞர் குழுக்கள் ஆலயத்திருவிழாக் காலங்களிலும் பொது இடங்களிலும் சனக் கூட்டத்திலும் செய்கின்ற 'சாகசங்கள' சினிமாத்தனமாகவே இருக்கின்றன. A-9 பாதை திறப்பிற்குப் பின்னர் கூடிவிட்ட வெள்ளை வான்கள் தற்போது ஆள்கடத்தலுக்குப் பயன்பட்டிருப்பது யாழ்.மக்களின் இதயத்தை அதிர வைத்த செய்தி. பெண்பிள்ளைகளும், பெற்றோரும் பயமுறுததல்களுக்கும் கத்தி வெட்டுகளுக்கும் இலக்காகி வரும் செய்திகளே தினமும் பத்திரிகைகளை நிரப்புகின்றன.

கடந்த ஒரு மாத காலத் தினசரிகளை புரட்டுகிற போது யாழ்ப்பாணத்தின் சட்டம், நீதித்துறை பற்றிய கேள்வி எழுகிறது. நாட்டின் அமைதிக்காகவும் இறைமைக்காகவுமே உருவாக்கப்பட்ட படைகளும் பொலீஸாரும் பெருமளவில் யாழ்ப்பாணத்தில் இருக்கிறார்கள். நீதிமன்றங்கள் இயங்குகின்றன. ஆயினும் அடாவடித்தனமான உள்ளூர் இளைஞர்களைக் கட்டுப்படுத்த முடியவில்லை என்பது எந்த சிந்தனையுள்ள மனமும் ஏற்றுக் கொள்ளாத ஒன்று.

[illegible]இலையில் வெறுமனே வன்போக்குக் கொண்ட இளை[illegible]களை குற்றம்சாட்டும் ஒவ்வொரு துறை

தொழில் வாய்ப்புகளும், பொழுதுபோக்கு அம்சங்களும் உரிய முறையில் உருவாக்கித்தரப்பட வேண்டும். இவை சிந்தனையாக மட்டுமன்றி கோரிக்கையாகவும் பல இடங்களில் உள்ளன. இவற்றை அரச அதிகாரிகள் தமது பதவியுயர்வுக்கான பரீட்சைகளில் மட்டுமே ஆமோதிக்கின்றனர் என்பதுதான் சாபக்கேடு.

இன்றைய உலகு வன்முறையற்ற தொடர் பாடல் பற்றியே அதிகமாகப் பேசிக்கொள்கிறது. எமது சமூகம் அந்தத் தேவையை அதிகமாய் உணர்ந்துள்ளபோதும் சாத்தியப்பாட்டிற்கான இயலாமைக்குள் இருந்து இன்னமும் மீண்டு கொள்ளவில்லை. இந்த நிலையில் இன்றுள்ள வன்முறைக் கலாசாரத்திற்கு பெற்றோர், ஆசிரியர் உட்பட முழுச் சமூகமுமே பொறுப்பாளிகள் என்பதை மறுக்க முடியவில்லை. பெரியவர்களுடைய இயலாமைகளே பிள்ளையின் மனதில் இத்தகைய கடும்போக்கிற்கு அத்திவாரமிட்டு விடுகிறது என்ற உளவியல் கருத்தையும் இங்கு கவனிக்க வேண்டியிருக்கிறது.

அண்மைக்காலமாக வீதி விபத்துக்களைத் தொடர்ந்து பெரும் களேபரங்கள் இடம்பெறுவது ஒரு சம்பிரதாயமாகிவிட்டது. இராணுவ வாகனங்கள் விபத்துக்குள்ளானபோது பெரும் பதற்றமே நிலவிய காலங்கள் உண்டு. வீதியின் போதாமையும் வாகனங்களின் அதிகரிப்பும் மட்டுமன்றி சாரதிகளின் அனுபவமின்மைகளே எல்லா விபத்துக்களுக்கும் காரணமாய் இருந்தன. தற்போது தனியார் பஸ் வண்டி ஒன்று மக்கள் பார்த்திருக்க தீ மூட்டிக் கொளுத்தப்பட்டு சாம்பராகிப் போயிருக்கிறது. இவை ஏதாவது கலவரங்களை உருவாக்கிவிடும் நோக்கம் கொண்ட சில குழுக்களால் மேற்கொள்ளப்படுகிற நடவடிக்கைகள். உண்மையில் வாகனங்கள் ஒவ்வொன்றுமே அதன் சாரதிக்கு வாழ்க்கை. தன்

உயிர்போல அதைப் பராமரிப்பவன் அவன். அத்தகைய வண்டி தீ மூட்டப்படுவது ஒரு கொலைக்குச் சமமானதே.

இந்த அடிப்படையில் றக்கா வீதியில் கிடந்த சடலத்தின் அருகில் காணப்பட்ட எல்லாளன் படையின் கடிதத்தில் குறிப்பிட்டுள்ள எச்சரிக்கைகள் கவனத்தில் கொள்ளப்படவேண்டியவை. ஆட்சியில் பலமானவர்களுடன் ஒட்டியிருக்கும் சில தேசவிரோதிகள் இருக்கிறார்கள். கடந்தகால மயிர்கொட்டிகள். இப்போது வண்ணாத்துப்பூச்சிகளாக உலாவரும் அவர்களும் கூட எச்சரிக்கப்பட்டிருக்கிறார்கள். எப்படியெனினும் மக்கள் ஆட்சியில் நெற்றிக்கண் திறப்பினும் குற்றம் குற்றம் தானே.

கட்டுரையை எழுதி முடிக்கிற போதும் எங்கோ ஒலிபெருக்கியில் கேட்கிறது.



*"திருப்பாச்சி அரிவாளைத் தீட்டிக்கிட்டு வாடா வாடா*
*சிங்கம் பெத்த பிள்ளையின்னு தெரியவேணும் வாடா வாடா*
*போர்தானே நம்மஜாதி பொழுதுபோக்கு...."*
!!!! ☆

## இந்தியப் பிரதமராக....

(I ஆம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தார். அமையப்போகும் புதிய ஆட்சிக்கு இன்றியமையாத பக்கபலமாக இருக்கின்ற இந்திய இடதுசாரிக் கட்சிகளான சி.பி.எம்., சி.பி.ஐ. ஆகியனவற்றின் தலைவர்களைச் சந்தித்த சோனியா காந்தி மன்மோகன் சிங் பிரதமராகுவதற்குரிய ஆதரவை திரட்டிக்கொடுத்துள்ளார். 1990 களில் இந்தியப் பொருளாதாரம் திறந்த பொருளாதாரச் சந்தை முறைமையைத் தழுவத் தொடங்குவதற்கான சீர் திருத்தங்களை அன்று நிதியமைச்சராகவிருந்த மன்மோகன் சிங் மேற்கொண்டபொழுது இந்திய இடதுசாரித் தலைவர்கள் மிகவும் கடுமையான விமர்சனங்களை முன்வைத்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

### இந்திய பங்குச் சந்தையின் மதிப்பு அதிகரிப்பு

இந்தியாவின் பங்குச் சந்தை 'யார் பிரதமர்' என்ற கேள்வியினால் தடுமாறியது. சோனியா பிரதமர் பதவியை மறுத்ததனால் பங்குச் சந்தையில் பங்குகளின் மதிப்பு இறங்கியது. முதலீட்டாளர்கள் குறிப்பாக வெளிநாட்டு முதலீட்டாளர்கள் சற்றுத் தலைகுழம்பினர். எனினும். அவர்களுக்கு மிகவும் இனிப்பான செய்தி கிடைத்தது. ஒரு தாராண்மைவாதியான மன்மோகன்சிங் திறந்த சந்தைப் பொருளாதாரத்துக்கு மிகவும் சார்பான முறைமையில் இந்தியப் பொருளாதாரத்தைக் கட்டி வளர்க்க முனைவார் என்பதில் சர்வதேச முதலீட்டாளர்கள் மகிழ்ச்சிகரமாகவுள்ளனர். அவர் பிரதமராகிறார் என்ற செய்தியை அறிந்ததும் இந்தியப் பங்குச் சந்தையின் மதிப்பு அதிகரிக்கத் தொடங்கியுள்ளது.

மேலும். பல பொருளாதாரச் சீர்திருத்தங்களை மேற்கொண்டு இந்திய மக்களுக்கான வேலைவாய்ப்புக்களை போதியளவில் உருவாக்கப் போவதாக உறுதியளிக்கும் மன்மோகன் சிங் - 21 ஆம் நூற்றாண்டு இந்தியாவின் நூற்றாண்டு என்றும் பிரகடனப்படுத்துகிறார். ☆

(முற்பக்கத் தொடர்ச்சி...)

வெளிக் கொணர்வதற்கு உந்து சக்தியாக இருந்தனர். அது தனது சேவையை நன்கு ஒழுங்கமைத்து செயற்படுகின்றது.

தற்போது எமது மண்ணில் ஏற்பட்டுள்ள சமாதான சூழ்நிலையை அடுத்து எமது வீரர்கள் தேசியப் போட்டிகளில் பங்குபற்றக் கூடிய நிலை தோற்றுவிக்கப்பட்டுள்ளது. இந்தச் சூழ்நிலையை நன்கு பயன்படுத்தி ஏனைய வீரர்களும் தமது திறமைகளை வெளிப்படுத்தி தேசிய அணியில் இடம்பிடிககவேண்டும்.

இதன் மூலம் எமது மக்களுக்கும், மண்ணுக்கும் பெருமைகளைச் சேர்ப்பதோடு தமிழனால் எதனையும் சாதிக்க முடியும் என்ற செய்தியை சர்வதேசத்திற்கும், இலங்கை அரசிற்கும் உணர்த்த வேண்டும்.

தற்போது வெற்றியீட்டிய இந்த நான்கு கனிஷ்ட வீரர்களின் வெற்றிப் பயணம் தொடர வேண்டும். அதற்கு அவர்களுடைய பயிற்சியாளர்கள் துணைபுரிய வேண்டும்

இன்று வெள்ளி, வெண்கலப் பதக்கங்களைப் பெற்றவர்கள் எதிர்காலத்தில் தங்கப் பதக்கத்தை வெல்ல வேண்டும். அதற்கு அனைவரும் அவர்களை ஊக்கப்படுத்தும் ஊக்கிகளாக இருப்போம்.

*-வஸந்தன்*












# தேசிய மெய்வன்மைப் போட்டிகளில் யாழ். வீரர்கள் ஈட்டிய சாதனைகள்

கனிஷ்ட தேசிய மெய்வன்மைப்போட்டியில் பங்குபற்றிய மூவர் தாம் பங்குபற்றிய போட்டிகளில் வெற்றி பெற்று யாழ் மாவட்டத்துக்குப் பெருமை சேர்த்துள்ளனர்.

இலங்கையிலுள்ள அனைத்து மாவட்டங்களிலும் உள்ள கனிஷ்ட வீர வீராங்கனைகள் பங்குபற்றிய கனிஷ்ட தேசிய மெய்வல்லுநர் போட்டிகள் அண்மையில் கொழும்பு சுததாஸ விளையாடரங்கில் இடம்பெற்றன.

இதில் யாழ்.மாவட்டத்திலிருந்து சுமார் 20 வீர வீராங்கனைகள் பங்குபற்றினர்.

இவர்களில் ஆண்களுக்கான தடை தாண்டல் போட்டியில் பங்குபற்றிய சென்.பற்றிக்ஸ் கல்லூரி பழைய மாணவனான எம்.சஞ்சீவ் இரண்டாமிடத்தைப் பெற்று யாழ். மாவட்டத்திற்கு வெள்ளிப்பதக்கத்தை வென்று கொடுத்துள்ளார்.

அதேபோல் உயரம் பாய்தல் நிகழ்வில் பங்குபற்றிய மகாஜனாக் கல்லூரி மாணவன் எஸ்.கமலமோகன் மற்றும் முப்பாய்ச்சல் நிகழ்வில் வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியைச் சேர்ந்த எஸ்.தயாளினி ஆகிய இருவரும் மூன்றாமிடங்களைப் பெற்று வெண்கலப் பதக்கங்களை வென்றுள்ளனர்.

அதேபோல இப்போட்டிகளில் பங்குபற்றிய கிளிநொச்சி அக்கராயன் மகாவித்தியாலய மாணவி. சி.தாரணியும் மூன்றாமிடத்தைப் பெற்று வெண்கலப் பதக்கத்தை வென்றுள்ளார்.

இந்தப் போட்டியில் சுமார் 15 வருடங்களுக்குப் பின்னர் யாழ்.மாவட்ட வீர வீராங்கனைகள் நிகழ்த்தியிருக்கும் முதல் சாதனைகள் இவையாகும்.

இலங்கை தேசிய மெய்வல்லுநர், மற்றும் கனிஷ்ட மெய்வல்லுநர் ஆகிய போட்டிகள் ஒவ்வொரு வருடமும் கொழும்பில் நடைபெற்று வருகின்றன. இதில் இலங்கையில் உள்ள சகல மாவட்டங்களையும் சேர்ந்த வீர வீராங்கனைகளும் பங்குபற்றி தமது திறமைகளை வெளிக்காட்டி தாம் சார்ந்த மாவட்டங்களுக்குப் பெருமையைத் தேடிக் கொடுப்பதோடு தமது உச்சத் திறமையின் அடிப்படையில் இலங்கைத் தேசிய அணியிலும் இடம் பிடித்தனர். ஆனால் வடக்கு-கிழக்கு மாகாணத்தில் இடம் பெற்ற யுத்தக் கொடூரங்களினால் இந்தப் பகுதிகளிலுள்ள மாவட்டங்களைச் சேர்ந்த வீர வீராங்கனைகள் தேசிய மட்டப் போட்டிகளில் பங்குபற்ற முடியாது போனது. குறிப்பாக கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த வீரவீராங்கனைகளே இதனால் பெரிதும் பாதிக்கப்பட்டனர்.

போக்குவரத்துப் பிரச்சினை மற்றும் பாதுகாப்பு கெடுபிடிகள் ஆகிய காரணங்களால் இந்த மாவட்டங்களிலுள்ளவர்கள் தேசியப் போட்டிகளுக்குச் செல்வதில்லை. அவ்வாறான ஒரு சூழ்நிலையிலும் இப்போட்டி களில் பங்குபற்ற வேண்டும் என பல கஷ்டங்களுக்கு மத்தியில் கொழும்பு சென்றா லும் அங்குள்ள அதிகாரிகளும் வீரர்களும் இவர்களுக்குப் புலிமுத்திரை குத்தி அவர்களை போட்டிகளில் பங்குபற்ற விடாது தடுத்த சம்பவங்களும் நடந்துள்ளன. அவசரகால சட்டத்தின் கீழ் கைது செய்து சிறைகளில் அடைக்கப்படும் முயற்சிகளும் நடந்தன.

இதனால் தேசிய விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்றும் எண்ணங்களை எமது வீரர்கள் மூட்டைகட்டி வைத்தனர். தேசிய அணியில் இடம் பிடிக்கக்கூடிய பலவீரர்கள் எமது மண்ணில் இருந்த போதும் மேற்குறிப்பிட்ட கெடுபிடிகளால் அது நிறைவேறாமல் தமது திறமைகளை தத்தமது மாவட்டங்களுக்குள்ளேயே வெளிக்காட்டவேண்டிய நிர்ப்பந்தம் காணப்பட்டது.

இதனை உணர்ந்த தமிழீழ விடுதலைப்புலிகள் போராட்டத்தின் ஒருபடி வளர்ச்சியாக தமிழீழ விளையாட்டுத்துறையை உருவாக்கி எமது வீரர்களின் திறமைகளை

(மறு பக்கம் பார்க்க...)

